பதிவு நம்பர் 2041

# KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |


வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

| தாலை 3. | ஈரோடு, விபவ ஸ்ரீ சித்திரை மீ 10உ (22—4—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 52 |
|---|---|---|

இனாம்! இனாம்


முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

டிடக்டாவ்
அல்லது
துப்பு இரகசியம்
அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன் மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம.


இத்துடன் பல கலர்களால் தயாரித்த படக்காட்சியின் 4 அழகிய போட்டோ படங்களுடன் கூட கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி., மதராஸ்.

டேபில் டைம்பீஸ் இனாம் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்

(1916 வரு ஸ்தாபிக்கப்பட்டது).

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும், தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இன்ஜினியரிங்வர்க்ஸ்,
வேபேரி, மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக்
விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0, தபால் செலவு 0—6—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

சாரலிவேலி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்;

ஸ்ரீ சர்து இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை

கணித சோதிடம்

பரிகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று எளிதில் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்விக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொருட்படலன்னை விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக மேலாவது கடிதம் எழுதும்போதாவது தெரிவியுங்கள்.

கே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சல்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அகன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, கை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஓடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்றதென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதராஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

# 'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிறட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

# முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.

முந்துங்கள்!

விலை ரூ. 3-8-0 தான் ரூ. 3-8-0 தான்

110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி



சாமான்களின் விவரம்.

18 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா 1; 18 காரட் ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1; அழகிய தந்த சீப்பு 1; மடிப்புள்ள கத்தி 1; நேர்த்தியான கத்தி 1; காமினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பேன்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12: மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கி புட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸபர் படங்கள் 12; அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 110 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு 3—8—0. P. K. மூர்த்தி கம்பெனி
தபால் பெட்டி 119, மதராஸ்.

## தமிழ் புக்கீப்பிங்.

விலை ரூபாய் 1.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப்பதிவு, இரட்டைப்பதிவு இரண்டு பாகங்களுமடங்கியிருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையுமுடையது. வியாபாரிகள், மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தேவி ஆஸ்ரமம்,
திரௌபதையம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

## புதிய கம்பளி, போர்வைகள் ரட்டுகள்.

எங்களிடத்தில், டிராவலிங் (Rugs) ரட்டுகள், சிங்கிள், டபிள், பார்ப்பதற்கு ரங்காயும், பான்சியாயும், சுற்றிலும் பூபோட்டதாயும், 60 X 90 அங்குல சயிசில் ரூ. 6—8—0 முதல் ரூ 25 விலை வரையில் இருக்கின்றன. மலை கூலியாள்களுக்கு வேண்டிய கருப்பு கம்பளிகளும் இருக்கின்றன. வேண்டிய சரக்குகளுக்கு கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

ஷா. தஞ்சிராவர்சந்த்,
தாரிவால் ஏஜன்வி,
சிக்கபேட்டை, பெங்களூர் சிட்டி.

# 'மனுஸ்மிருதி பாட்டி கதையாய் பழம் பண்டமாய்' பாழாக வில்லையே!

கைவல்ய சாமியார் எழுதுவது

மனுநூலைப்பற்றி நான் எழுதின வியாசத்திற்கு ஸ்ரீ ஜோதி பி.ஏ. என்பவரால் 'தமிழ்நாடு' பத்திரிகையில் ஒருமறுப்பு எழுதப்பட்டிருக்கிறது. "நான் மனு நூலோடு கோபமாகப் போராடுவதாகவும் பாட்டி கதையாய்ப் பழங்கதையாக் குப்பையில் ஒதுக்கப்பட்ட மனுநூலைக் கிண்டிக்கிளறி மணம் பார்ப்பவர்கள் பார்க்கட்டுமென்றும்" ரோம், கிரீஸ் யூதர் முதலியவர்களின் பழங்காலத்துச் சட்டத்தை நான் பார்த்திருந்தால் மனுவைக் குற்றம் சொல்லமாட்டேனென்றும், மனு உண்டான காலத்தில் அநேக நன்மைகள் உண்டாயிற்றென்றும் கண்டிருக்கிறது. மனுவோடு சண்டைபோடும் மத்தியில் சிபார்சுக்கு வருகிறவர்களுக்குச் சமாதானம் சொல்லும் வேலையே இப்பொழுது எனக்கு வந்திருக்கிறது. மனுதர்ம சாஸ்திரம் பழைய காலத்திலெழுதின பழங்கதைதான். இப்பொழுது சமூகத்தின் மத்தியிலிருந்து துன்புறுத்தும் புதுக்கதையாகயிருக்கிறது என்பதையும் சிறிது பழையதாய்ப் போய் விட்டதோ என்று சந்தேகப்பட்டதையும் "குடி அரசால்" பழைய கதையாய் விடுமோ என்று நினைத்தும், பெரிய உத்தியோகஸ்தர்கள் முதல் சாதாரணப் பார்ப்பனர்கள் வரையிலும் அதை நிலைநிறுத்த முயற்சி செய்ததும், எங்கள் முயற்சியில் தன் காடு பிறர்காடு தெரியாமல் வந்து விழுகிறவர்களையும் எடுத்துக்காட்டுகிறேன். எல்லாம் எடுத்தெழுத இந்த வியாசத்தில் இடமில்லை. எதை யார் சொன்னாலும் சமூகமே அதன் அதன் நியாயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்கள் மநுநூலைஅழுகிப்போன பண்டமென்று தள்ளிவிட்டதாகத் 'தமிழ்நாடு' பத்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அப்படியே நினைத்துக் கொள்ள எழுதலாம். அனுபோகமான பிரத்தியட்சத்தில் அப்படி இல்லை. இதை "குடி அரசு" அநேகதடவை எடுத்துக் காட்டியிருக்கிறது. பொது ஜனங்களின் கடவுள் வழிபாடு, மதப்படிப்பு, குரு பிரசாதம், குருக்கள் கட்டு, புரோகிதர் கிரிகை, ஆசார அனுஷ்டானம், யாத்திரைத் தீர்த்தம், தேர் திருநாள், கலியாணம், சீமந்தம், கிருகப்பிரவேசம், வரும் பிணி, வந்தபிணி, வாராப்பிணி, வயிற்றில் வராக் குழந்தை, வந்த குழந்தை, பிழைக்கும் குழந்தை, உண்ணுதல், உடுத்தல், படுத்தல், பாடசாலை, படித்துறை, சத்திரம், பாயிற் படுத்தல், பாடை ஏறுதல், ஏறின பதிமூன்றுநாள், கருமாந்திரம், மற்ற நாள் பிண்டம், வருஷதிதி இவைமுதலிய சகலகாரியங்களையும் ஸ்மிருதிகளின் ஆணையின்படியே நடக்கவேண்டும் என்று சொல்லிப் பிறருடைய ஏவுதலின் படியே வழக்கப்பட்டு அதன் படியே தமிழர் கூட்டத்தில் நித்தியம் நடந்து வருவது பிரத்தியட்சமல்லவா?

மனுதர்மத்தைப் பழைய அழுகிப்போன பண்டமென்று சொல்லுகிறார்களானாலும், பி. ஏ. பாஸ் பண்ணினவர்களானாலும், "அதை இன்று ருசி பார்ப்பது பிசகு" என்று சொல்லுகிறவர்களானாலும் மனுச்சட்டத்தை அழிப்பதும் ஏசுவதும் எளிதென்று எங்களைக் குற்றம் சொல்லுகிறவர்களானாலும், அதைத் தெரிந்திருக்கிறோமென்கிறவர்களானாலும், ரோமா புரிச் சட்டமும், கிரேக்க நூலும் யூத பழைய ஏற்பாடு படித்தவர்களானாலும், இந்து நூலான பழுத்த பழங்களான மனு சாஸ்திரத்தைப் போற்றிக் கும்பிட்டுச் சாஸ்திர தயவு பெற்றவர்களானாலும், இவர்கள் எல்லோரையுமே சேர்த்து தெருவில் போகிற ஒரு சிறுவன் கூட இவர்கள் மீது சூத்திரன் என்னும் இழிவான பதத்தை வீசி எறிகிறான். அவை இவர்கள் மனதில் ஒட்டாவிட்டாலும் இவர்களின் சட்டையின் வாற்புறத்தில் ஒட்டிக் கொண்டு அவிழ்க்க முடியாமல் அவசியமான இடத்தில் மனம் நொந்து நாணிவரும் என் கூட்டத்தாரை அடிமையாக்கியும் ஆக்கிக்கொண்டுமிருக்கும் மனுசட்டத்தின் பேரில் எனக்கு ஏன் கோபம் வாராது? கல்வி, செல்வம், பூர்வீக நாகரீகம் இத்தனையிலும் மேற்பட்டு நிற்கும் கூட்டத்தாரை வேசிமகன், அடிமை, ஆசாரமில்லாதவன் ஒழுக்கமில்லாதவன் என்று சொல்லி அதுவே மத ஒழுக்கமென்றும் உலக சட்டமென்றும் கடவுளைக் காட்டி அனுபோகத்திலும் நடந்து வருவதை எவன் நினைத்தால் கோபம் வாராது? வசை மொழி வந்தால் தான் என்ன? ஆனால் என் வியாசம் படிப்பவர்கட்குத் தான் வசை மொழியிருப்பதும் இருக்காததும் தெரியும்.

அநேக கோவில்கள், சத்திரங்கள், வேத பாடசாலைகள் இத்தனையும் செய்து தஞ்சாவூரில் பார்ப்பானின் உயர்விற்கே காரணமாயிருந்த தஞ்சாவூர் ராஜாக்கள் சூத்திரனானதும் சென்னைப் பிரபு ஒருவருக்குப் பாப்பாரப் பெண்ணிடம் பிறந்த குழந்தைகளின் பாக வியாஜ்ஜியத்தில் அவரைச் சூத்திரனாக்க நடந்த ஏற்பாடும் மனுஸ்மிருதியல்லவா? அதை அழுகிப்போயிற்று என்று சொல்லுவதின் அர்த்தமென்ன? கோர்ட்டில் வரும் தாயபாக வியாஜ்ஜியத்தில் வரும் வருணபேதங்கள் எந்த நூலிலிருந்து? சட்டசபையில் உத்தியோகப்பட்டிகை படிக்கையில் சூத்திரன்என்று படித்தார்களே! குப்பையில் ஒதுக்கியிருந்தால் படித்திருப்பார்களா? ரோம்-கிரீஸ் சட்ட மெல்லாம் படித்த கல்கத்தா வாத்தியாயர் துவாரில் பாப்பான் ஒழிய எல்லாரும் சூத்திரர்கள் என்று தீர்மானம் பண்ணினார்களே அவை எந்த சட்டத்திலிருந்து? 'ராமர் மனு நீதி தவறாதவர், பரதனுக்கும் சுக்கிரீபனுக்கும் ராமர் மனுதர்மத்தை உபதேசம் செய்தார், தானும் மனுநீதி தவறாமல் நடந்ததற்கு சூத்திரன் கடவுள் வணக்கம் செய்ததற்கு அவன் தலையை வெட்டினார்' என்று ராமாயணம் சொல்லுகிறது. ராமர் நமக்காக நடந்து காட்டவந்தவரென்றும் அவர் நடப்பது போலவே நாமும் நடக்கவேண்டுமென்றுமல்லவா`உபதேசமும் செய்யப்பட்டிருக்கிறது. வீடு வீடாய் ராமாயணமுமிருக்கிறது. பஜனைக்கோ குறைவில்லை. அப்படியிருக்கையில் மனுவை எப்படிக் குப்பையில் ஒதுக்கினதாகச் சொல்லலாம்? புராணத்திற்கு ஸ்மிருதி தானே பிரமாணம்? மனுச்சட்டத்தைப் பழைய சட்டத்தில் சேர்க்கவே இவையனைத்தும் ஒழிய வேண்டுமென்று 'குடி அரசு' சொல்லுவதை பின்பற்றாவிட்டாலும் குறுக்கே வந்து விழுவதில் வரும் லாபமென்ன?

நூற்றுக்கணக்கான வருஷங்களாக ஏற்பட்ட பயிற்சிக்குப் பின் நாம் ஸ்திரமான ஒரே மாதிரியில் உண்டு உடுத்து குளித்துக் கும்பிட்டு நடக்கும்படி ஆரிய முன்னோர்கள் நம்மை அவ்வளவு மூட வழக்கத்தில் கட்டுப்பட்டிருக்க ஒழுங்காகவும் விலக்க முடியாமலும் பயிற்றுவித்திருக்கிறார்கள். பலன் யாதெனில் நாம் மெல்ல மெல்ல வெறும் எந்திரங்களாகி விட்டோம். ஜீவன் நம்மிடத்தினின்றும் வெளியே போய் விட்டது. நாம் 'ஆம்' என்றோ, அல்லது 'இல்லை' என்றோ சொல்லாத--முன்னோர்கள் சென்ற வழியிலேயே சென்று கொண்டிருக்கின்ற—கடைசியில் அழுகி மரிப்பதற்குத் தயாராகி--ஆலோசனைக்குள்ள ஸ்வதந்திர சக்தியை யெல்லாம் இழந்து விட்ட அசையும் யந்திரங்கள் மாத்திரமாயிருக்கிறோம். யூதருடைய பழைய சட்டமான நெஞ்சாணி அடிப்பது கிறிஸ்து சட்டத்தால் நின்றதும் நாக்கையும் மூக்கையும் அறுத்துக் கடப்பாரையைக் காய்ச்சி தொண்டையில் அடிக்கும் மனுச்சட்டம் வெள்ளைக்கார சட்டத்தில் நின்றாலும், சைவத்தில் தேறி வைஷ்ணவத்தில் வழுவாது வேதாந்தத்தில் வேறுபடாத தமிழன் யாராயிருந்தாலும் 'சூத்திரன் சூத்திரன்' தானே. எவ்வளவு இழிவான பாப்பானாயிருந்தாலும் 'பாப்பான் பாப்பான்' தானே. சட்டசபையிலிருந்தாலும் 'பஞ்சமன் பஞ்சமன்' தானே என்கிற மனுச்சட்டமும் ஆதிதிராவிட கனவானை காஸ்பாவின் கிளப்பில் மெம்பராகாமல் கருப்பு பந்து போட்ட எண்ணமும் இருக்கும் வரையில் சீறி விழாமல் எப்படியிருக்க முடியும்?

கனம் ஜோதி பி. ஏ. சொல்லுவது போல் கிரீஸ் யூதச்சட்டங்களோடு மனுச்சட்டத்தையும் ஒத்துப்பார்க்க எனக்குப் போதுமான மேனாட்டு பாஷையில் திறமையில்லாவிட்டாலும் மனுச்சட்டத்தையும் நம் தேச நடத்தையையும் ஒத்துப் பார்த்தால் அதன் உண்மை பிரத்தியக்ஷத்திலிருக்கிறதே. அரேபியர்களின் வாளின் உதவி பாரசீக நாகரீகத்துடன் சேர்ந்து பூர்வீக கிரீஸ் தேசத்தினுடைய ஞானமும் கல்வியும் எடுத்துக்கொண்டு ரோமில் பிரவேசித்து அங்கு சமத்துவத்தை நிலை நிறுத்தி அங்கிருந்து அலை ததும்பி வழிந்தோட அதைப்பிரஞ்சு ஜாதியார் வாரியுண்டு மனிதனை மனிதனிடத்தில் காட்டின விரோதத்திற்கு அறிகுறியாகயிருந்த பாஸ்டில்லி என்னும் கோட்டையை இடித்து அதிலேயிருந்துண்டு இராஜாவைக் கொன்று தொலைத்து ஐரோப்பா முழுவதும ஜன சமூகமெல்லாம் ஸ்வதந்திரம் சமத்துவமென்னும் பிரவாக நீர் எல்லா இடமும் பாய்ந்து செழிப்படைந்து அந்த நீர் ஜப்பான் கரையை மோத அவர்களும் அதை உண்டு பழைய வழக்கங்களான சுவர்களை ஒரே இரவில் இடித்துத் தள்ளிச் சமத்துவம் ஸ்வதந்திரம் என்னும் கூச்சல் போட அக்கூச்சலைக் கேட்ட கமால் பாஷா வென்னும் துருக்கி வீரன் அதைப்பிடித்து அங்கு வைத்து வளர்த்து மதத்திற்கும் ராஜாங்கத்திற்கும் சம்மந்தமில்லை யெனத் தீர்மானம் பண்ணினதைக் கேட்ட ஆப்கன் அமீர் அதைப் பிடிக்க உலக மெல்லாம் சுற்றுகிறார். நாம் யாரும் சுற்றிப்பிடித்துக் கொண்டு வாராமலே அவை நம் தேசத்திற்கும் ஒத்துழையாமையாக வந்து உலாவிற்று. பழைய மனுச்சட்டம் எங்கு போய் விடுமோ என்று அதை அடித்துத் துரத்தி விட்டோம். இதுவரையிலும் நமக்கு நிச்சயமாகத் தெரியும். நாகரீகத்திற்கு வித்தாயிருந்த மூர் ஜாதியாரும் சீன குருவான கன்பூஷஸும், பழைய சீஷரும் கிறிஸ்துக்கு முன்னிருந்த யூதர்களையும் இவர்கள் சட்டங்களையும் அதிலுள்ள குற்றங்களையும் நான் ஆராய்வதைவிட இப்பொழுது நேருக்கு நேராக இருக்கும் ஞாயமில்லாத ஏற்பாட்டையும் அதிலுள்ள கொடுமைகளையும் ஒத்துப்பார்ப்பதே நன்மையுண்டு பண்ணுமென்று நினைக்கிறேன்.

பார்வைக்குப் பலமுள்ளது போல் தோன்றும் காரணத்தால் அழிப்பதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து மற்றெல்லா தேசத்து மத நம்பிக்கைகள் தற்கால பௌதீக விஞ்ஞான சாஸ்திரப் பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளியாகி வருவதும் மத தம் கொள்கைகளே உண்மை எனச் சாற்றி வந்த சமயவாதிகளின் கக்ஷிவாதங்கள் சின்னாபின்னமாகத் தகர்க்கப்பட்டு காற்றில் பறந்தோடுகின்றதும் இக்காலத்து செய்யப்படும் புராதன தத்துவ ஆராய்ச்சி என்னும்சம்மட்டி யடிகளால் பலவகைப் பட்ட பண்டைக்காலத்து மூடப்பிடிவாதங்களெல்லாம் மொத்துண்டு மண்பாண்டம

இதன் தொடர்ச்சி 22 ம் பக்கம் பார்க்க

# பெண்களின் பரிதாப நிலைமை.

ஓர் பேண்ணினல்லாா எழுதுவது.

அநேக காலமாய் மானிட ஜென்ம மெடுத்த இரு வகுப்பினருள் ஸ்த்ரீகளெனவும் புருஷர்களெனவும் இவ்வித அமைப்பு இயற்கையாய் உலகத்திலிருந்தே வருகிற தென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. முதலில்கெர்ப்ப காலத்தில் கருவில் ஆண் பெண் எதுவாயிருந்த போதிலும்கெர்ப்பம்அடைந்தஸ்த்ரீகளிடத்தில்யாதொரு வித்தியாசமும் ஏற்படுகிறதில்லை.பிரசவ அவஸ்தையிலும் அப்படியே. குழந்தைகள் பிறந்த பிறகு அதைப் போஷிக்கும் வழிகளில் ஆண் குழந்தை ஒருவித பரிபாலனமும் பெண் குழந்தை வேறு விதமான பரிபாலனமும் அடைகின்றன என்பது நம்மவர்களுக்கு நாம் விரித்துரைப்பது மிகையாகு மென்று விடுத்தனம்.

இப்படியே அநேக காலமாய் ஸ்த்ரீ ஜாதிகளுக்கு சுதந்திரமே கூடாதென்றும் எப்பொழுதும் அவர்களை அடிமையாக்கிக் காலில் மிதித்து அவர்களைத் தலை யெடுக்க வழியில்லாமல் தொன்று தொட்டுச் செய்துவரும்கொடுமைகளை ஆயிர நாவு படைத்தவராலும் எடுத்துரைத்துரைப்பது அசாத்தியமென்றால் பேதையாகிய யான் அதைச் சொல்ல முன்வருவது விந்தையே. முதலாவது நம் ஆதித் தமிழ் நாயக மாகிய திருவள்ளுவர் "கண்ணுடைய ரென்பர்கற்றோர்முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றுசொல்லியிருப்பது நம்மவர்களில் அநேகருக்குத் தெரிந்தவிஷயமே.இதன்பொருளையோசிக்குங்கால்ஆண் பெண் என்ற இருவகுப்பினருக்கும் கல்வி பொதுவானதே தவிர வேறல்ல. அப்படியிருந்தும் ஆண்மக்களே படிக்கவேண்டு மென்றும் பெண்மக்கள் படிக்கக் கூடாதென்றும் நம்மவர்களில் பெரும்பாலர் எண்ணுகிறார்கள்.உயர்தரக் கல்வி பெண்களுக்கு அவசியம் என்று ஏற்பட்ட காலத்து நடந்த சண்டை சச்சரவுகளுக்கு எல்லையேகிடையாது. அப்படியிருந்தும் அவைகளைச் சகித்துக் கொண்டு தற்காலம் இருக்கும்படியான ஒரு நிலைமை வரையில் பெண்கல்வியை கொண்டு வந்தமகான்களை நாம் தினந்தோறும் துதிக்க கடமைப்பட்டுளோம். அதைக் கெடுக்க தற்காலம் சில புண்ணிய ஆத்மாக்கள் தோன்றி வியாசங்கள் மூலமாயும் நாவல்கள் வழியாகவும் சிறகச் சிறக வெளியிடுகின்றனர். அவைகளைப் பார்த்த நான் என் மனதுடன் எவ்வளவு வாதாடி அந்தவருத்தத்தை அடக்க முயன்றும் பயன் படாமல் எழுத முன் வந்தேன்.

நிற்க, ஸ்த்ரீகளுக்கு சுதந்திரமே ஜென்மம் எடுத்ததுமுதல் மரணபரியந்தம் கிடையாது. எப்படியென்றால்பிறந்ததுமுதல் பன்னிரண்டு வயது வரை தாய்தகப்பனுடைய கட்டுப்பாட்டிலும் பிறகு தன் புருஷனுடையவரைக்குட்பட்டும் அதன் பிறகும் இருக்கும் பட்சத்தில் தன் மகனுடைய சொற்படியும் ஒரு பெண் நடக்கவேண்டு மென்பது மனுசட்டம். இப்படி சுதந்திர மென்பதேயில்லாமல் ஒரு பெண்மகள் தன்னுயுள்பரியந்தம் அடிமையாகவேயிருந்து பின்னடையும்பயன் யாதோ அறிகின்றிலம். இவ்வுலகில் ஸ்திரிகளுக்கு மாத்திரம்எண்ணிறந்த கட்டுப்பாடுகள் வேதசாஸ்திர புராணாதிகளில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதே யொழிய புருஷர்களுக்கு அவ்வளவு நிபந்தனையிருப்பதாகத் தெரியவில்லை.

மூதலாவது பிர்மாவின் முகத்தில் பிறந்ததாகச் சொல்லிக் கொள்ளும்பிராமணர்கள் எவ்விதமான பஞ்சமா பாதகத்தைச் செய்த போதிலும் சந்தியாவந்தனம் மாத்யான்னம் என்று சொல்லும்படியான இரு வித கர்மாக்களில் அவர்கள் பாவத்தை அப்போதைக்கப் போதேநிவர்த்திசெய்துகொள்வதாக சாத்திரங்களில் சொல்லப்படுகின்றது. இப்படியிருக்க ஸ்த்ரீகள் தங்களுக் கேற்படுத்தப்பட்ட விதிகளில் சற்று மறந்து தவறுதல் ஏற்படுமாயின் அவர்களுக்கு இவர்களைப் போல் அவ்வளவு சிறிய குற்றத்தையும் இவ்வளவு சுலபத்தில் நிவர்த்தி செய்ய யாதொரு மார்க்கமும்கூறப்பட்டிருப்பதாகத்தெரியவில்லை.வசிஷ்ட வாமதேவாக்களின் மரபினர் என்று சொல்லிக் கொள்கிற பிராமணர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட விதிகளில் பெண்களுக்கு ஒருவித விமோசனமும் சொல்லப்படவில்லை.

முற்காலத்திய ஓர் சம்பவத்தை நினைக்க பெருநகைப்பை யுண்டாக்குகிறது. அதாவது தெய்வீகத்தன்மையடைந்த வித்வான்களில் ஒருவராகிய நம் ஔவையார் பெண்பாலராயிருந்தும் சகவாசதோஷத்தாலோ தாம் இன்ன பிறவியென்பதை மறந்தோ அல்லது தன் போலிய வித்வான்களுக்குப் பயந்தோ "தையல் சொற்கேளேல்" என்று சொல்லியிருக்கிறார்.இதையோசித்துப்பார்த்தால் அவர்கள் கூறிய அநேக நீதிகளே பயனற்றதாக ஆகிவிடும். நம்மில் ஒருவராகியஅவர்களே சகவாசதோஷத்தால்பெண்களுடைய சௌகரியங்களைக் கவனியாதுசொல்லிப்போந்தனரெனின் யாம்மற்றவர்களைக் குறித்துச்சொல்வது அறிவின்மையேயாம். அத்துடனில்லாமல் தம்முடன் பழகிவரும் ஏனையோருடைய அபிப்பிராயத்தை பொட்டியே ஒரு செய்யுளும் பாடியிருக்கின்றனர். அதுவருமாறு:- "பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானல் எத்தாலுங்கூடியிருக்கலாம் சற்றேனும்ஏறுமாறாக நடப்பாளேயாமாகில், கூறாமற்சந்நியாசங்கொள்" என்றும் சொல்லியிருக்கிறார் இவ்விதமாகவேதன் தலைவிக்குச் சரியாய் நடந்து கொள்ளாதஆண்மகனுக்கு எவ்விதமான நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பது எனக்கு இதுபரியந்தம்யாதொரு நூலிலேனும் இருப்பதாகத்தெரியவில்லை. இவ்வித எண்ணிறந்த பக்ஷபாதமான சாஸ்திர புராணங்கள் உலகில்கையாளப்பட்டு வருகின்றன. நடவடிக்கைகளோ அதிலுங்கடுமை.எவ்விதமெனில்ஒரு புருஷனுக்கு ஒரு ஸ்த்ரீ சரிவர நடக்காவிட்டால் அவளை நீக்கிப்புனர் விவாகம் செய்யவோ மேற்கண்ட அவ்வை கூறியவாறு சந்நியாசம் வாங்கிக் கொள்ளவோ இவ்விரண்டுந் தவிர்த்து எழுத்தால் எழுதவுங்கூடாத நாகரீகமற்ற பலவழிகளில் ஆண்மகன் செய்யும் அக்கிரமத்துக்குச் சாத்திரங்களும் உலகானுபவங்களும் கணக்கின்றியிடந்தருகின்றன. ஸ்த்ரீகளுக்கோ அவ்வித சாஸ்திரங்கள் இவர்களை சரணாகதியடைந்து அம்மம்மா எம்மைக்கைவிடாதீர்கள். எவ்விதத்திலேனும் எங்களினத்தாரை காப்பாற்ற வேண்டுமென்று கதறுகின்றன. எப்படியெனில் நான்கு வேத ஆறு சாஸ்திரங்களிலும் இவர்களுக் கேற்பட்டிருக்கும் விதிகளில் சற்று தவறிவிட்டாலோ சிலர்சேர்ந்துஏதோவொரு காரணத்தை வைத்துக் கொண்டு அவதூறன சட்டு வார்த்தைகளைக் கட்டி ஊரில் பரவச்செய்தாலோ உலகமே தலைகீழாக தங்களால்மாறிவிட்டதாக நினைத்து ஆண்மக்கள் செய்யும் அட்டகாசத்துக்கு அளவில்லை. உதாரணமாக ஒரு ஸ்த்ரீ கெட்டு விட்டதாக சிலரோ பலரோ சேர்ந்து பேசுமிடத்து ஸ்த்ரீயே ஏக தேசத்தில் தவறி விட்டதாகப் பேசுகிறார்களே யொழிய அவள் ஒரு ஆண்மகனோடு சேர்ந்ததால் தான்அவ்வித கெடுதல் அவளுக்கேற்பட்டதென்பதை விசாரித்து தெரிந்து கொண்டாலல்லது இவள் பெயர் எவ்விதம் அடிபடுகிறதோ அவ்விதம் அவன் பெயர் வெளிவருவதில்லை. நடுவு நிலைமையுடைய ஒருவர் ஆணோ பெண்ணோ 'இவ்விதம் ஸ்த்ரீயைப்பற்றிப் பேசுகிறீரே, ஆண்மகனைக்குறித்தொரு பேச்சும் வரவில்லையே யென்று விசாரித்தால் 'அவனுககென்ன, என்ன சொன்ன போதிலும் ஆண்மகன். பெண்ணுக்கல்லவோ புத்தியிருக்க வேண்டும்' என்று சாதாரணமாய் உலகத்தில் சொல்லுகிற விஷயம் யாவருக்கும் யாம்சொல்லாமலே தெரிந்திருக்கலாம்.

தற்காலம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் சிறுமிகளுக்கு உயர்தரக் கல்வி கற்க சாதனங்கள்ஏற்பட்டு சிலர் கற்றுவருகிறார்கள். அதிலும் இருக்கும் இடையூறுகள் பல. அதை விரித்துரைப்பது நாகரீகமல்ல. சுருக்கமாகவாவது சொல்லாமல் விட என் மனம் இடந்தரவில்லை. கலாசாலையிற் பயிலும் மாணவர்கள் தாம் அவசியமாய் வகுப்பிலிருக்க வேண்டிய நேரம் தவிர மற்ற வேளைகளில் பெண்கள் கலாசாலையிலேயோ, அவர்கள் ஆஸ்டலிலேயோ அல்லது மற்றும் அவர்கள் போகும் இடங்களிலேயோ செய்யும் இடையூறுகளுக்கு எல்லையில்லை. இவ்விஷயம் அனைவருக்கும் தெரிந்ததே.

நிற்க முற்காலத்தில் பெண்களுக்குக் கலியாணம் செய்வது எவ்விதமெனில், முதலாவது ஜாதியினர் என்று சொல்லிக்கொள்ளும் பிராமணர் தங்கள் பெண்ணுக்கு வரன் விசாரிக்க வேண்டித் தங்கள் குடும்ப வைதீக சாஸ்திரிகளை யனுப்புவது வழக்கமாம். அதேவிதமாய் வரன் வீட்டுசாஸ்திரியிடம் பேசி கலியாணத்தை முடிவு செய்துவது வரன் ஆகிய இருவர் பெற்றோர்களுக்கும் கூட விஷயம் சரியாய்த் தெரியுமோ தெரியாததோ. அதவா மிஞ்சி அவர்கள் ஏதாவது சந்தேகத்தின் பேரில் கேள்வி கேட்டால் சாஸ்திரிகளுக்குக் கோபம் வந்து விடுமென்று பயந்து அவர்கள் முடிவு செய்த பிரகாரமே மேற்படி கலியாணத்தைப் பூர்த்தி செய்திருப்பதாகத் தெரியவருகிறது. தற்காலத்தில் இருவர் பெற்றோர்களும் ஒருவருக்கொருவர் ஏதோசில வார்த்தைகள் பேசி, விவாகத்தை முடிவு செய்கின்றனர்—ஆனால் கலியாணஞ் செய்து கொள்ளும் ஆண் பெண் இருவருக்கும் பெண் கழுத்தில் மாப்பிள்ளை தாலி கட்டும் வரை ஒருவருக்கொருவர் எவ்வித சந்திப்பும் இல்லையென்பது நிச்சயம். அதவா தெரிந்திருந்த போதிலும் ஒருவருடைய குணாதிசயங்களை மற்றவர் தெரிந்து கொள்ளும்படியான நிலைமையில் இவர்கள் இல்லை யென்றே நிச்சயமாய்ச்சொல்லலாம்—அப்படியே, மாப்பிள்ளைக்குக்கொஞ்ச உலக நடை தெரியும் காலமாயிருந்த போதிலும் பெண்ணுக்கு ஒன்றுந் தெரியாத பருவமென்றே துணிவாய்க் கூறலாம். இவ்வித கல்யாணங்கள் எண்ணிறந்தவை நடக்கின்றன. அதையோசிக்குங்கால் குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடுவதுபோல் இருக்கிறது. தற்காலம், அறிவாளிகளால் புத்தக வாயிலாகவும் பேப்பர்கள் மூலமாகவும் வெளியிடும் அபிப்பிராயங்களையொட்டியே கலியாணம் நடப்பது நலம். மேற்கண்டபடி நடக்கும் கலியாணங்களில் இராஜீகம் தெய்வீகம் என்று சொல்லப்படும் ஆபத்துகள் மணமகன் அல்லது மணமகளுக் கேற்படுமாயின் இருவரில் ஒருவருக்கு அதிர்ஷ்டமாயும் ஏனையோருக்கு நிவர்த்தியில்லாத கொடுந் துன்பங்கள் ஆயுள்பரியந்தம் அனுபவிக்கவேண்டியதாயுமிருக்கிறது. அதாவது கலியாணப் பெண் சீக்கிரத்திலோ அல்லதுசொற்ப காலம்குடும்பம் நடத்தியபிறகோ சாலகதி யடைந்து விட்டால் பிராமண வகுப்பிலுள்ள ஆண் மகனுக்கு தற்காலம் அதுவொரு பெரு அதிர்ஷ்டத்தை விளைவிக்கிறது. எப்படியெனில்முதற் கலியாணத்தில் சுமார்3000ரூபாய்க்கு குறையாமல் வாங்கி அது தவிர சீர் முதலியவைகளும் செய்யப் பெற்ற ஆண்மகனுக்கு திடீரென தன் பெண் சாதி யிறந்து விட்டால் அதேவிதமா அதிர்ஷ்டம் மீண்டும் அனுக முற்கலியாணத்தில் வாஙகினது போலவே திரும்பவும் வாங்கும்படியான சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. அவள் இறவாதிருக்கும் பட்சத்தில் இரண்டாவது அதிர்ஷ

இதன் தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க

## சர்வமதசகோதர சங்கத்தாருக்கு
# சில ஐயவினாக்கள்.

திருவாளர் ஆசிரியர் அவர்கட்கு பல வணக்கம், நான் ஒரு சைவன். வடமொழி பயிற்ச்சி இல்லாவிட்டாலும் தமிழில் கொஞ்சம் தெரியும். தினம் ஆலய சேவையில் தவறாதவன். எல்லாம் வல்ல சிவபிரானையே வழிபடுகிறவன். சாகும் வரை அவனையன்றி கடவுளாகக் கொள்ளாமலேயிருக்க உறுதி செய்திருக்கிறவன். எனக்கு கீழ் கண்ட ஐயங்கள் உண்டாகிறது. படித்தவர்கள் என்போர்களிடம் கேட்டால் இப்படியெல்லாம் கேட்கக்கூடாது நூல்களில் சொல்வதை யப்படியே நம்ப வேண்டுமென அடக்கு முறை போடுகிறார்கள். என் பகுத்தறிவோ அதனை ஒப்புக்கொள்ளவில்லை. "சர்வமத சகோதர சங்கமென" விஜயபுரத்தில் இது போது தோன்றி 1 முதல் 5 வெளியீடுகள் உலகோபகாரமாக சௌந்திரராஜன் அவர்கள் தலைமையில்செய்திருப்பதாய் 'தமிழ் நாடு' தினசரியில் கண்டேன். 5-வது வெளியீடுதான் பார்க்க நேர்ந்தது. (எல்லா வெளியீடுகளையும் எனக்கனுப்பினால் சங்கத்தாருக்கு நன்றி செலுத்துவேன்) பார்த்த 5-வது வெளியீட்டில் சைவ சமயம் உயர்வாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள எல்லா மதங்களையுங்கற்று அறிந்து சகோதரத்வங் கொண்டாடும் சங்கத்தாரே ஐயந்தீர்ப்பார் என என்னுடைய சைவசமயத்தில் தோன்றும் ஐயங்களையும் வேறு மத ஐயங்களையும் நான் கேட்டுவருகிறேன். அச்சங்கத்தார்களும் பிறவாராய்ச்சிவல்லுனரும் அளிக்கும் விடைகளையும் 'திராவிடனில்' அவ்வப்போது வெளியிட்டு என்போன்றார்களின் சந்தேகங்களை யொழிக்க வேணுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன். சர்வமத சகோதர சங்கத்தார்களும் தயவு செய்து கோபங்கொள்ளாமல் விடைகளை 'திராவிடன்' மூலமே எழுதி வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். 'சைவசமயம்' என்பது வேத சிவாகமங்களை ஒப்புக்கொண்டதும் சிவத்தை தெய்வமாகக் கொள்வதுமாகும். வேதம் பொதுவாகவும் ஆகமங்கள் சிறப்பாகவும் வல்ல இறைவனால் அருளிச்செய்யப்பெற்றதாகச் சொல்லப்பெறுவது. சிவமோ எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், எல்லாமறிபவர், கருணையே வடிவினர் என்பனவாய் உயரிய எட்டு இலக்கணங்களையுடையவரென் தக்க அறிஞர்களால் தர்க்க முறைப்படி எவராலும் வெல்லமுடியாத முறையிலும் இனி யொரு புதுக்காரணமும் இலக்கணமும் கற்பிக்க முடியாதபடி நிச்சயிக்கப்பெற்றிருக்கிறது. நம்மைப்படிக்கக்கூடாது என மறித்து பார்ப்பனர் வாயிலாய்க் கேட்கவேண்டுமென்ற ஒவ்வாத ஆணைக்குட்பட்டவை இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நாலு வேதந்தானா? அப்படியானால் வடமொழிவல்லுனர். ஷை வேதங்களில் சிவ சப்தமே காணப்படவில்லை எனவும் ருத்திர சப்தங்கூட எங்கோ மூலையில் தான் கூறப்பட்டிருப்பதாயும் கூறுகிறார்களே. திருஞானசம்பந்தரோ 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதனாமம நமச்சிவாயவே' என திருமறையில் அருளியிருக்கிறாரே. இன்னும் ஷை வேதங்களில் ரிஷிகள் என்போரும் அவர்கள் பெண் சாதிகளும் செய்ததாகப் பாட்டுகள் (ஸ்லோகங்கள்) இருப்பதாயும் சின்னாட்களின் முன்பு வடமொழியாய்ந்த ஒரு பெரியாரால் எழுதப் பெற்று கானாடுகாத்தான் செட்டியாரால் வெளியிடப்பட்ட "ஞான சூரியன்" என்ற புஸ்தகத்தில் ஸ்த்ரீ புருடர்கள் பேசிக்கொள்வதாக புருடன் யோனி (பெண்குறி) யைப்பற்றியும் ஸ்திரீ லிங்கத்தினை (ஆண் குறியை) ப்பற்றியும் புணர்ச்சிக் காலத்துண்டாம். ஒலிகளைபற்றியும் புகழ்ந்து கூறிடும் ஆபாசமான பாட்டுகளுமிருப்பதாகவும் கடவுள் படைப்புக்குட்பட்ட ஆடு, மாடு, குதிரை முதலிய பிராணிகளைக் கொன்று தேவர்களுக்கு அவிர்ப்பாகந் தருதல் பௌண்டரீக யாகமென்ற யாகசாலையிலே பார்ப்பன இளம் விதவையை பகிரங்கமாய் பிரம்மச்சாரி புணரும் கூடாவொழுக்கம் நிறைந்த சுவர்க்க பலன் தரும் 'புண்ணிய' கிரியை நிறைந்த பாட்டுகளும் புகன்றிருப்பதாய்ச் சொல்லியிருப்பவைகளை ஆதுவரை எந்த வேத பாரணர்களாவது சாஸ்திரி கனபாடிகள் என்ற வடமொழிப் பட்டதாரிகளாவது சங்கராச்சாரி என்கிற அவர்கள் குருக்களாவது பொட்டுக்கட்டு தலை யொழித்தால் ஆகமம் போச்சென்று வாரிக் கட்டிக்கொண்டு கூட்டம் போடும் வருணாசிரமக் கவலையுள்ளார் என்பவர்களாவது இதுவரையில் வேதங்களிலே இத்தகைய ஆபாசங்களில்லை என மறுத்துரைக்கவில்லையே. இப்படியிருந்தால் எந்தக் களிமண் மூளையுடையவனாயினும் எங்கள் சிவபிரான் கூறினதாக இந்த வேதங்களை ஒப்புக்கொள்ளுவானா? பொதுவாய்ச் சொன்ன வேதமிப்படியிருக்க சைவர்களுக்கே சிறப்பாயுரைத்ததாகச் சொல்லும் சிவாகமங்கள் ஈசானம் தற்புருடம் முதலிய ஐந்து முகங்களினாலே அருளிச்செய்தது இருபத்தெட்டு எனப்படுகிறதே. எல்லாம் வல்ல கடவுள் ஒரு ஆகமத்திலேயே சைவர்கட்கு வேண்டியதெல்லாம் சொல்லாமல் 28 ஆகமத்திலே சொன்னாரென்பதும் ஒரு ஆகமஞ் சொல்வதை வேறொரு ஆகமம் மறுத்துரைப்பதாகச் சொல்லப்படுவதும் என்? இவ்வளவு போதாமல் 108 ஆகமங்கள் ரிஷிகள் என்போர் சொன்னதாகவும் அதுவும் நிறைவுறாமல் விபூதிக்கும் ருத்திராக்கத்துக்கும் இப்படியே ஒவ்வொன்றுக்கும் உபநிஷத்துக்களை இயற்றியதாகவும் அதிலும் எல்லா விஷயங்களும் நிறைவில்லாமல் சிவாசாரியர்களாலே ஆகம பத்ததிகள் என (அதாவது நீலகண்ட சிவாச்சாரியார் அகோரசிவாச்சாரியார்) பல வெழுந்திருக்கின்றனவே. இவைகளெல்லாம் பகுத்தறிவுடைய அறிஞர்கள் ஒப்புக்கொள்ளும் கடவுள் (சிவபிரான்) இலக்கணத்திற்கு முற்றிலும் முரண்படுகின்றனவே. எல்லாம் வல்ல ஆண்டவன் சொன்னால் சிறிய காரியங்கள் அதாவது திருநீற்றுப் பட்டை போடுவதில் சில விடங்களில் ஒரு அங்குலமெனவும், ஒரு ஆகமத்திலே ஆறங்குலந்தான் மணிக்கட்டிலேயும் முன்கையிலேயும் போடவேண்டுமெனவும், சிலதீக்ஷை பெற நாட்கள் நிச்சயிப்பதிலும், கும்பாபிஷேகம் செய்விக்க நாள் ஏற்படுத்துவதிலும், யாககுண்டங்கள் இப்படி போடவேண்டும் அப்படித்தான் போடவேண்டும் என பிரிட்டிஷ் கோர்ட்டுகளிலே விவகாரங்கள் செய்து தீர்த்துக்கொள்ளும் படிகூட செய்திருப்பாரா? இப்போது சைவர்களெல்லாம் சிவசின்னமாக அணிந்து வருகிற ருத்திராக்கத்திலே ஒத்தை மணியை உள் கழுத்திலே கட்டக்கூட 28 ஆகமத்திலும் 108 ஆகமங்களிலும்விதிசொல்லப்படாமல் பாக்கி வைத்திருப்பாரா. இப்படியானால்இவைஎல்லா அறிவு இலக்கணமுங் கொண்ட சிவபெருமான்சொன்ன ஆகமம் என்னவா. கருணையே வடிவான சிவபிரான்: தன் படைப்புக் குட்பட்ட உயிர்களைக்கொன்று சிவாலய உற்சவத்தின் முன்னர் செய்யப்பெறும் வாஸ்து சாந்தி செய்தால் தான் தனக்குச் சம்மதமெனக் கூறியிருந்தும் இக்காலத்திலே பூசணிக்காயை உடைத்துக் குங்குமம்பூசிப்பலியென ஏமாற்றுங் கிரியை ஒப்புக்கொண்டு மிருப்பரா? தான் ஆரோகணிக்கும் (ஏறுகின்ற) ரதத்திலே (தேரில்) காவலுக்கு ஒரு கருப்புச்சாமி இருப்பதாயும் அதற்கு ஆடு வெட்டிப்பலியிட்டால் தான் இருந்த விடத்தை விட்டுப்பேருமென பார்ப்பனர் ஆட்சிக் கோவிலிலும் பரம்பரைச் சைவரெனத் தம்மைத் தருக்கி பார்ப்பானுக்கு அடுத்தபடி தாங்களே என்றும் சைவ ஒழுக்கமுடையவர்களையே இழிவுபடுத்தி தாமே பெரிய சைவர் என்போரின்தர்மகர்த்தா தத்துவ மிருக்கும் சிவாலயங்களிலும் பலியிட்டுத் தேரிழுக்கின்றார்களே. பிறகு எல்லாம் வல்லவன் என்பதனை பொய்ப்படுத்துகிறதே. இதனைப்பற்றி எப்படி சாந்தியடைவது? இத்தகைய ஆபாசங்களை கைலாய பரம்பரை யென்று தருக்கி எட்டு லட்சம் பத்து லட்ச வருமானங்களையும் பெரிய பெரிய விசேட கோவில்களின் ஆதிக்கங்களையும் விடாமல் பிடித்திருந்தும் தங்கள் தேகசுகமே முதற்கபனமென பார்ப்பனரை அடுத்து அவர்போதனையைக்கேட்டு புகழ்பெறும் மடாதிபதிகளும் அவர்களையே புகழ்ந்து பாட்டுப்பாடி அச்சிட்டு பணம் பெற்று வயிறு வளர்க்கும் மடாலயப் பக்தர்களும் வாளா விருந்தாலும் புதிதாகத் தோன்றிய சர்வமத சகோதர சங்கத்தவர்களாவது உரிய விடைகளை அறிவித்தால் பின்னர் தோன்றும் ஐயங்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீ. சதாசிவம்,
பின்னவாசல், பூவாளூர் போஸ்டு,
லால்குடி தாலுகா, திருச்சி ஜில்லா.

# அறிவிப்பு.

'திராவிடனிலும்' 'குடி அரசிலும்' நம்மிடம் பாராசர ஸ்மிருதியும், மநு ஸ்மிருதியும் கிடைக்குமென அறிவிக்கப்பட்டிருந்த படியால் பல நண்பர்கள் ஷை புத்தகங்களை அனுப்பும்படிக்கும், விலைவிபரம்தெரிவிக்கும் படிக்கும் பல கடிதங்கள்எழுதிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தனித்தனியே பதில் எழுதமுடியாமையால் மன்னித்துக் கீழே யுள்ளதை பார்த்து விபரம் தெரிந்து கொள்ளவும். மனுஸ்மிருதி தமிழில் சுலேசகமாக மொழி பெயர்க்கப்பட்டு வசன ரூபமாக 360 பக்கங்களில் அச்சிடப்பெற்று கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 2—0—0 வி. பி. யில் தருவித்தால் ரூ. 2—7—0 அடக்கமாகும். ரூ. 2—0—0 முன் பணமாக அனுப்புகிறவர்களுக்கு மட்டும் வி. பி, சார்ஜில்லாமல் புத்தகம் அனுப்பப்படும். பாராசர் ஸ்மிருதி இப்பொழுது எங்கும் கிடைக்காது; அச்சிலும் இல்லை. ஆதலால் பாராசர ஸ்மிருதிக்கு யாரும் எழுதவேண்டாம். யாரிடமாவது பழய புத்தகம் பாராசர் ஸ்மிருதி இருந்தனுப்பிவைத்தால் நாம் அதன் கிரையம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

இங்ஙனம்,
N. தெண்டபாணி பிள்ளை,
N. தெண்டபாணி பிள்ளை கம்பெனி,
புரோப்ரைட்டர், 292, சைனாபஜார்,
மதராஸ்.

## 'குடி நூல்' பத்திரிகை.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டு கிளை ஆபீஸ் ஈரோட்டிலிருந்து திருப்பூருக்கு மாற்றப்படுவதால் ஷை ஸ்தாபனத்திலிருந்து வெளிவரும் "குடி நூல்" என்னும் பத்திரிகை தற்காலிகமாக நிறுத்தபட்டிருக்கிறதென்று ஷை ஆபீஸ்-மேனேஜர் ஸ்ரீ ராமச்சந்திரய்யர் தெரிவிக்கிறார்.

# இந்து மதமும் யாகங்களும்.

மதத்தின் பெயரால் "கடவுள் வழிபாடு", என்று கருதப்படும் அக்கிரமச்செயல்கள் பலவற்றுள், 'யாகம்' செய்வதும் ஒன்று. இது ஒரு கொடிய பாதகச் செயலாகும். ஏனெனில், யாகத்தில் பிராணிகளை இம்சிக்கின்றார்கள். இது பார்ப்பனர்களால் கடவுள் வழிபாடாக நடந்து வருகிறது. அஸ்வமேதம், அஜமேதம், கோமேதம் முதலான யாகங்களில் ஒன்றும் அறியாத அபல பிராணிகளான, குதிரை, ஆடு, மாடு, முதலான ஜீவன்களைக் கொலை செய்கின்றார்கள். உலகில் கொலை செய்வதைவிட கடினகர்மம் வேறொன்றுமில்லை யென்பது மகான்களின் அபிப்பிராயம். பூர்வத்தில் மனிதனையும் பலியிடும் வழக்கம் இருந்ததாக சரித்திரங்கள் மூலம் அறிகின்றோம். ஆரியர்கள் நம் நாட்டிற்கு வருவதற்கு முன் நம் தேசம் அறிவிலும் ஒழுக்கத்திலும் சமத்வ சகோதரத் தன்மையிலும் ஜீவகாருண்யத்திலும் சிறந்து விளங்கியிருந்த தென்பதை தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களால் அறியக்கூடும். ஆரியர்களின் வருகைக்கு பின்னர் அவர்களின் பழக்க வழக்கங்கள் நம் நாட்டில் புகுந்து விட்டதால் கடவுளின் பெயரால் பலியிடும் வழக்கத்தை நம்மவர்களும் பழகி விட்டார்கள். இதை சில கோவில்களில் நிகழும் கொலைகளால் நிச்சயிக்கலாம். கடவுளின் பெயரால் நாதனில்லாத அபல பிராணிகளை யாகத்தில் பலியிடுவதின் கருத்து என்ன? என்பது தெரியவில்லை. கடவுளின் கருணைக்கு பாத்திரமாக வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் இக்காரியங்கள் செய்யப்படுகின்றன. பிராணிகளெல்லாம் அவருடைய சந்ததிகளாயிருக்கின்றன. எனச் சொல்பவர்களே அவருடைய சந்ததிகளை யறுத்து அவருக்கே நிவேதனமாகச் செய்வதென்றால் அது அவருக்கு சம்மதமாயிருக்க முடியுமா? விசேஷ புத்தியில்லாத புலி, காடி, முதலான துஷ்ட ஜந்துக்களும் தங்கள் குட்டிகளை அறுக்கவோ, அறுத்துக் கொடுத்தால் ஏற்றுக்கொள்ளவோ செய்வதில்லை. பகுத்தறிவில்லாத இத்தகைய துஷ்ட ஜந்துக்களைவிட ஞானமில்லாதவனும் துச்சமான மாம்சத்தில பிரியமுள்ளவனும், புலியைவிட பெரிய புலியாயிருப்பவனும் தானோ ஹிந்துக்களின் தெய்வம்? கடவுளுக்கு ஏதாவது காய்ச்சல் பிடித்து தேகம் மெலிந்து விட்டதா? அல்லது அவர் ஆடு, கோழி முதலான பிராணிகளை திருடித்தின்னும் குள்ளநரியின் கூட்டத்தில் சேர்ந்தவரா? எந்தக் காரணத்தைக் கொண்டு பிராணிகளை இம்சித்து கடவுளுக்காக மாம்சத்தை வைத்து ஆராதிக்கிறார்களோ? அறியோம.

யாகம் செய்வது கடவுளுக்கல்லவென்றும் தேவர்களுக்காக செய்கின்றார்களென்றும் சிலர் கூறுகின்றார்கள். தேவர்கள் அமிர்தத்தை அருந்தி ஜரைநரைகளை நீக்கினவர்களென்று புராணங்களில் காணப்படுகின்றன. ஆகையால் அமிர்தத்தை உண்டவர்கள் அசங்கியமான மாம்சத்தை உண்ணமாட்டார்கள். மேலும் மாம்ச உணவு இராக்ஷசர்களுக்கு ஏற்பட்டதென்றும் அதை தேவர்கள் உண்ணமாட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. ஓர் வேளை, பூதேவர் (பிராமணர்) களுக்கு சாப்பிடவேண்டி ஏற்பட்டால் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக அவர்கள் கடவுள் பெயரையும் மதத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு இவ்வித தந்திரங்களை செய்கின்றார்கள் என்று தான் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு பிரமாணங்களும் உண்டு. அதாவது,

சு. "த்விஜைர் போகாதைர் வேதே, தர்சிதம் ஹிம்சனம் பசோஜிஹ்வாஸ் வாதபரை, காமா, அஹிம்சைவ பரம்மத" என்று தேவி பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் கருத்து:—"விஷயங்களில் ஆசையுள்ளவர்களும்' நாக்கின் ருசியை மட்டும் கருதுவோருமாகிய சில பிராமணர்கள் யாகத்தில் பசு ஹிம்சை செய்யவேண்டுமென்று வேதத்தில் எழுதிவைத்திருக்கிறார்கள். ஆஹிம்சையைவிட உத்தம தர்மம் வேறு ஒன்றுமில்லை" என்பதாம்.

இந்த சுலோகத்தின் கருத்தை பார்க்கும் பொழுது, வேதத்தில் பார்ப்பனர்கள் அநேகம் தகாத செய்கைகளை தங்கள் சுயநலத்தைக் கருதி எழுதி வைத்திருக்கின்றார்கள் என்பது புலனாகும்.

அநேக வருடக்கணக்காக மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்து வருவதில் யாகம் செய்வதும் ஒரு தந்திரச் செய்கையாகும் மற்ற செய்கைகளால் அதிக பணம் கிடைக்காது. யாகம் செய்வதால் அதிக பணம் கிடைக்கின்றது. யாகம் செய்யவேண்டுமென்றால் ரூபாய் 5000, 10000 ஏன்? இவ்வுலகம் முழுவதையும் தானம் வாங்கவும் உரிமையுண்டு. என்னே ஏமாற்றம்! மதத்திற்கும் கடவுளுக்கும் அவமானத்தை உண்டு பண்ணும் இத்தகைய கொடுமையான செய்கைகளை வேதம்வேதமென்று எழுதிவைத்து ஜனங்களின் தனத்தை கொள்ளையடிப்பதுமன்றி அறிவையும் கெடுத்து மூடநம்பிக்கைக்குள் முழுகியிருக்கும்படி செய்துள்ளார்களே! அநியாயம்! அநியாயம்! யாகத்தில் செய்யும் ஜீவ இம்சையை ஒழிப்பதற்காக விஷ்ணு பகவான் புத்தாவதாரமாக வந்திருக்கிறார் என்று இந்துக்களால் ஒத்துக்கொள்ளப் பட்ட பகவான் புத்தர் இதற்காக எவ்வளவோ பாடுபட்டார். "அஹிம்சா பரமோ தர்ம" என்ற சிறந்த உபதேசத்தை உபதேசித்தார். என்ன பயன் ஏற்பட்டது. மகாத்மாவும் ஞானியும் தயாளுவுமான புத்தரின் மதத்தை நாட்டிலிருந்து முடுக்கி விட்டவர்களல்லவா நம் ஆசாமிகள். என்னே! ஹிந்து மதத்தின் பெருமை.

உபநிஷத்துகளில் உள்ள சாரங்களையெல்லாம் திரட்டியிருப்பதும ஹிந்துக்களால் மேலான சாஸ்திரமென்று கொண்டாடப் படுவதுமான பகவத்கீதையிலும் யாகம் முதலான ஆபாச கர்மங்கள் வற்புறுத்தப் பட்டிருக்கின்றன. கீதையை ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு உபதேசித்திருக்கிறார். அதில் "இஷ்டான் போகான், ஹிதோதேவா ன் தாஸ்யந்தே யக்ஞ பாவித:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது யாகம் செய்வோர்களுக்கு தேவர்கள் இஷ்டபோகங்களை கொடுக்கிறார்கள். (தருவார்கள்) என்பதாம். இதை கிருஷ்ணன் சொன்னாரோ அல்லது மற்று யாராவது சொல்லியிருப்பார்களோ என்பதை இங்கு ஆராய சந்தர்ப்பமில்லை. ஆனால் தத்துவமென்ன? என்பதை மட்டும் ஆராய்ந்துகொள்வது அவசியம்.

யாகம் செய்வதால் தேவர்கள் ப்ரத்யக்ஷமாய் இஷ்டபோகங்களை கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை கிருஷ்ணனுக்கு இருந்தால் யாகத்தை செய்து தேவர்களை வசப்படுத்தி, அர்ச்சுனனுக்கு ராஜ்யாதி பத்தியத்தையும் இஷ்டபோகங்களையும் வாங்கிக்கொடுத்திருக்கலாமல்லவா? அர்ச்சுனன் யுத்தம் செய்ய இஷ்டமில்லாதவனாகி காண்டீபத்தை போட்டு விட்டு தேரில் உட்கார்ந்தான், என்று சொலவப்படுகிறது. யுத்தம் செய்வதற்கிஷ்டமில்லாத அர்ச்சுனனை பலாத்காரமாக, பயங்கரமான யுத்தத்தில் இறங்கும்படியாக கிருஷ்ணன் ஏன் வற்புறுத்தவேண்டும்? அர்ச்சுனனுக்கு கிருஷ்ணன் மைத்துனராகவும் குருவாகவும் இருக்கிறார். யுத்தத்தில் வெற்றி, தோல்வி இன்னார்களுக்கென்று ஆரம்பத்தில தெரிந்துகொள்ளவும் முடியாது. ஓர் வேளை அர்ச்சுனன் இறந்துபோக நேரிட்டால் கிருஷ்ணன் தன் சகோதரியாகிய சுபத்திரையின் வைதவ்ய துக்கத்தை பார்த்துக்கொண்டு துக்கிக்கவும் நேரிடுமல்லவா? இவ்வித அபாயங்கள் ஒன்றுமில்லாத யாகத்தை செய்து காரியத்தை சாதித்துக்கொள்ள ஏன் கிருஷணன் முயலவில்லை. தேவர்களுக்கு தலைவனான தேவேந்திரன் அர்ச்சுனனுடைய பிதாவாயுமிருக்கிறார். இதனால் மற்றுள்ளவர்களுக்கு தேவர்கள் பிரத்யட்சமாவதை விட சீக்கிரத்தில் அர்ச்சுனனுக்கு வசப்பட்டு விடுவார்கள். இவ்வளவு சுலபமான காரியங்களெல்லாமிருக்க அவ்வண்ணம் செய்யாமல் யுத்தத்தை செய் என்று சொல்லி எண்ணிறந்த ஜனங்களைக் கொல்லச்செய்து ராஜ்யத்தை கைவசப்படுத்தியிருக்கிறார். இதனால் கிருஷ்ணனுக்கு யாகத்தில் நம்பிக்கை இல்லை என்று ஏற்பட்டது. இதை கிருஷ்ணன் யாகவதத்தில் யுத்தவருக்கு உபதேசிக்கிறார். அதாவது:—

சு. "தேமேமதமவிஞ்ஞாய பரோக்ஷம் விஷயாத்மக
வ்ருதா பசூன் விஹிம் சந்தி, ஹிம்சந்தே ப்ரேத்யதைஸ்துதே:"

கருத்து:—"என்னுடைய உண்மையான தர்மத்தை அறியாமல் விஷயங்களில் ஆஸக்தியுள்ளவர்கள் வீணாக யாகத்தில் பசுக்களை கொல்கின்றார்கள் பின்னால் பசுக்கள் இவர்களையும் கொல்லுவார்கள்." என்பதாம்

இதனால் கிருஷ்ணனுக்கு யாகத்தில் நம்பிக்கையில்லையென்றும் அது பெரிய பாதகமான செயலென்றுதான் கருதுவதாகவும் ஏற்பட்டது. ஆகவே கீதையிலும் சுயநலப் பூனைகள் சுயநலமான பல வாக்கியங்களை நுழைத்திருக்கின்றார்கள் என்பது வெட்ட வெளிச்சமாயிற்று.

இதன் தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க.

# பொழுது போக்கு.

'திராவிடனில்'

(கோவில் பசு எழுதுகிறது.)

கூலிவாதனுக்கும்—காலி சொக்கனுக்கும் சம்பாஷணை.

இடம்:—அரவநாடு—அகலபாதை—கலசயகால்

காலம்:—வருஷாப்திகத்திவசநாள் காலை 10 மணி.

கூலி வாதன்:—(காலி சொக்கனைப்பார்த்து) என்ன! நான் வாங்கிய மாடு—(நெல்லூர் மாடல்ல) "தமிழ் மாடு" நன்றாய் தினசரி கறக்குமென்றல்லவோ பல பெயர்களின் உதவியைக் கொண்டு தொகையை நிர்ணயம் செய்து அதிக முதல் போட்டு வாங்கினேன். ஒரு வருஷமாகியும் அதற்கு வேண்டிய புண்ணாக்கு, பருத்திக் கொட்டை, வைக்கோல், பசும்புல், கழிநீர் முதலியனவெல்லாம் திருச்சி, மதுரை, தஞ்சை சேலம், கும்ப கோணம், காஞ்சீபுரம்போன்ற இடங்களிலிருந்து தருவித்துப் போட்டேன். அம்மாட்டுக்கு நோய் வாராமல் தடுக்கவும் புஷ்டியை உண்டாக்கவும் மாட்டுவாகடத்தில் கைதேர்ந்த மிருகவைத்தியர் மூலம் ஸ்பென்சர், அடிசன், லாக்குஜன், பாரி, பின்னி முதலிய வெளிநாட்டு வியாபாரிகளிடமும், பல குஷ்டரோக டாக்டர்களிடமும் சில இல் வாழ்க்கையில் இன்பமணம் பெற்ற மர்மஸ்தானங்களையறிந்த கொக்கோக முனிவர்களிடமும் தக்க மருந்துகளை பக்குவமறிந்து வாங்கி கொடுத்துக்கொண்டுவந்தேன். நான் வாரத்திற்கு வாங்கியமாட்டையும் கவனியாது தினசரி இந்த மாட்டைக்கவனித்தும் என் இது இப்படி வர வர இளைத்துப் போகிறது? தினசரி இந்த மாட்டைக் கவனிப்பதால் வாரத்திற்கு வாங்கிய மாடும் கவனிக்கப்படாமல் வரவர களைத்துப்போகிறது. இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன?

காலி சொக்கன்:- (கூலிவாதனிடம்) காரணம் என்னவா? இவைகளுக் கெல்லாம் நமது எதிரிகள் தான் காரணம்என்றுசொல்ல வேண்டும். வேறு காரணம் ஒன்றும் என் புத்திக் குஎட்டவில்லை. தமிழ் மாட்டை தமிழ் நாட்டிலுமன்றி, வெளிநாட்டிலும் கொண்டு போய் மேய்த்துத் தான் வருகின்றேன். என்னுடைய பார்வையில் இருக்கு மட்டும் நீ அதைப் பற்றி பயப்படாதே. எதிரிகள் சூழ்ச்சியினால் கொம்புகள் குளம்புகள் முறிந்தாலும், எலும்புகளும நரம்புகளும் எங்கும் போகாமல் நான் பார்த்துக் கொள்ளுகின்றேன்.

கூலி வாதன்:—அது சரி இப்பொழுது பால் குறைவாகக் கறக்கின்றதே, காரணம் என்ன?

காலிசொக்கன்:-முன்னே வெளியூர்களில் இருந்தனுப்பிய வியாபார நிருபர்கள் எல்லாம் பிராமணரல்லாத யோக்கியமான வியாபாரிகளிடம் நல்ல புண்ணாக்கு பருத்திக் கொட்டையின் விலைகளைக் கேட்டெழுதினார்கள். நாமும் ஆரம்பத்தில் அவர்களிடமே உயர்ந்த விலை கொடுத்து நல்லதீனியாகவாங்கி நமது மாட்டுக்குப் போட்டோம். அதிக பால்கறந்தது. இப்பொழுதோ மலிவானபுண்ணாக்கு பருத்திக் கொட்டையைபோலிவியாபார பார்ப்பன கம்பெனிகளிடமிருந்துவாங்க ஆரம்பித்து விட்டோம். ஆதனால் நமது மாட்டுக்கு உடம்பு குணப்படாமல் பால் குன்றிப் போகிறது.

கூலி வாதன்:—மிருக வைத்தியரிடமாவது இதைச் சொல்லி நல்ல மருந்தை மாட்டுக்குக் கொடுக்கக்கூடாதா?

காலி சொக்கன்:— மாடு பார்ப்பனப்பனப்புண்ணாக்கைச் சாப்பிடாமல் பத்தியமாயிருந்தாலல்லோ வைத்தியர் கொடுக்கும் மருந்திற்கு அகத்தியம் பலனுண்டாகும்.

கூலி வாதன்:-மருந்து சாப்பிடும் வரையிலாவது பார்ப்பனர் சாமான்களைபத்தியமாய் பகிஷ்கரிக்கக்கூடாதா?

காலி சொக்கன்:—இப்பொழுது வைத்தியர் அடிக்கடி பத்தியம் முறிக்கப்படுவதால் மாட்டின் உடல் நிலையே கெட்டுப் போய் விட்டதென்றும், இனிமேல் பார்ப்பனர் சாமான்களை அடியோடு நீக்கி பதிவாய் பத்தியமிருக்க வேண்டுமென்றும் சொல்லுகிறாரே இது சாத்தியமாகுமா?

கூலி வாதன்:- ஐயோ! அப்படிச் செய்தால் என் ஒப்பந்தக்கூலியில் மண் விழுமே. நான் ஒரு வேலையும் செய்ய முடியாமல் தானே பார்ப்பனர்களிடம் புண்ணாக்கு ஒப்பந்த வேலையை ஒப்புக்கொண்டிருக்கிறேன். 'விடிபாமூஞ்சி வேலைக்குப் போனாலும்வேலை கிடைத்தாலும் கூலி கிடைக்காது' என்றபழமொழிக்கிணங்க எனக்கு ஒப்பந்த வேலை கிடைத்தும் ஒப்பந்தக் கூலிகிடைக்காமற் போகிறதே! ஐயையோ!! நான் என்னசெய்வேன்!! ஒப்பந்தத்தை ரத்து செய்யவும் முடியாதே! ரத்து செய்தாலும் இனிபிராமணரல்லாத வியாபாரிகள் என்னை எப்படி நம்பி கடன் கொடுத்து உதவுவார்கள்!

காலி சொக்கன்:-உண்மை தான்! இருந்தாலும் நான் ஒரு தந்திரம் செய்கின்றேன். அதை நீயும் ஒப்புக் கொள்ள வேண்டும். உடந்தையாயுமிருக்க வேண்டும். அதாவது நம இருவருடைய அயோக்கியத்தனமும் கூலி வேலையும், காலிச்செய்கையும் பட்டப்பகலென வெட்டவெளிச்சமாய் சனங்களுக்குத் தெரிந்து விட்டது. இனி அவைகளை நம்மால் மறைக்கவும் முடியாது. மறைத்தாலும் நம்புவார் யாருமில்லை. ஆனால் நமது எதிரிகளையும், நம்மைப் போல் அயோக்கியர்களென்றும், பிராமணரல்லாதார் கடைகளில் ஒப்பந்தம் பேசிக் கொண்டு வெள்ளைக்காரர் கடைகளில் சாமான்கள் வாங்குகிறார்கள் என்றும், அவர்களை பிராமணரல்லாத வியாபாரிகள் நம்பக்கூடாது என்றும் அவர்கள் சர்க்கார் தாசர்கள் அல்லது கவர்ன்மெண்ட் கங்காணிகள் என்றும் கயிறு கட்டி விட்டுவிட்டால்படித்த மக்கள் 100 க்கு 10 பேர் போக படியாத 100க்கு 90 உள்ள மக்கள் ஏமாந்து போவார்கள். அதன் பிறகு பிராமணரல்லாத வியாபாரிகளுக்கும் நமது எதிரிகளுக்கும் சந்தேகமும் சண்டையும் உண்டாகும். அச்சமயம் பார்த்து நமது மாட்டுக்கு வயித்தியமும் செய்து பிராமணரல்லாதாரின் புண்ணாக்கும் பெற்றுக் கொடுத்து பத்தியத்தையும் நிறைவேற்றி மாட்டையும் காப்பாற்றிக் கொள்ளலாம். மற்ற காரியங்களை அதன்பிறகு எதிரிகளின் நிலமையைக்கண்டு யோசித்து முடிவுசெய்து கொள்ளலாம்.

கூலி வாதன்:- என்னமோப்பா, சொக்கா! எல்லாம் உன்னை நம்பித்தான் மாடு வாங்கி உன்னிடமே ஒப்படைத் திருக்கின்றேன். அதைக் கவனிக்கும் பொறுப்பு உன்னுடையதே.

காலி சொக்கன்:—வாதா! நீ ஏன் பயப்படுகிறாய்? என்றைக்கு காலியாகிய என்னிடம் நாற்காலியாகிய மாட்டை நம்பிக் கொடுத்தையோ அன்றைக்கே நம்முடைய சுக துக்கங்கள் ஒன்றாய் விட வில்லையா! நான் எல்லா வற்றையும் பார்த்துக் கொள்ளுகிறேன். நமக்கு வேண்டியவற்றை சரியோ தப்போ, நிசமோ பொய்யோ எல்லாவழியிலும் அடைய தேவியை நம்பி முயற்சிக்கின்றேன். அவள் தாசனைக் கைவிடமாட்டாள். நீ மட்டும் நான் செய்பவற்றை ஆட்சேபியாமல் "ஆமாசாமி" என்று ஆமோதித்துவா. கூடிய விரைவில் எதிரிகளின் சூழ்ச்சியைக் கொன்று விடுகின்றேன். இதில் என் முயற்சி தோற்று விடுமானால் நமது மாட்டைஉயிருடன் தோலை உரித்து வந்த விலைக்குவிற்று விட்டு வந்த வழியே ஓடிப்போய்விடுவோம். நீயொன்றுக்கும் பயப்பட வேண்டாம். நீ ஓடும் போது நானும் கட்டாயம் ஓடித்தான் ஆகவேண்டும். (முதற்காட்சி முடிந்தது.)

---

## இராமநாதபுரம் ஜில்லா மருத்துவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

இராமனாதபுரம், மதுரை, மற்றும் இதர ஜில்லா மருத்துவர் குலத்தவர்க்கும், மதுரை மருத்துவகுல சங்க காரியதரிசிகளுக்கும் எனது வணக்கமான வேண்டுகோள்:—

முன் அறிவித்திருந்தபடி கூடிய சீக்கிரத்தில் மதுரை ஜில்லா மருத்துவர் மகாநாடு நடத்துவார்களெனத் தெரிய வருவதால் அத்துடன் இராமனாதபுரம் ஜில்லாமகாநாட்டையும்சேர்த்து நடத்த வேண்டுமென்றும் இமனாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த தாலுகா, கிராமங்களிலுள்ள மருத்துவ குலத்தவருக்கு பிரசார மூலமாய் அறிவிக்க வேண்டுமென்றும், நமது குலம் அபிவிருத்தி யடையச் செய்வதற்கும் நம் சகோதரர்கள் அனைவரும மகாநாட்டை நடத்த ஊக்கத்துடனும் முன் வரவேண்டுமென்றும், மதுரை மருத்துவகுல சங்க காரியதரிசி திரு. எம். என். சுப்பிரமணிய வைத்தியர் அவர்களும் கூடிய மட்டும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொளளுகின்றேன்.

இத்துடன் நம் தென் இந்திய மருத்துவ குலசங்க தலைவர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் மூன்றாவது மருத்துவகுல மகாநாட்டையும் நடத்துவதற்கு கூடிய சீக்கிரம் முயற்சி செய்வார்களென்று நம்புகிறேன்,

இடம், காலம் முதலிய விபரங்கள் தலைவர்களின் அறிக்கைக்குப் பின் வெளியிடப்படும்.

வீ. எம். வீரணன்,
பரமக்குடி.

## திருமலாபுரத்தில் நாடார்சமூகத்தில் பார்ப்பனீயம் வீழ்ந்தது.

பன்னெடு நாளாய் நம் பார்ப்பனரல்லா மக்களை பல துறைகளிலும் வஞ்சித்துவயிறு வளர்த்து வரும் வம்பராம் பார்ப்பனக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்குவான் பொருட்டவதரித்தநம்மாபெருந்தலைவர் ஈரோடு ஈ. வெ ராமசாமி வள்ளலின் ஒப்புயர்விலா உழைப்பின் மாட்சியால் இவ்வூர் நாடார்சமூகத்தின் பொதுமக்கள் கழகமாகிய உறவின் முறைக்கு சிதம்பரச் சேரியினின்று நின்று கொழுத்து திண்ணையில் புறண்டுருளும் தீட்சதர் என்ற குழுவினரொருவரால்பல்லாண்டுகளாக விபூதி எனும் வெண்மைச் சாம்பலும் குங்குமம் எனும் செம்மண்ணுமாய்ச் சேர்ந்து இரு தம்பிடி நிறையளவு கட்டளையென்ற களவாடுங் கொள்கையை பிரமாதமாகக் கொண்டு மாதமொரு முறை அனுப்பியுமனுப்பாமலும் வந்து வருடமுடிவில்கனத்தஉருவும்வெடிக்குந் தொப்பையுங்கொளுப்படைந்த குரலும் இன்னும் வர்ணிக்கஇயலா ஆஷாட பூதி அவதரிப்புடன் தோன்றி சாகச வார்த்தைகள் பல தங்கு தடையின்றி மொழிந்து 10 ம் 20 ஆக பலிக்கும்வரையும் பறிக்கும் பகற் கொள்ளையர்களாம் தீட்சத பார்ப்பனர்களின் புரட்டுகளைக் கண்டு தெளிந்த. பெரும் பாலோர் இவ்வாண்டில் இவர்களுக்கு ஓர் செல்லாக்காசேனுங்கொடுத்தல் கூடாதென புத்துணர்ச்சியோடு பொலிவுற்றிலங்கும் இவ்வரிய சமயத்தில் ஒரு சில பழம் பெருச்சாளிகளும் சாம்பல் பூச்சு சாத்திரிகளும் மீசையைக் கோரம்பண்ணி முப்புரிநூலணிந்த மூடத்தெங்குகளும் அந்தரங்கமாய் ஆலோசித்து சுயமரியாதைவீரர்கள் எவருங் காணுவகையில் கடந்தவருடக் கட்டளைக் கென் பொதுப் பணத்திலிருந்து ரூபாய் எழு சமீபத்தில் இவ்வூருற்ற தீட்சதரிடம் கொடுத்து விட்டனர். இவ்வரியக்கூட்டத்திற் களித்த அநியாயச்செலவைக் கேள்வியுற்றசுயமரியாதைப் பெரியார்களும் வாலிபவீரர்களும் தாங்கொணுத்துயருடன் கடந்தவியாழனன்றுகுழுமியஉறவின்முறை கூட்டத்திற்குச் சென்று பார்ப்பனர்கள் புரியும்படுகொடுமைகளையும்பிரசாதமென்னும் போல் பிய்த்து தின்னும் பிசாசுதன்மைகளையும் அங்கு கூடியுள்ள நூற்றுக் கணக்கான மக்களிடம் வெகு வெகு சாங்கோபாங்கமாய்ச் செப்பவே மக்களனைவரும் ஏகோபித்து இப்புரட்டர்களுக்கு இனி ஒரு சிறு தம்பிடியேனுங் கொடுத்தல் கூடாதெனத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இனிச்சாம்பலுஞ்செம்மண்ணும் எங்களுக்குத் தேவையில்லையென முடங்கலொன்றெழுதி சிதம்பரம் தீட்சதர் பால் போக விடுத்தனர். என்னே சு ய ம ரி யா தை எழுச்சி! என்றும் மறையா எழுச்சி! பார்ப்பனப்புரட்டர்கள் பரப்பிய பாச வலையினின்று மக்களை மீளும்படி பணியாற்றிய சுயமரியாதைப் பெரியார்களையும் வாலிப இளங்காளைகளையும் சுயமரியாதையின்சார்பாகவாழ்த்துவதுடன் இவ்வன்பர்களுக்கு நீண்ட ஆயுளுங் குன்றா ஊக்கமும் தந்தருள எல்லாம் வல்ல ஆண்டவனடி பணிகின்றேன்.

மு. க. பெருமாள், திருமலாபுரம்

## லாலுகுடி தாலூகா பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை மகாநாடு

### வரவேற்பு கமிட்டி முதற் கூட்டம்

நமது நிருபரிடமிருந்து

31-3-28 ல் மகா நாட்டு வரவேற்புக் கமிட்டி முதற் கூட்டம் லாலுகுடி திரு மிகு கோதண்டராம செட்டியார் சத்திரத்தில் கூடியது. உறுப்பினர் இருபதின்பர் வந்திருந்தனர். கடவுள் வணக்கமும் தேசிய கீதமும் பாடப்பெற்றபின் தாலூக்கா சங்கத் தலைவர் செல்வக்கணபதி செட்டியார் வரவேற்புக் கமிட்டித் தலைவர் இன்றைய கூட்டத்திற்கு வரவியலாதிருத்தலின் உறுப்பினரும் தாலூகா ஜில்லா போர்டுகளின் அங்கத்தவரும் தேவஸ்தான கமிட்டி துணைத் தலைவரும் ஆகிய திருமங்கலம் திருவாளர் சா. மீனாட்சிசுந்தர முதலியார் அவர்களை இன்றயக் கூட்டத்தலைமை தாங்கி நடத்தித்தரவேண்டுமென முன் மொழிய பொன்னப்ப செட்டியார் அடுத்து மொழிய எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பெற்று அவர் தலைமை வகிக்க அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பெற்றன.

1 மகாநாடு நடத்த அடுத்த ஜூன் மாதம் (9, 10-6-1928) சனி, ஞாயிறு இரண்டு நாட்களும் எலலாவகையாலும் சிறந்ததென முடிவு செய்கிறது.

2 வரவேற்புக் கமிட்டி உறுப்பினர் ரூ. 3 ம் பிரதிநிதிகள் ரூ 1 செலுத்தவேண்டுமெனவும, பெண்மக்களும் காணவருபவர் (விசிட்டர்)களும் எவ்வித கட்டணமுஞ் செலுத்தவேண்டியதில்லை எனவும் (தீர்மானம்) முடிவு செய்கிறது.

3 வரவேற்புத் கமிட்டி உறுப்பினர்களில் திருவாளர்கள் 1 பா கிருஷ்ணசாமி செட்டியார் 2 செல்வக்கணபதி செட்டியார், 3 பொன்னம்பலஞ் செட்டியார், 4 செல்லப்பெருமாள் நாடார், 5 சிதம்பரம் பிள்ளை, 6 ஆதிமூல வாண்டையர், 7 ஆ. பாண்டுரங்கம் பிள்ளை, 8 எல். பி. பரமசிவம் பிள்ளை, 9 சதாசிவமுத்துராஜா இவர்களை மகாநாட்டு நிறைவேற்றல் கழகத்தாராகத் தேர்ந்தெடுத்து இவர்களில் ஐந்துபேர் சேர்ந்து செய்யும் எவ்வித முடிவுகளும் எல்லா உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தக் கூடியதென முடிவு செயகிறது.

4 காரியதரிசிகள் கேட்டுக்கொண்டபடியே 'குடி அரசு" ஆசிரியர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் மகாநாட்டுத் தலைவராகவும், "திராவிடன்" ஆசிரியர் ஜெ. எஸ். கண்ணப்பர் அவர்கள் கொடியேற்றுந் தலைவராகவும் இருந்து நடத்தித் தருவதாய் அன்புடன் ஒப்பியிருப்பதைபாராட்டுவதுடன் மகாநாட்டை திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பெற்றிருக்கிற சென்னை பிரசிடென்சி ஆனரரி மாஜிஸ்டிரேட் திருமிகு கா. அலர்மேலுமங்கைத்தாயாரம்மாள் அவர்களின் கருணை நிறைந்த ஒப்பத்தை எதிர்பார்க்கிறது.

5 தாலூகா முழுவதும் மகாநாட்டையும் சுமதியக்கத்தினையும பிரசாரம செய்து தமிழர்கட்கு ஊக்கமூட்டும்படி கீழ் கண்ட அன்பர்களை ஊக்கம் புகட்டும் கூட்டத்தாராக முடிவு செய்கிறது,

திருவாளர்கள் செல்வக்கணபதி செட்டியார். 2 பொன்னம்பலனார், 3 சதாசிவமுதது ராஜா. 4 பாண்டுரங்கப்பிள்ளை. 5 எல். என். வீரபத்திர பிள்ளை. 6 எல். டி. வடிவேலு பிள்ளை. 7 எல். எஸ், நாராயணசாமி 8 கூத்தப்பெருமாள் முத்துராஜா. 9 ரெங்கசாமி முத்துராஜா. 10 எல். பி. இராமசாமி பிள்ளை. 11 எல், பி. பரமசிவம் பிளளை. 12 எல். என் குழந்தை வேல் பிள்ளை. 13 எல். என். விஸ்வலிங்கம் பிள்ளை. 14 எல். பி. கிருஷ்ண செட்டியார் 15 பி. வி. துரைசாமி பிள்ளை. 16 சஞ்சீவி முத்துராஜா

6 நிறைவேற்றல் கழகத்தார் ஆங்காங்கே வரும்போது மகாநாடு நடைபெறவும் சுயமரியாதை இயக்கம் பெரும் பயன் அடையவும் சொல்லாலும், பொருளாலும் பெரும் பேருதவி செய்விக்கும்படி பார்ப்பனரல்லாதார் எல்லோரையும கேட்டுக்கொள்ளுகிறது.

## திருமணம்.

விருதுநகரில் திருவாளர் மு. ச. பெ. செந்திக்குமார நாடார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி சங்கரலிங்கத்திற்கும், திருவாளர் ப. சி. சிதம்பர நாடார் அவர்கள் புத்திரி சௌபாக்கியவதி சரஸ்வதி அம்மாளுக்கும் விபவ வருஷம் சித்திரை மாதம் 11-ந் தேதி திருமணம் சிறப்பாக நடைபெறும்.

## கும்பகோணம்

### விஸ்வ கர்ம பொதுஜன கூட்டம்.

9-4-28ல் இந் நகருக்கு விஜயம் செய்த சென்னை கவர்ன்மெண்டு 2-வது மந்திரி சனம் எஸ். முத்தையா முதலியார் அவர்களையும், சென்னை தேவஸ்தான போர்டு பிரசிடெண்டு கனம் சூரிய நாராயண ராவ் அவர்களையும் ஸ்ரீ காமாட்சி விலாஸ வாசகசாலை அங்கத்தினர்களும் மற்ற பிரமுகர்களும் வரவேற்று வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர்.

K. பூபதி, காரியதரிசி.

## பஞ்சாங்கங்கள் தீர்ந்து விட்டன

விபவ வருடத்திற்காக அச்சடித்த சுயமரியாதைப் பஞ்சாங்கங்கள் தீர்ந்து விட்டன. வெளியிட்டிருந்தபடி 15-4-28 க்குள் நமக்குக்கிடைத்த எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. மூலமாகவும் நேரிலும் அனுப்பிவைப்போம். நாம் அச்சியற்றியதும் ஆர்டர்களைக்கவனித்தே ஆதலின் இனி வருகிற ஆர்டர்களுக்கு பஞ்சாங்கங்கள் இல்லை என்று வருத்தத்தோடு கூறுகின்றோம்.

ஒரு பஞ்சாங்கத்தை மட்டும் வி. பி. யில் அனுப்பும்படி வந்த ஆர்டர்களைக் கவனிக்க முடியவில்லை, ஏனெனில் அவர்கள் 0-7-0 அணா செலுத்திப் பெறும்படி நேரிடும் என்பதைக் கருதியே யாகும். மற்றபடி தபால் தலைகளை அனுப்பியவர்களுக்கெல்லாம் அனுப்பப்படும். தபால் எலிகளின் தொந்தரவினால் அவைகள் கிடைக்காமற்போகுமானால் அதற்கு நாம் பொறுப்பாளியல்லவென்பதை வணக்கமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.கி.

ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணிவாசகத் தமிழகம்" திருச்சிராப்பள்ளி

## கும்பகோணத்தில் யாகம்.

### கொலை! கொலை!! எட்டு ஆடுகள் கொலை!!!

சோமபானமும் செய்யப்பட்டது.

திராவிடனில் ஒரு நிருபர் எழுதுவது

திரு. தண்டாங்கோரை அப்பாதுரை தீக்ஷதர் முதலிய வர்களால் வெளியிடப் பட்டதுண்டு பிரசுரங்களின் படி சர்வதோமுகயாகம் கும்பகோணம் டவுன் எக்ஸ்டென்ஷனில் 30-3-28உ வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப் பட்டது. ஷை யாகத்திற்கு வைதீகப் பார்ப்பனர், உத்தியோகப் பார்ப்பனர் ஆசார சீர் திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளும பார்ப்பனர்கள் எல்லோரும மித்திரனில் வெளியிட்டிருந்தபடி பெரும் பான்மையாகக் கூடியிருந்தார்கள். பார்ப்பனரல்லாதார் யாக சாலைக்குள் பிரவேசிப்பது தடுக்கப்பட்டிருந்தது. ஆனதால் திரளான ஜனங்கள் வெளியிலிருந்து கொண்டு உள்ளே நடப்பதை அமைதியுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யாகத்தை நடததி வைத்த 108 ருத்விக்குகளும் ஸ்மார்த்த பார்ப்பனர்களாக யிருந்த போதிலும், வைணவ, மாத்வ பார்பனர்கள் வந்திருந்து ஆதரித்தது குறிப்பிடத்தக்கது. முதல் 5 நாட்களும் யாகசாலை சுறுசுறுப்பாக காணப்பட வில்லை. 6 வது நாள் காலை முதற் கொண்டுதான் விடாமல் அதிக வேத கோஷ்டமும் ஓமப்புகையும் காணப்பட்டது. 6 வது நாள் மாலை 4 ஆடுகள் கொல்லப்பட்டன என்னும் வதந்தி ஊர் முழுவதும் பரவி விட்டதால், 7 ஆம் நாள் திரளான ஜனங்கள் வேடிக்கை பாரக்க வந்து கூடிவிட்டார்கள், முதலில் யாகத்தினுடைய கொள்கையைப் பற்றிய வடமொழி சுலோகங்கள் சொல்லப்பட்டு தமிழில் வியாக்யானமும் செய்யப் பட்டது. அதன் முக்கியமான கருத்து என்னவென்றால், அவ்வாடுகளாகிய யாகப் பசுக்கள் பிராமணர்கள மோக்ஷமடையும் பொருட்டு தங்களுடைய பிராணனை தியாகம் செய்வதை அங்கீகரிக்கும்படியாக தேவர்களை பிரார்த்தனை செய்வதாகவும், அதனால் அந்த ஆடுகளின் தியாகங்களை இவர்கள் ஏற்றுக்கொண்டு அந்த ஆடுகளும அதைச்சார்ந்த வர்க்கங்களும் நற்கதி யடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டியது என்பதாகும்.

யாகசாலையானது நான்கு முகங்கொண்டதாகவும், ஒவ்வொரு ஓமகுண்டமும நடுவில் ஒரு ஓமகுண்டங் கொண்டதாகவும் அமைக்கப்பட்டிருந்தது. நடுவில்இருந்த ஓமகுண்டம் நீங்கலாகவுள்ள நான்கின பக்கத்தில்ஒவ்வொருஸ்தம்பம்நடப்பட்டிருந்தது. ஒவ்வொருஸ்தம்பத்திலும் ஒவ்வொரு ஆடுதாப்பை புல் கயிற்றினால்கட்டப்பட்டிருந்தது. மந்திரங்கள் சொல்லி ஓமம் வளர்க்கப்பட்ட ஆட்டின்பேரில் சில பாகங்களில நெய் வார்க்கப்பட்டது. சில சடங்குகள் செய்யபபட்ட பிறகு ஒவ்வொரு ஆடும் ஒவ்வொரு பார்ப்பனரால கொலை செய்வதாகவும், சமைப்பதற்காகவும் அந்த யாகசாலையின் வடமேற்கு மூலையில் தனியாக அமைக்கப்பட்டிருந்த அறைகளுக்கு தூக்கிக் கொண்டும் இழுத்துக்கொண்டும் போகப்பட்டது. ஆடுகள் மந்திரம் சொல்லி ஓமம் வளர்க்கும் பொழுது தாமாகவே மூர்ச்சித்து கீழே விழுந்து விடுமென சில பார்ப்பனர்களால் சொல்லப்பட்ட போதிலும், அவைகள் கொலை செய்யுமிடத்திற்குக் கொண்டு போகப்படும் வரையில் மாந்தழைகளைத் தின்றுகொண்டு நல்ல சுவாதீனத்துடன் இருந்தன. கொலை செய்யுமிடத்திற்கு கொண்டு போனவுடன் அவ்விட மிருந்த மூன்று வேளாளர்களில் ஒருவர் ஆட்டின் வாயை நூல் கயிற்றால் கட்டி குரல்வளையை அமுக்கிக் கொண்டும், ஒருவர் படுக்கப் போட்டு நாலு காலையும் பிடித்துக் கொண்டும் மற்றொருவர் கிட்டிக்கழியினால் விரையைக் கட்டி இழுத்துக் கொண்டு கசக்கியும் கொன்றுவிட்டார்கள். சில ஆடுகள் விரையைக் கசக்கின போது வேதனை பொறுக்க முடியாமல் துள்ளித்திமிறி கத்தின. பிறகு பக்கத்திலிருந்த சமையல் அறைக்கு கொண்டுபோகப்பட்டன. அவ்வாடுகளின் இடதுவிலாப்புறத்தில் பார்ப்பனர்கள்கிழித்து குடலை வெளியில் எடுத்து அதன்பேரில் படர்ந்திருந்த பேர் கொழுப்பை உரித்து சாணிபோல் கட்டப்பட் டிருந்த காரை முள்ளின் பேரில் விரித்து ஓம குண்டத்திற்கு கொண்டு போய் தணலில் நெய்யை விட்டு வாட்டி அதை கையால் எடுத்து உருட்டி கீழே இருந்த தர்ப்பைப்புல்லின்பேரில் வைத்தார்கள்.

இவ்விதம் அந்தந்த ஆட்டின் கொழுப்பை அந்தந்த ஓம குண்டத்திற்குக் கொண்டு போய் செய்யப்பட்ட பிறகு அதே பார்ப்பனர்கள் அந்த அறைக்குள் வந்து தோல், தலை, கால், எலும்பு, குடல் நீங்கலாக மற்ற பாகங்களை யெல்லாம் எடுத்து, அவ்விடத்தில் அடுப்பின் பேரில் தனித்தனியாக இருந்த நாலு பாத்திரங்களில் போட்டு பக்குவஞ் செய்து, ஓம குண்டத்திற்கு நிவேதனம் செய்து எடுத்துக கொண்டு போனார்கள். இவ்விதமே மறு நாளும் 4 ஆடுகள் கொலை செய்யப் பட்டன. 7வது நாள் சுமார் 20 தடவை பார்ப்பனர்கள சோமபானம் அருந்தினார்கள். சிலமுக்கியமான சந்தர்ப்பங்களில் பலர் புகைப்படம் எடுத்தார்கள்.

## பால்ய விவாகத் தடை

பெண்களுககு 13வயதும்.
பையன்களுக்கு 18வயதும்.

பஞ்சாப் மாகாணத்தை சேர்ந்த மாண்டி ராஜா பால்ய விவாகததைத்தடுதது வெளியிட்டிருக்கும் உத்தரவு பின் வருமாறு:—

பெண்களுக்கு 13 வயதுக்கு முன்னும் பையன்களுக்கு 18 வயதுககு முன்னும் கலியாணம் செய்யக்கூடாது. பெண்களுக்கு 13 வயது மிகவும் குறைந்த எல்லை யென்பதை நான் உணர்நதிருக்கிறேன். 13 வயதே நிரந்தர எல்லையாக இருந்து விடாது. காலக்கிரமத்தில் அனுபவத்தைக கொண்டு அது உயர்த்தப்படும. இந்தச் சட்டத்திற்கு விரோதமாகக் கலியாணம் செய்து கொள்ளுகிறவர்கள் மாத்திர மன்றி அதற்கு ஏற்பாடு செய்பவர்களும் அனுமதி கொடுப்பவர்களும் சம்பந்தப் படுகிறவர்களும் குற்றம் செய்தவர்களாவார்கள். சமஸ்தானத்திற்கு வெளியிற் சென்றுகலியாணம் செய்துவிட்டுச் சட்டத்திலிருந்து தப்பிவிடாம லிருப்பதாக அவர்களையும் சமஸ்தானத்தில் கலியாணம் நடத்தியவர்களைப் போலவே பாவிக்கப்படும். இச்சட்டம் சமஸ்தானப் பிரஜைகளின் நன்மையை உத்தேசித்தே இயற்றப்பட்டிருக்கிறது. பால்ய விவாகத்தினால் ஜனங்களுடைய தேக பலம் கெட்டுப் போய்விடுவதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆகையால் இதை நடத்தி வைப்பதில் என் பிரஜைகள் மனப்பூர்வமாக ஒத்துழைப்பார்களென்று நம்புகிறேன்:— ப்ரீ பிரேஸ்.

## 'THE NON-BRAHMIN YOUTH.'

### "பார்ப்பனரல்லா இளைஞன்"

என்ற ஆங்கில மாதாந்தரப் பத்திரிகையின் பிரதியொன்று வரப்பெற்றோம். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் பனகால் அரசரது படம் முன்னணியில் உளது; மறு பக்கம் இந்திய மாதா கையில் தராசு பற்றிச் சமத்துவம் நாட்ட நிற்றல் காட்டப்பட்டுள்ளது. முதல் கட்டுரை 'நம்மைப் பற்றியே' என்ற தலையங்கம்கொண்டுளது. அது ஒரு தரம் படித்த எவரையும் அரிய எழுச்சியையும் சுயமரியாதையையும் சுய கௌரவத்தையும், தவறுமற் கொள்ளும்படி செய்துவிடும். மாதர்களைக்கண்விழிக்கச் செய்யக்கூடிய இரண்டு வியாசம் இரு மாதரால் வரையப்பட்டுள்ளன. சமூக சீர்திருத்தத்தைப்பற்றிய ஒரு கட்டுரையும், பார்ப்பனரல்லா இளைஞர்க்குத்தனிச் சாரண இயக்கம் வேண்டிய விஷயமும் செவ்வனே கூறப்பட்டுளது. பார்ப்பனரல்லாச் சங்கங்களின் அமைப்பைப்பற்றிய விஷயமும் காணப்படுகிறது. நடையும் இனிமையான எளிய நடையே. 56 பக்கங்கள் கொண்டுள்ளது. கடிதமும் கட்டமைப்பும் மிகவும் உயர்ந்ததரமாயுள்ளது. இது கட்டாயம் பார்ப்பனரல்லா இளைஞர்களையும் நாட்டையும் ஓங்குவிக்கும் தன்மைத்தே. ஆகலின் இச்சஞ்சிகைக்கு ஆங்கிலங்கற்ற ஒவ்வொரு பார்ப்பனரல்லாரும் சந்தாதாரராகி ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள், வருடசந்தா ரூ 3—8—0.

விலாசம்:- The Non-brahmin Youth,
20, Miller Road,
Kilpauk MADRAS.

## முதன் மந்திரிகளுக்கு வரவேற்பு

நாகூர் திராவிட சங்கத்தாரும் பார்ப்பனரல்லாத வாலிபசங்கத்தாரும் ஏப்ரல்15உ முனிசிபல் இந்து பாடசாலையில் கனம் முதன் மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் M. A., B. C. L, அவர்களை வரவேற்று ஒரு வரவேற்புப் பத்திரமும் அளித்தார்கள்.

நாகை ஆதிதிராவிட மகாஜன சங்கத்தார் 14-4-28 ல் சென்னை மகாண சுகாதார மந்திரி கனம் எஸ் முத்தையா முதலியார் பி. ஏ பி. எல். எம். எல். சி. அவர்களுக்கு வரவேற்பு உபசாரப் பத்திரமொன்று வாசித்துக் கொடுத்தார்கள்.

## அம்பலூரில் திருவாளர்கள்

### ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கண்ணப்பர் தண்டபாணி பிள்ளை

அம்பலூரில் பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம் ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று திரு அர்ஜுன கவுண்டர் அவர்கள் பல நாளாகவே முயற்சி செய்து திரு நாயக்கரை வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க 8-4-28 தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் திரு கண்ணப்பர், தண்டபாணி பிள்ளை, ஆகியவர்களுடன் நாயக்கரை பல வாலிபர்கள் ஜோலார் பேட்டை ஸ்டேஷனில் வரவேற்று அங்கிருந்து கேத்தண்டபட்டி வழியாய் அம்பலூருக்கு அழைத்துச் சென்றார்கள்.

அம்பலூருக்கு சுமார் ஒரு மைல் தூரத்திலிருந்தே பாண்டு மேளவாத்தியங்களுடன் திரளான ஜனங்கள் எதிர் கொண்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஊருக்குள் எங்கு பார்த்தாலும் தோரணங்களும் சுயமரியாதை வாக்கியங்கள் கொண்ட வளைவுகளும் கட்டப்பட்டு தெருவெல்லாம அலங்கரிக்கப்பட்டு பெரிய மகாநாட்டுக்கு நடக்கும் ஆடம்பரங்களெல்லாம் செய்யப்பட்டிருந்தன. ஊர்வலத்தின்போது திரள் திரளாக பெண்களும் ஆண்களும் தொடர்ந்து வந்ததுடன பலவீடுகளில் ஊர்வலத்தை நிறுத்தி மாலைகள் போடுவதும் பெரிய திருவிழாபோல் இருந்தது. ஊர்வலம் நேரே திரு அர்ஜுன கவுண்டர் அவர்கள் சிங்காரவனத்தில் அமைக்கப்பட்டிருந்த அழகான பந்தலுக்குச் சென்றதும் ஜனங்களை கலைந்து போகும்படி கேட்டுக்கொண்டு காலை ஆகாரம் முடிந்ததும் நந்தவன பந்தலில் விவசாயிகள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு திரு நாயக்கர் அக்கிராசனத்தில் [illegible]ருக்கும் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டு திருவாளர்கள் துளசிக்கவுண்டர், தண்டபாணி பிள்ளை, கண்ணப்பர் ஆகியோர்கள் விவசாய விர்த்தியைப்பற்றி பேசிய பின் அக்கிராசனர் முடிவுரையுடன் மகாநாடு முடிவு பெற்றதும் திரு அர்ச்சுன கவுண்டர் அவர்கள் வீட்டில் பகல் உணவு முடிந்ததும் திருவாளர் அம்பலூர் கரிய கவுண்டர் அவர்கள் பங்களாவில் அம்பலூர் சமரச சன்மார்க்க சங்கத்தாரால் திரு நாயக்கருக்கு ஒரு வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

### திரு. நாயக்கரின் பதில்.

திரு நாயக்கர் உபசாரப் பத்திரத்திற்கு பதிலளிக்கும் முறையில் பேசியதின் சுருக்கம்:—

அக்கிராசனாதிபதியே சமரசசன்மார்க்க சங்கத்தினர்களே! மற்றும் இங்கு கூடியிருக்கும் அன்பர்களே!

இன்று சமரசசன்மார்க்க சங்கத்தார் வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திரத்திலடங்கிய புகழுரைகளுக்கு நான் உண்மையில் கொஞ்சமும் சிறிதும் பொருத்தமில்லாதவனாயிருந்தபோதிலும் அதன் நோக்கமானது எனது தொண்டின் தத்பர்யத்தையும் போக்கையும் தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு என்னை புகழ்வதாயிருப்பதால் மிக்க நன்றியறிதலோடும் மகிழ்ச்சியோடும் இவ்வுபசாரப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளுகின்றேன்.

எனது தொண்டைப்பற்றி பலர் ஆதரவளித்தாலும் ஒரு சிலர் அபிப்பிராய பேதப்படுவதையும் ஏதோ முழுகிப்போனதுபோல் கவலைப்படுவதையும் பார்க்கும்போது எனக்கே சிற்சில சமயங்களில் 'நாம் எதாவது தப்பான வழியில் போகின்றோமோ என்று தோன்றி கலக்க முறுவதுமுண்டு. இந்த நிலையில் தங்கள் உபசாரப் பத்திரமானது "இனி உனக்கு அப்பேர்ப்பட்ட கலக்கங்கள் கண்டிப்பாய் வேண்டியதில்லை உனது கருத்துப்படியே உனது தொண்டை தீவிரமாக செய்து கொண்டுபோ நாங்கள் உனக்கு பின் உதவியாய் இருக்கின்றோம்" என்று எனக்கு ஊக்கத்தை மூட்டி எனது தொண்டை முன்னிலும் அதிக முயற்சியுடன் செய்ய பிடரியைப்பிடித்து தள்ளுவதுபோல் இருக்கின்ற படியால் நான் அதை மகிழ்ச்சியுடனும் நன்றியறிதலுடனும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

நிற்க, அன்பர்களே இந்த சமயத்தில் சமரச சன்மார்க்க சங்கம் என்பதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகின்றேன் அது ஒரு சமயம் உங்கள் மனதிற்கு கசப்பாயிருந்தாலும் இருக்கலாம், அன்றியும் "என்னடா இவன நம்மிடத்தில் உபசாரப் பத்திரம் பெற்றுக்கொண்டு நம்மையே உடைச்சல் விடுகிறான்" ஏன் இவனுக்கு உபசாரப்பத்திரம் கொடுத்தோம்" என்பதாக தோன்றினாலும் தோன்றலாம். ஆனபோதிலும் சிலர் சமரச சன்மார்க்க சங்கம் என்பதாக பெயர் வைத்துக்கொண்டே சமரசத்திற்கு பதிலாக ஏற்றத்தாழ்வும் சன்மார்க்கத்திற்கு பதிலாக துன்மார்க்கமும் மலிந்தத்தக்க முறையில் நடந்து வருகின்றார்கள். சுருக்கக்கூறில் சமரச சன்மார்க்க மென்பது அனுபவத்தில் பிறரை ஏமாற்றி தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வதற்கும் தங்கள் சமயத்தை உயர்த்திக்கொள்வதற்கும் பயன் படுத்தப்படுகின்ற ஆயுதமே ஒழிய வேறில்லை என்றே சொல்லலாம். பொதுவாக ஒவ்வொரு மதக்காரரும் உட்சமயக்காரரும தங்கள் தங்கள் மதம் சமயம் ஆகியவைகளை சமரச சன்மார்க்கக் கொள்கை கொண்டதென்று தான் சொல்லுகின்றார்கள். ஆனால் அவரவர்கள் நடை உடை பாவனை உணர்ச்சி முதலியவைகள் வேறாகவே இருந்து வருகின்றன ஒவ்வொரு மார்க்கக்காரரும் தமது கொள்கையை ஒப்புக்கொள்ளாத ஒருவனை துன்மார்க்கியாகவே கருதுகிறார். மகமதிய மதம் சமரச சன்மார்க்கத் தன்மை பொருந்தியதானாலும் மற்ற சமயக்கடவுள்களும் கொள்கைகளும் அவர்களுக்கு சிறிதும் சகிக்க முடியாததாகவே இருக்கின்றது கிறிஸ்த்தவ மதம் சமரசசன்மார்க்கக் கொள்கையுடையது தான் என்று சொல்லப்பட்டாலும் அது வேறெந்த மதத்திலும் மோக்ஷமடைய வழி கிடையாது என்றும் மற்ற மதஸ்தர்கள் எல்லாம அஞ்ஞானிகள் என்றும் சொல்லக்கூடியதாக இருக்கின்றது. இந்து மதமும் அதன் ஒவ்வொரு உட்பிரிவும் சமரச சன்மார்க்கம் கொண்டதென்றே பறையடிக்கப் படுகின்றது. இதைப்போல ஏற்றத்தாழ்வுகளும் துன்மார்க்கங்களும் கொண்ட மதம் இது சமயம் உலகில் வேறு ஒன்றும் இருப்பதாக சொல்ல முடியாது. வைணவத்திற்கும் சைவத்திற்கும் அதனதன் கடவுள்களுக்கும் உள்ள பேதங்களும் விரோதங்களும சொல்லிமுடியாது. ஒவ்வொரு நாளும் இதில் உள்ள உயிர்க்கொலைகள் கணக்கிலடங்காது. குடியும் விவசாரமும் எட்டிலடங்காது. நிற்க சகலருக்கும் பொதுவாகவே சன்மார்க்கம் என்பது ஒரு குறிப்பிட்ட கொள்கையையுடையது அல்லவென்றே சொல்லுவேன். ஒருவருக்கு சன்மார்க்கமாயிருப்பது மற்றொருவருக்கு துன்மார்க்கமாகவே காணப்படுகின்றது. சிலருக்கு, குழந்தைகளுக்கு கலியாணம் செய்வது சன்மார்க்கம். சிலருக்கு பக்குவமான ஆண் பெண்கள் இருவருக்கும் அவரவர்கள் சம்மதப்படி கலியாணம் செய்விப்பது சன்மார்க்கம். சிலருக்கு மனிதனை மனிதன் தொடுவது துன்மார்க்கம். சிலருக்கு மனிதனுக்கு மனிதன் தொடுவதினால் குற்றமில்லை என்று சொல்வது சன்மார்க்கம். சிற்றப்பன் மகளை மணந்து கொள்வது சிலருக்கு சன்மார்க்கம் சிலருக்கு துன்மார்க்கம். அத்தை மகளைமணந்துகொள்வது சிலருக்கு சன்மார்க்கம், சிலருக்கு துன்மார்க்கம். மாடு தின்பது சிலருக்கு சன்மார்க்கம், சிலருக்கு துன்மார்க்கம். கடவுளுக்கு கண்ணு, மூக்கு கை கால், பெயர், பெண்டு பிள்ளை முதலியவைகள் வைத்து வணங்குவது சிலருக்கு சன்மார்க்கம்; சிலருக்கு துன்மார்க்கம். காலும் கையும் கெட்டியாயிருந்து நன்றாய் உழைத்து சாப்பிடக்கூடிய வாத்தடியர்களுக்குச் சாப்பாடு போடுவது சிலருக்கு சன்மார்க்கம்; சிலருக்கு துன்மார்க்கம். ஏழை எளியவர்கள், சரீர ஊனமுள்ளவர்கள், உழைத்துச் சாப்பிட சக்தியற்றவர்கள் ஆகியோருக்கு சாப்பாடுபோடுவது சிலருக்கு சன்மார்க்கம்; சிலருக்கு துன்மார்க்கம்,

எனவே இம்மாதிரி ஒருவருக்குசன்மார்க்கமாயிருப்பது மற்றவருக்கு துன்மார்க்கமாயிருப்பதை நித்திய வாழ்வில் தினம் தினம் எத்தனையோ காண்கின்றோம். ஒரு மார்க்கத்தின் முட்டாள் தனத்தையும், புரட்டுகளையும் வெளியிலெடுத்துச் சொன்னால் எப்பேர்ப்பட்ட சமரச சன்மார்க்கி என்கின்றவனும் பதில் சொல்ல முடியாவிட்டாலும் காய்ந்து விழுந்து மக்களை ஏய்க்கப் பார்க்கின்றானே ஒழிய தனது மார்க்கம் உண்மையில் யோக்கியமானதா என்பதைப்பற்றி கவலைப்படுவதே இல்லை. எனவே உலகத்தில் உள்ள எத்தனையோ மார்க்கங்களில் சமரசசன்மார்க்கமென்பது ஒன்றேயொழிய உண்மையில் எல்லோருக்கும் ஏற்ற சமரசத்தையும் சன்மார்க்கத்தையும் கொண்டது எதுவும் இல்லை என்றே சொல்வேன். உங்கள் சமரச சன்மார்க்கசங்கம் இம்மாதிரியான குற்றங்களில் சிக்காமலும் மூடநம்பிக்கை குருட்டு பழக்க வழக்கங்களாகியவைகளு

(இதன் தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க)

# இதிகாசம்.

## இராமாயணம் பாலகாண்டம்

### 9ம் கட்டுரை

திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது

விசுவாமித்திரன் தன் மனைவியையும் அழைத்துக்கொண்டு தென்திசையை யடைந்து பயங்கரமான தவத்தைச் செய்தான். அப்போது அவனுக்கு ஹவிஸ்யந்தர், மதுஷ்யந்தர், திருடநேத்ரர், மகாரதர் என்ற பெயருடைய பிள்ளைகள் உண்டானார்கள். இவ்வாறு தவஞ் செய்வதில் ஆயிரமாண்டுகள் கழிந்தபின் நான் முகன் தோன்றி அவனுக்கு "ராஜ ரிஷி" என்ற பட்டம் தந்தான். அதனால் விசுவாமித்திரன் கோபமடைந்து வெட்கத்தால் தலை குனிந்து மறுபடியும் தவம்புரிந்துகொண்டிருந்தான்.

அக்காலத்தில் அயோத்தியில் திரிசங்கு என்னும் மன்னன் ஆண்டிருந்தனன். அவன் ஐம்பொறிகளையும் வென்று நல்லவனாக இருந்தான். அவன் உடலோடு சுவர்க்கம் (தேவருலகம்) போக எண்ணினான். அதற்காக அவன் ஒரு யாகம் செய்ய விரும்பி குலகுருவான வசிட்டனை வரவழைத்து சொன்னான். வசிட்டன் "அந்தச் சங்கதி முடியா" தென்று கூறிவிட்டான். மன்னன் பின் வசிட்டனுடைய பிள்ளைகளிடம்போனான். வசிட்ட முனிவனுடைய நூறு பிள்ளைகளும் சினமடைந்து "எங்கள் தந்தையாலேயே முடியாதஇச்செயலை நாங்கள் எவ்வாறு செய்வோம்" என்றனர். திரிசங்கு அப்படியாயின் என் கருத்து நிறைவேற நான் வேறு யாரிடமேனும் செல்கிறேன்" என்றனன். அதைக்கேட்ட அவர்கள் மிகச்சினந்து "நீ சண்டாளனாகப் போக" எனச் சபித்தனர். மன்னன் சண்டாளத்தன்மையை யடைந்து கறுத்துக் கடின உருவமுடையவனாகி தலைமயிர் குறைந்து கறுத்த உடையையும், சுடுகாட்டு எலும்பு மாலையையும், சாம்பலையும், இரும்பு நகையையும் அணிந்தவனாக ஆய்விட்டான். மந்திரி முதலியோர் அவனை விட்டு ஓடிவிட்டார்கள். சண்டாள உருவடைந்த திரிசங்குவை விசுவாமித்திர முனி கண்டான். மனமிரங்கி தேர்தல் கூறி அவ்வாறானமைக்குக் காரணம் வினவினன். மன்னவன் 'சுவாமி! ஆணையிட்டுச் சொல்கிறேன். நான் இது வரை ஒரு பொய்யும் கூறினதில்லை. இனியும் கூறேன். பல யாகங்கள் செய்தேன். அறநெறி தவறாது அரசாள்வதோடு குருவுக்கும் மிகப்பணிவுடன் நடந்து வருகிறேன்" என்று கூறி நடந்த வரலாற்றையும் புகன்றனன். அதுகேட்டு முனிவன் "நான் அந்த யாகத்தை முடித்து உன்னை உடலோடு தேவருலகத்துக்கனுப்புவேன்" என்று கூறி தனது பிள்ளைகளை யழைத்து யாகத்திற்குவேண்டியவைகளை யழைத்து யாகத்திற்கு வேண்டியவைகளைத் தயாரிக்கக் கட்டளையிட்டான்.

பல முனிவர்களும் வந்து கூடினர். வசிட்ட முனிவனுடைய பிள்ளைகளும் மகோதயனென்ற முனிவனும் மட்டும் "சண்டாளனுக்கு க்ஷத்திரியன் செய்துவைக்கும் யாகத்தின் அவிசை எப்படி தேவர்களும் முனிவர்களும் உண்பார்கள்" என்று சொல்லி வாராமலிருந்து விட்டனர். அதனையறிந்த கோசிகன் "என்னை இகழ்ந்த அந்த நூறுபேரும் சாம்பலாகி விடவேண்டும். இப்போதே அவர்கள் எமவாதனை அடைந்து எழுநூறு பிறப்பில் பிணத்தைத் தின்ன வேண்டும். அருளற்ற 'என்றும் நாயிறைச்சியுண்டு' இழிகுலத்தோராய் விகாரமான பேச்சும் செய்கையும் உருவும் உடையவர்களாய்த் திரியவேண்டும். மகோதயனென்பவன் என்னை இகழ்ந்ததால் வேடனாகி பல காலம் நரகத்தில் அழுந்தவேண்டும்" என்று கடுங்கோபத்தோடும் கூறினான்.

யாகம் வெகுகாலம் நடைபெற்றது. அதன் முடிவில் தேவர்கள் அவிர்பாகத்தை வாங்கவரவில்லை. அதனால் அகப்பையை உயரத்தூக்கிக்கொண்டு கடுஞ்சினத்தோடு விசுவாமித்திரன் தனது தவ மகிமையால் சுவர்க்கம்போக மன்னனை ஏவினான். உடனே திரிசங்கு சுவர்க்கத்தை நோக்கிச் சென்றான். அது கண்ட இந்திரன் முதலிய தேவர்கள் அவனைச் சண்டாளனானதால் கீழே போகும்படி சொன்னார்கள். அதனால் திரிசங்கு கீழே நோக்கித் தலைகீழாக விழுந்தான். அது கண்ட முனிவன் அவனை உயரவே நிற்கும்படி ஏவி அங்கேயே ஓர் சுவர்க்கத்தை சிருஷ்டித்தான். அதுகண்டு பயந்து தேவர்கள் முனிவனை யழைத்து அந்த திரிசங்கு சுவர்க்கத்தையும் ஒப்புக்கொண்டார்கள். பின் யாகமும் முடிந்தது. இவ்வாறு தன்னுடைய தவத்திற்கு இடையூறு வந்ததாலே கோசிக முனிவன் அவ்விடத்தை விட்டு மேற்கு திசையை யடைந்தான். இவ்வரலாறு 57, 58, 59, 60 ம் சருக்கங்கள். இதனை ஆராய்வோம்.

விசுவாமித்திரன் தென்திசையில் தன் மனைவியோடு போய் தவமியற்றினான். அவனுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அத்தோடு ராஜரிஷி என்ற பட்டமும் கிடைத்தது. ஒருவன் மனைவியோடு காட்டில் தனியே இருந்து பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக்கொண்டு செய்யும் தவம் தானென்னே? அதைக்கண்டு வியந்து நான்முகன் தோன்றிப் பட்டம்கொடுத்ததும் மிக அழகிதே. இவ்வாறு வசிட்ட முனிவனும் தன் மனைவியோடு கூடித் தவம் செய்பவன் நூறு பிள்ளைகளைப் பெற்றிருக்கிறானென அறிகிறோம். கோதம முனிவனும் அகலிகையிடம் சதாநந்தனைப் பெற்றான் அவனே இவ்வரலாற்றை இராமனிடம் கூறுகிறான். கீழ்த்திசையையே விசுவாமித்திரன் முதன் முதல் அடைந்தானென்றும் அங்கே திலோத்தமையை இந்திரன் ஏவ அவள் மையலில் முனிவன் அகப்பட்டானென்றும் அதனால் அவன் தவம் குலைந்ததென்றும் கம்பர் கூறுகிறார். திலோத்தமை யென்ற தாசிப்பெண்ணைக் கூடுவதால் கெட்ட தவம் தன் மனைவியைக்கூடி பல பிள்ளைகளைப் பெறுவதால் கெடாது போலும். தவத்தைப் பற்றிய இவர்கள் அறிவு மிக நன்றே! கோசிகனுக்கு ராஜரிஷிப் பட்டம் கிடைத்ததைக்கம்பர் திரிசங்கு சுவர்க்கத்தின் பின் கூறுகிறார்.

திரிசங்கு குருவாகிய வசிட்டமுனிவனைத் தன்னிடம் வரவழைத்ததாக வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவனே முனிவனிருந்த இடத்திற்குச் சென்றதாகக் கூறுகிறார். வால்மீகி கம்பர்இவர்களின் குரு சீட முறை கவனிக்கற்பாலது. குரு இருக்குமிடத்திற்கு மாணவன் செல்லவேண்டியதே முறை. ஆதலின் கம்பர் மாற்றிக் கூறினர் போலும். வசிட்டன் தன்னால் முடியாதென்று கூறினான் என்று வால்மீகி கூற அதைக்கம்பர் "சுவர்க்கத்தக்கு மாண்டு போதி" என்று கூறினதாகக் கூறுகிறார்.

திரிசங்கு வசிட்ட முனிவனுடைய பிள்ளைகளிடத்துப்போனதையும் அவர்கள் சபித்ததையும் கம்பர் கூறவே இல்லை. வசிட்டனே சபித்தானென அவர் கூறுகிறார். இது வால்மீகி கூறும் கதைக்கு மாறுபட்டது. இனி கம்பர் கூறுகிறபடி வசிட்டனோ அல்லது வால்மீகி கூறுமாறு அவன் மக்களோ திரிசங்குவைச் சபித்தது சரியா என்பதை ஆராய்ந்தால் அது ஆச்சரியமாகவே இருக்கிறது. இவனை விடுத்து வேறொருவனைக் குருவாக அடைய ஒருவன் விரும்பினானால் அதற்காக அவனைச் "சண்டாளனாகு" என்று குரு சபித்தனனேல் அக்குருவின் அறிவும் பெருந்தன்மையும் இருந்தவாறென்னே? இவர்கள் பெரிய முனிவர்களாம்; இவர்களுக்குக் கடவுள் தோன்றி அருளினராம்!!

திரிசங்கு சண்டாளனானவுடன் அவன் மந்திரிகள் அவனை விட்டு விட்டு ஓடி விட்டனராம். அதன்மேல் அவன் விசுவாமித்திரனை அடைகிறானாம். கம்பர் இவ்வரலாற்றை இன்னும் இழிவாகக் கூறுகிறார். அதாவது மன்னன் சண்டாளனாகி ஊரை அடைந்ததாகவும் அவனைக் கண்டவரெல்லாரும் சீசீ! என்று இகழ்ந்தனரென்பதும் அதனால் அவன் திரும்பவும் காட்டை யடைந்து கோசிகனைச் சந்திக்கிறானென்பதுமாம். வால்மீகி முனிவர் வரலாறு, கோசிகன் மன்னனை இன்னானென அறிந்துகொண்டு நடந்த வரலாற்றைக் கேட்கிறானென்பது. இதற்கு மாறாகக் கம்பர் கூறுவது "சண்டாளா! நீயார்? உன்வரலாறென்ன?" என்று கேட்டனனென்பது.

கோசிகன் செய்த யாகத்துக்கு வசிட்டன் மக்கள் வாராதது பற்றிச் சினந்த அம்முனிவன் அவர்களை, சாம்பலாகி எமனுலகடைந்து எழுநூறு பிறப் பெடுத்து பிணத்தையும் நாயையும் தின்ன வேண்டுமென்று சபிக்கிறான். இம்முனிவர்களுடைய பெருங்குணந்தானென்னே! கம்பரோ இதற்குமாறாக அக்குமரர் வேடர்களாகச் சபித்தனரெனவும் கூறுகிறார். மகோதய முனிவனடைந்த சாபத்தைக் கம்பர் கூறுகின்றிலர்.

கோசிகன் திரிசங்குக்காகப் படைத்த சுவர்க்கத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் அந்தச் சுவர்க்கத்தை ஏற்றுக்கொண்டு முனிவனைச் சாந்தப்படுத்தினரென வால்மீகி கூறுகிறார். கம்பரோ இந்திரனும் நான்முகனும் சிவபெருமானும் ஏனையோரும் முனிவனையடைந்து சாந்தப்படுத்தியதோடு ராஜரிஷி என்ற பட்டத்தையும் தந்தனர் என்று கூறுகிறார். இதனால் அவர் (கம்பர்) ஆரியவைணவரைத் திருப்தி செய்ய நினைந்தனர்போலும். இனி மேற் செல்லுவோம்.


## ஸ்ரீ ஞானியார் ஆச்சிரமம்

15-4-28 வரை வசூல் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| பத்திரிகையில் முன்னர் வெளியிட்ட படி | 1200 |
| தெலுங்கர் பாளையம் சத்தியார்த்த சங்கம் | 150 |
| கோயமுத்தூர் பி. ரத்தினசபாபதிக்கவுண்டர் | 50 |
| நெற்குப்பை பார்க்கவகுல சங்கம் | 50 |
| ஒரு அன்பர் | 50 |
| தெலுங்கர்பாளையம் தா. ஆ. கருப்பண்ண உடையார் | 25 |
| பேரூர் பெரியதாயாரம்மாள் | 25 |
| புதூர் உத்தமனூர் பார்க்கவகுல சங்கம் | 22 |
| தெலுங்கர்பாளையம் பார்க்கவ சகோதரிகள் | 20 |
| ,, ஆ முத்தைய உடையார் | 15 |
| குழுமூர் பார்க்கவகுல சங்கம் | 15 |
| தெலுங்கர் பாளையம் பார்க்கவகுல சங்கம் | 14 |
| ,, க சுப்பிரமணிய உடையார் | 10 |
| அப்பாச்சி கவண்டன் பதி. ந. மாரப்ப கவுண்டர் | 10 |
| சாந்தலிங்க ஆசிரமம் த. மாரிமுத்துகவுண்டர் | 10 |
| மாரி செட்டிபதி. ப. கிருஷ்ணசாமிகவுண்டர் | 10 |
| பின்னவாசல். கீ சதாசிவமுத்துராஜா | 10 |
| எஸ் சச்சிதானந்தம் பிள்ளை | 5 |
| கோட்டையூர்வே. நா. இலட்சுமணன்செட்டியார் | 2 |
| கன்னிக்குடி எஸ். மருதையாதேவர் | 1 |
| ஆகமொத்தம் ரூ | 1694 |

கட்டிடவேலை விரைந்து நடந்து கொண்டிருக்கிறது. பணம்அனுப்புவதாக வாக்களித்த அன்பர்கள்உடலே அனுப்பிக் கொடுத்து ஆதரிக்கவேண்டுகிறோம்.

காரியதரிசி,
தெய்வீகநிலயம், பொன்மலை.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறென்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு

ஈரோடு விபவ-ஹு சித்திரை-மீ 10-உ

## அரசியல் புரட்டுக்கு சாவுமணி.

அரசியலில் பார்ப்பனர்களும் அவர்தம் கூலிகளும் தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாதாருக்கு இடையூறாய் செய்து வரும் சூழ்ச்சிகளையும் பிரசாரங்களையும் பற்றி சென்ற வாரம் பார்ப்பனீய போக்கிரித்தனம் என்ற தலைப்பின் கீழ் எழுதியிருந்ததோடு சென்னை மந்திரிகள் நடு நிலைமை வகிப்பதன் மூலம் பார்ப்பனரல்லாதாரின் நலத்திலும் சற்று கவலை ஏற்படுவதால் அவர்களைப்பற்றி இப்பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் எவ்வளவு தூரம் விஷமமும் பொய்யும் கலந்த சூழ்ச்சிப் பிரசாரம் செய்கின்றார்கள் என்றும் எடுத்துக்காட்டி அது சரியா தப்பா என்பதற்கும் பல உண்மைகளை வெளியிட்டிருந்தோம். அன்றியும் கடைசியாக எதுவரையில் தற்கால மந்திரிகளை இப்பார்ப்பனர்களும் அவர்களது தாசர்களும் வைகின்றார்களோ அது வரையில் அம்மந்திரிகளை அவர்களிடமிருந்து பார்ப்பனரல்லாதார் நன்மைக்கு ஆன காரியங்களை பெற ஆதரிக்கவேண்டியது பார்ப்பனரல்லாரின் கடமை என்றும் எழுதியிருந்தோம்

அதுபோலவே இவ்வாரம் மந்திரிகளின் தஞ்சை, திருச்சி, கடலூர் ஜில்லா சுற்றுப்பிரயாணங்களில் மந்திரிகளுக்கு பொது ஜனங்கள் நடத்திய வரவேற்புகளும் நமக்கு மிகுதியும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. எது காரணம் பற்றியென்றால், மந்திரிகள் சாதித்து விட்டார்கள் என்றோ சாதித்து விடுவார்கள் என்றோ அல்ல. மற்றென்னை எனில், இப்பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் ஒன்று சேர்ந்துகொண்டு தற்கால மந்திரிகளை எப்படியாவது கவிழ்த்து தங்கள் தாசர்களை மந்திரியாக்கி பொம்மைகளைப் போல் ஆட்ட வேண்டுமென்ற பேராசையாலும் அடுத்த தேர்தலில் தாங்களே வெற்றி பெற்று பார்ப்பன ஆதிக்கத்தை நிலை நிறுத்தவேண்டும் என்னும் ஆத்திரத்தாலும் மந்திரிகள் செல்லும் இடங்களிலெல்லாம் அதை ஆதாரமாய் வைத்து தேர்தல் பிரசாரம் செய்ய ஆங்காங்கு தினக் கூலிகளையும் அமர்த்திக்கொண்டு செய்த விஷமப் பிரசாரங்களையும் 'மந்திரிகளின் துரோகம்' 'வாக்குமீறல்' 'தேசத்தைக் காட்டிக் கொடுத்தல்' என்பதான எத்தனையோ இழி மொழிகளை உண்டாக்கி பெரும் கொட்டை எழுத்துக்களில் தங்கள் தங்கள் பத்திரிகைகளில் எழுதியும் கூப்பாடு போட ஆள்களை சேர்த்தும் செய்த பிரசாரங்களும் பணச்செலவுகளும் ஒரு காதொடிந்த ஊசிக்கும் பிரயோசனப்படாமல் போனதோடு சில இடங்களில் கூலிகளுக்கு உதையும் அடியும் கிடைத்ததோடு பிரசாரம் செய்யச் சென்ற 'தலைவர்கள்' என்போர்களும் சென்ற இடங்களிலெல்லாம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமலும் நின்று பேச இடம் கிடைக்காமலும் கூட்டங்கள் கலவரத்தில் முடிந்ததும் மற்றும் பல இடங்களில் பெருமித அவமானங்களும் அடைந்து வந்ததும் பார்ப்பனப் பத்திரிகைகளாலேயே விளங்கிவிட்டன. சென்னையில் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின் போது எப்படி தலைவர்கள் என்போர்கள் புத்திகள் கற்பிக்கப்பட்டார்களோ அதற்கு மேலாகவே மந்திரி விஜயத்தாலும் பல தலைவர்கள் ஆங்காங்கு தக்கபடி புத்தி கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இனி தமிழ்நாட்டில் பார்ப்பனர்களின் சூழ்ச்சிக்கும் அவர்கள் தாசர்களின் வயிற்றுச் சோற்றுக் கூலி பிரசாரத்திற்கும் யோக்கியதை இல்லை என்பதும் கூடிய வரையில் பொதுஜனங்களுக்கு யோக்கியர்கள் யார், அயோக்கியர்கள் யார், என்பதும் பொது நலத்திற்கு உழைப்பவர்கள் யார், சுயநலத்திற்கு உழைப்பவர்கள் யார் என்பதும், பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பவர்கள் யார், பார்ப்பனர்களுக்கு தாசர்களாயிருந்து அவர்களுக்காக உழைத்து கூலி பெறுவதின் மூலம் பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு துரோகம் செய்பவர்கள் யாரென்பதும் நன்றாய் விளங்கி அரசியல் புரட்டுக்கும் தேசீயப்புரட்டுக்கும் சாவுமணி அடித்துவிட்டதற்கு இது ஒரு அறிகுறியாய் இருப்பதற்காகவே இச்சம்பவங்களையும் மந்திரிகளின் வரவேற்பு ஆடம்பரங்களையும் ஆதாரமாய் வைத்துக்கொண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

ஸ்ரீமான் கனம் சேதுரத்தினமையர் அவர்களுக்கு அநேக பார்ப்பன மிராசுதார்களும் சட்டசபை மெம்பர்களும் பார்ப்பனரல்லாத மிராசுதாரர்களும் பொது ஜனங்களும் ஆடம்பரமான வரவேற்பு விருந்து முதலிய விழாக்கள் நடத்தி இருக்கிறார்கள். ஸ்ரீமான் கனம் முத்தையா முதலியார் அவர்களுக்கும் அதுபோலவே மிராசுதாரர்களும், பொதுஜனங்களும் வரவேற்பும் விருந்தும் மற்றும் பல பெருமைகளும் நடத்தியிருக்கிறார்கள். முதல் மந்திரி ஸ்ரீமான் டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கோ ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகள் என்பவர்களுக்கு நடந்த பெருமைக்கு மேலாகவே சென்ற இடங்களிலெல்லாம் பல பல ஊர்வலங்களும் வரவேற்புகளும் விருந்துகளும் பொதுக்கூட்டங்களும் வெகு தடபுடலாகவே நடந்திருக்கின்றன. எனவே இந்த மந்திரிகள் எந்த விதத்தில் யாரால் மறுக்கப்பட்டார்கள்? யாரால் பஹிஷ்கரிக்கப்பட்டார்கள்? என்பது நமக்கு விளங்கவில்லை.

பார்ப்பனக் கூச்சல்களும் அவர்களது தாசர்கள் கூச்சலும் பத்திரிகை அளவுக்குள் நின்றுவிட்டதே யல்லாமல்-சிலது பத்திரிகைகளில் எழுத்தளவில் நின்றுவிட்டதே அல்லாமல்-காரியத்தில் எங்காவது யாராலாவது நடத்தப்பட்டதா என்று கேட்கின்றோம்.

எனவே இனியாவது பாமர மக்களில் சிலர் இன்னும் மயக்கந்தெளியாமல் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் பார்ப்பன தாசர்களின் வயிற்றுச் சோற்றுக்குமாக கூப்பாடு போடும் தேசீயம் என்றும் காங்கிரஸ் அரசியல் என்றும் சுயராஜ்யம் என்றும் சொல்லப்படும் மாயவார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

உண்மையான தேசியம் என்பது தேச மக்களின் சுயமரியாதையை பொருத்ததே யல்லாமல் சிலரின் ஜீவனோபாயத்திற்கு மாத்திரம் ஏற்படும் வழியல்ல.

உண்மையான அரசியல் என்பது எல்லா மக்களும் சமமாய் அனுபவிக்கக் கூடியதாயிருக்குமே யொழிய ஒரு வகுப்பாருடைய ஆதிக்கத்திற்கு மாத்திரம் கிடைக்கக்கூடியதல்ல.

உண்மையான சுயராஜ்யம் என்பது எல்லா மக்களும் சமமாய் ஏற்றத்தாழ்வில்லாமல் பாவிக்கக்கூடியதும் பொது வாழ்வில் எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கக்கூடியதுமாயிருக்குமே யல்லாமல் ஒரு குலத்திற்கு ஒரு நீதி உடையது அல்ல என்றே சொல்லுவோம்.

ஆகவே கனம் முதல் மந்திரி முதல் ஒவ்வொருவரும் இந்த சுற்றுப்பிரயாணத்தில் ஆங்காங்கு பொது ஜனங்களுக்கு சொல்லி வந்திருப்பது போல் சமத்துவமும் சகோதரத்துவமும் சுயமரியாதையும் ஏற்பட்ட பிறகு தான் மக்கள் அரசியல் சுதந்தரம் என்பது அடையக்கூடும் என்பதையும் அப்படிக்கில்லாவிட்டால் ஒரு சமயம் அரசியல் சுதந்திரம் கிடைத்தாலும் நிலைக்காது என்பதையும் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் உணரவேண்டுமென்றே விரும்புகிறோம்.

## 'தேவதாசன்'.

"தமிழ் நாடு" பத்திரிகையில்
திரு. நாயக்கரைப்பற்றி 'தேவிதாசன்'
எழுதிய கட்டுரைக்கு பதில் 'தேவதாசன்'
எழுதுவன் என்று குறிப்பிட்டிருந்தோம்.
அந்தப்படி தேவதாசனின் பதில்
அடுத்த வாரம் வெளிவரும்.

குறிப்பு:

இவ்வார வெளியீட்டில் 6 ம் பக்கத்தில் காணப்படும் 'இந்து மதமும் யாகங்களும்' என்ற கட்டுரை திருச்செங்கோடு ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீதரஸ்வாமிகளால் எழுதப்பட்டதாகும். அவருடைய கட்டுரைகள் இனி அடிக்கடி 'குடி அரசில்' வெளிவருமென்று நம்புகிறோம்.

## "ரிவோல்ட்"

'ரிவோல்ட்' என்னும் ஆங்கில வாரப்பத்திரிகையின் பதிப்பாளராகயும் வெளியிடுவோராவும் மேஜிஸ்ட்ரேட் முன்னிலையில் பதிவு செய்துகொள்ள ஸ்ரீமதி நாகம்மாள் 19-4-28ல் மறுபடியும் கோர்ட்டுக்கு போனதில், மேஜிஸ்ட்ரேட் தான் இதுவிஷயமாய் போலீசாரை ரிப்போர்ட்டு கேட்டுவிட்டிருப்பதாகவும் அது வந்த மேல்தான் பதிவு செய்துகொள்ள முடியும் என்றும் சொல்லி பதிவு செய்துகொள்ள மறுத்துவிட்டார்.

பிறகு போலீசார் 'ரிவோல்ட்' என்னும் பத்திரிகையின் கொள்கை என்ன என்பது பற்றியும் மற்றும் பல விஷயங்களைப்பற்றியும் இரகசியமாகவும் வெளிப்படையாகவும் வேவு விசாரித்து வருவதாகத் தெரிகிறது. ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களை போலீஸ் இன்ஸ்பெக்டர் கேட்ட கேள்விகளுக்கு அடியிற்கண்ட ஸ்டேட்மெண்டு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

"ஈரோடு டவுன் கச்சேரிவீதியிலிருக்கும் உண்மைவிளக்கம் பிரஸ் புரோப்ரைட்ரெஸ் ஸ்ரீமதி நாகம்மாள் எழுதிக்கொடுத்த ஸ்டேட்மெண்ட்:—

இப்பவும் ஷை பிரசில் 'ரிவோல்ட்' என்கின்ற ஆங்கில வாரப்பத்திரிகை நடத்துவதின் கருத்து, இப்போது நான் பதிப்பாளராயிருந்து நடத்தும் 'குடி அரசு' என்னும் தமிழ் வாரப்பத்திரிகையின் கொள்கைகளையே முக்கியமாய்க் கொண்டு நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. Revolt என்கிற வார்த்தைக்கு நான் எடுத்துக்கொண்ட அர்த்தம் கட்டுப்பாட்டை உடைத்தல் என்பது. ஆகாவது மனித தர்மத்துக்கும், மனித இயற்கைக்கும் விரோதமாக அரசியலிலானாலும் சரி, மத இயலிலானாலும் சரி, அதிகார இயலிலானாலும் சரி, முதலாளி இயலிலானாலும் சரி, ஆண் இயலிலானாலும் சரி, மற்றும் எவைகளாலானாலும் சரி அவைகளினால் ஏற்படும் இயற்கைக்கும் அறிவுக்கும் மாறுபட்ட கட்டுப்பாடுகளை உடைத்து உலகமும் அதன் இன்பமும் எல்லோருக்கும் பொது என்பதும்மக்கள் யாவரும் சமம் என்பதுமான கொள்கையை மனசாக்ஷிப்படி சாத்தியமான வழிகளில் பிரசாரம் செய்வதே அதன் நோக்கம், இதற்கு பத்திராதிபராக ...து கணவர் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி ...கர் இருப்பார்".

இதன் ...மேல் போலீசாரின் அறிக்கை இன்னது எ...றும் மாஜிஸ்ட்ரேட் எப்பொழுது பதிவு செய்து கொள்வார் என்பதும் குறிப்பாய்த் தெரியவில்லை.

## கூடா ஒழுக்கம்.

ஸ்ரீமான் சத்திய மூர்த்தி சாஸ்திரி சென்ற இடங்களிலெல்லாம் கலவரம் ஏற்பட்டதாகவும் சில விடங்களில் கூட்டத்தில் செருப்புகள் வந்து விழுந்ததாகவும் பத்திரிகைகளில் காணப்படுகின்றன. மந்திரிகளின் விஜயத்திலும் பார்ப்பனர்களின் கூலிகள்சிலருக்கு அடி விழுந்ததாகவும் காணப்படுகின்றது. இம்மாதிரியான காரியங்கள்மிகுதியும்வெறுக்கத்தக்கதென்றும் நாம் அழுத்தமாகச் சொல்லவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.

இதற்கு முன்னும் ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார் முதலியோருடைய படங்களை கிழித்துமிதித்து எறிந்ததற்கும் சிலகூட்டங்களில் செருப்புகள் பறந்ததற்கும் நாம் மிகுதியும் வருத்தப்பட்டுகண்டித்து எழுதியிருந்தோம். மறுபடியும் அம்மாதிரியான காரியங்கள் நடை பெற்றதாக தெரிவதற்கு நாம் மிகுதியும் வருத்த மடைகின்றோம். "தமிழ் நாடு" பத்திரிகையில் இச்சம்பவங்கள் சுயமரியாதைச் சங்கத்தைச் சேர்ந்ததாக பிறர் நினைக்கும்படி காணப்படுகின்றதானாலும் நாம் அதை சிறிதும்நம்புவதில்லை, ஏனெனில் அது காட்டிக் கொடுத்து கூலி பெறுவதிலோ அபாண்டத்தை சிருஷ்டித்து பார்ப்பனர்களுக்கு நல்லபிள்ளை ஆவதிலோ பார்ப்பனர்களைவிட ஒரு படி முன்னிற்பது. ஆதலால் அதை நாம் ஆதாரமாய் எடுத்துக் கொள்ளவில்லை.

ஒரு சமயம் அப்படி ஏதாவது உண்மையில் நடந்திருக்குமானால் அது யாரால் நடந்திருந்தாலும் அதற்காக நாம் மிகுதியும் வெட்கப்படவேண்டியவர்களாவோம், ஏனெனில், இத்தொழில் பார்ப்பனக்கூலிகளுக்கே உரியது. சுயமரியாதை உடையவர்களானால் இம்மாதிரி காரியங்களை மிகவும் வெறுக்க வேண்டும். பேசுபவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். கூட்டத்திற்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் பேசியதற்கு சமாதானம் மறுநாள் கூட்டம் போட்டு சொல்ல வேண்டும். அப்படிக்கில்லாமல் கூட்டத்தைக் கலைப்பது யோக்கியமானதாகாது. கூட்டத்தில் செருப்பெடுத்து எறிவது மிகுதியும் அயோக்கியத்தனமான செய்கையாகும். சென்னையில் ஒரு கடற்கரை கூட்டத்தில்பார்ப்பனர்கள் முதல் முதலாக ஒரு செருப்பை எடுத்து எறிந்துவிட்டு பிறகு அவர்கள் வெளியில் கூட்டம் போடுவதற்கே தகுதியற்றவர்களானதும் அவர்கள் போடும் கூட்டங்களில் பலதடவை செருப்புகள் வந்து விழுந்ததும் தேசிய வீரர்கள் ஓடி ஒளிந்ததும் தெருக்களில் ஒவ்வொருவரும் விரட்டப்பட்டதும் நாம் அறிந்த விஷயமாகும், அப்படியிருக்க மற்றவர்களும் அந்த மாதிரி செய்ய முற்படுவது அறிவீனமான காரியமென்றே சொல்லுவோம். ஸ்ரீ சத்திய மூர்த்தி சாஸ்திரி தனது சமூக நன்மையை கருதி அவர்கள் தொண்டாற்றி வருகின்றார். கூடுமானவரை அவரை ஒரு சமூகத் தொண்டர் என்றே சொல்ல வேண்டும், அதன் மூலம் ஏதாவது சுயலாபம் கிடைத்தால் அதை அநுபவிக்கிறார். எந்த சமயத்திலும் தனது பார்ப்பன சமூகத்தை காட்டிக் கொடுத்து ஒரு வார்த்தை யாவது பேசினவரல்ல. அம்மாதிரி சமூகத் தொண்டர்களை நாம் போற்ற வேண்டும். அவருடைய தனிப்பட்டசொந்த விஷயங்கள் பல இருக்கலாம். அவற்றை அவர் நமக்கு தலைவராகவோ உபதேசிப்பவராகவோ வரும்போது நாம் பேசிக் கொள்ளலாம். கூட்டத்தில் அவரை மறித்ததுசரியல்லவென்றே சொல்லுவோம். இம்மாதிரிக்காரியம் நமது கூட்டங்களிலும் செய்ய அவர்களாலும் முடியக்கூடியது தானே யல்லாமல் ஒருவருக்கே சொந்தமல்லஎன்றேசொல்லுவோம்

யாவருக்கும் பேச்சு சுதந்திரம் கொடுக்க வேண்டும். திருச்சியில் நடந்ததாகச் சொல்லப்படும் இந்தக் காரியம் பார்ப்பனர்களுக்குள்ளாகவே ஸ்ரீமான்கள் சாஸ்திரி, டாக்டர் ராஜன் கூட்டத்தாருக்கும், ஸ்ரீமான் சேதுரத்னமய்யர் கூட்டத்தாருக்குமேநடந்ததாக நம்பத்தகுந்த இடத்திலிருந்து சேதி வந்தாலும் இது யாருக்குமே கூடாது என்று சொல்லுகின்றோம்.

### சுயமரியாதைச் சங்கங்களுக்கு

## ஆதரவு.

தமிழ் நாட்டில் புதிதாய் தோன்றி இருக்கும் சுயமரியாதைச்சங்கங்களுக்கும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கங்களுக்கும் ஏறக்குறைய நாடு முழுதுமே ஆதரவு கிடைத்து வரும் விஷயம் யாவரும் அறிந்திருக்கலாம். காங்கிரசின்போது வங்காளத்திலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்திருந்த திருவாளர் கோஸ்வாமி முதலியோர் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப்பற்றி பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் பேசும்போது தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தைப்பற்றியும் சுயமரியாதைச்சங்கத்தைப்பற்றியும் புகழ்ந்து பேசிவிட்டுப்போய் இந்திய சட்டசபையிலும் பிரஸ்தாபித்தது நேயர்களுக்கு தெரிந்திருக்கலாம். இப்போது சென்னை மாகாண மந்திரிகளும் முக்கியமாய் முதல் மந்திரியும் தஞ்சையில் ஒரு கூட்டதநில் பேசும்போது இது சமயம் "நாட்டில்சுயமரியாதைச்சங்கங்களை ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் போன்றூர்கள் ஸ்தாபித்து வருவது கேட்டு தாம்மிகவும் சந்தோஷப்படுவதாகவும் அவைகள்தாம இப்போது வேண்டப்படுகின்றன வென்றும் சிறிதும் பயமில்லாமல் பார்ப்பனரல்லாதார் இக்காரியத்தை தொடர்ந்து நடத்திக்கொண்டு போனால் சீக்கிரத்தில்நன்மைபிறக்குமென்றும்இவ்வேலைகள் தான்சுயராஜ்யமடையச்செய்யுமென்றும் பேசி பார்ப்பனரல்லாத இளைஞர்களையும் உத்சாகப்படுத்திப் பேசினார்" (இந்த வாக்கியங்கள் 20—4—28ல 'சுதேசமித்திரன்' 6-வது பக்கம் 5-வது கலத்தில் இருக்கின்றது). ஆனால் 'தமிழ் நாடு' பத்திரிகை சுயமரியாதை சங்கங்களும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கங்களும் வயிற்றுப் பிழைப்புக்காக நடைபெறுவதாக ஜாடை ஜாடையாக எழுதுகிறது.

எனவே ஸ்ரீ வரதராஜுலுவும் அவர் தேசிய பிரசாரமும் வயிற்றுப் பிழைப்பு பிரசாரமா, அல்லது சுயமரியாதைப் பிரசாரமும் பார்ப்பனரல்லாத வாலிப சங்கப் பிரசாரமும் ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், கண்ணப்பர், ஆரியா போன்றவர்களின் பிரசாரமும்வயிற்று பிழைப்புபிரசாரமாஎன்பதை பொது ஜனங்களே உணர்ந்து கொள்ளவிட்டு விடுகிறோம்.

## இராசீபுரத்தில் திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும் தண்டபாணி பிள்ளை அவர்களும்,

### உற்சாகமான வரவேற்பு.

### இது வரை கூடியிராத மாபெருங்கூட்டம்.

15-5-28 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு திருவாளர்கள் ஈ.வெ. ராமசாமி நாயக்கரும் தண்டபாணிப்பிள்ளை சேலம் ஜங்ஷன் ஸ்டேஷனிலிருந்து வரவேற்கப்பட்டு ஸ்பெஷல் மோட்டாரில் ராசிபுரம் அழைத்து வரப்பட்டு இராசை தமிழ் சங்கத்தில் ஜாகை ஏற்பாடு செய்து வைக்கப்பட்டார்கள். அவர்கள் வந்த முதல் ஊர் பிரமுகர்கள் அனேகமாக இங்கும்வந்துபேசிக்கொண்டும் பல விஷயங்களைப் பற்றிவிவாதித்துக் கொண்டுமே இருந்தார்கள். திரு. காவேரி நாயுடு அவர்கள் வீட்டில் பகல் சாப்பாடு முடிந்ததும் சற்று ஒய்வெடுத்ததுடன் பார்ப்பனரல்லாதார் காபி ஒட்டல் ஒன்று ஏற்கெனவே இராசிபுரத்தில் திறக்கப்பட்டிருப்பதை வந்து பார்க்கும்படி வேண்டிக்கொண்டதற்கு இணங்க திரு. நாயக்கரும் திரு. பிள்ளையும் வாத்தியங்களுடன் கிளப்புக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். அங்கு வரவேற்பும் வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்கு கல்கண்டு பலகாரம் முதலியவைகளும் அளிக்கப்பட்ட பின் பார்ப்பனரல்லாதார் காப்பிக்கடைகள் திறக்கப்படுவதும் பார்ப்பன ரல்லாதார் அவைகளை ஆதரிப்பதும் சுயமரியாதையின் தத்துவ மென்றும் பார்ப்பனர் கடைகளில் போய்அருந்துவதால் ஏற்படும் சுயமரியாதைக் குறைவைப் பற்றியும் சுருக்கமாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு அங்கிருந்தே பெரும் கூட்டமாக மேளவாத்தியத்துடன ஊர்வலமாக மாலை நான்கரை மணிக்கு சந்தைப்பேட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்கு திரு வெங்கிட்டராமன் அவர்களால் தற்கால நிலையும் நாயக்கர் பிரசாரத்தின் அவசியமும எடுத்துச் சொல்லப்பட்டு திரு நாயக்கரை அக்கிராசனம் வகித்துகூட்டத்தை நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. பிறகு திருவாளர்கள் பெரியண்ண செட்டியார் காவேரி நாயுடு முதலியவர்கள் ஆதரிக்க, நாயக்கருக்கு ஜே! தண்டபாணிபிள்ளைக்கு ஜே! என்கின்றபெருத்த ஆரவாரத்தினிடையே திரு நாயக்கர் அக்கிராசனம் வகித்தார். திரு ஏ. ராமசாமி அய்யா அவர்களால் ராசிபுரம மகாஜனங்கள் சார்பாக ஒரு உபசாரப்பத்திரம் அகவற்பாவில் வாசித்துக் கொடுக்கப்பட்டது. திரு நாயக்கர் அதற்கு தக்க பதில் சொல்லிவிட்டுதமது சொற்பெருக்கை அக்கிராசனர் உபந்நியாசமாக சுமார் 3 மணி நேரம் பேசினார். அவர் உபந்நியாசத்தைக் கேட்டுக் கொண்டேயிருந்த மக்கள் சுமார் 2000 பேர்களும் மெய் மறந்து பரவசப்பட்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். மூன்று மணி நேரமும் வினாடி கணக்கில் கழிந்ததாகவே இருந்தது. கூட்டத்திற்கு சேலத்திலிருந்தும் மற்றும் வெளியூர்களிலிருந்தும் அநேகர் வந்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சேலம் கவுன்சிலர் ஏ. கே. சுந்தரம் செட்டியார், பெரியசாமி முதலியார், வையாபுரி பண்டாரம், ஹரூர் வேடி செட்டியார், கதிரி செட்டியார் முதலியவர்களும் உள்ளூர் உத்தியோகஸ்த்தார்களும் சில பார்ப்பனர்களும் ஆவார்கள்.

நாயக்கர் பேசிய விஷயங்களாவன.—

நம் நாட்டு நிலையைப்பற்றியும் மற்ற நாடுகளின் நிலையைப்பற்றியும் எடுத்து விளக்கி, நம் நாட்டு நிலைக்கு காரணம் அரசியலும் மதமுமே என்பதாக அநேக உதாரணங்களால் ரூபித்து, அரசியல் பிழைப்புக்காரர்கள் சுயராஜ்யம், தேசீயம் என்கின்ற வார்த்தைகளால் பாமர மக்களை இதுவரை ஏய்த்து வந்த முறையையும் அதனால் அவர்கள் இப்போது வாழ்ந்துவரும் வாழ்வையும் வெட்ட வெளிச்சமாய் எடுத்துக் காட்டினார். இந்தச் சமயத்தில் கூட்டத்தார் காட்டிய உற்சாகத்திற்கு அளவில்லை. மதத்தின்பேரால் பார்ப்பனர்கள் செய்து வைத்திருக்கும் கட்டுப்பாடுகளின் இரகசியத்தையும் அதை குருட்டுத்தனமாய் பன்பற்றிக்கொண்டு நமவர்கள் நடக்கும் பயித்தியகாரத்தனத்தையும் எடுதுக்காட்டி இவைகள் இரண்டும் ஒழிந்தாலல்லது மக்களுக்கு சுயமரியாதையும் விடுதலையும் கிடைப்பவே கிடையாது என்றும், வயிற்றுப் பிழைப்புக்காரர் போலி தேசீயத்தில் ஏமாறக்கூடாது என்றும் பேசிக்கொண்டு வந்து முடிவுரையாக வாலிபர்களுக்கு உபதேசம் செய்யப்போகும்போது திடீரென்று 8 மணிக்கு மழை வந்துவிட்டதால் எதிர் பாராதபடி கூட்டத்தை முடிக்க நேர்ந்தாலும் அங்கு கூடியிருந்த அநேகர் ஸ்ரீமான் தண்டபாணிபிள்ளையைப் பேசும்படி வேண்டிக்கொண்டார்கள. மழையானது பலமாய் வரும்போலிருந்ததால் அவர் பேசசாத்தியமில்லாமல்போய்விட்டது. மறுபடியும் நூற்றுக்கணக்காக பல கூட்டம் ஜாகைக்கு வந்து திரு. பிள்ளை அவர்களை இருந்து மறுநாள் பிரசங்கம் செய்துவிட்டு போகும்படியாகவே கேட்டுக் கொண்டார்கள். திரு. பிள்ளை அவர்கள் மற்றொரு சமயம் வேண்டுமானல் வருவதாகச்சொல்லி விடைபெற்றுக்கொண்டு இரவு 10 மணிககு ராசிபுரத்திலிருந்து புறப்பட்டு சேலம் வந்து நேரே பிள்ளை அவர்கள் ஊஞ்சலூருக்கும், நாயக்கர் ஈரோட்டுக்கும் புறப்பட்டுவிட்டார்கள். இவர்கள் வரவினால் ராசிபுரமும் அதன் சுற்றுப்புறங்களும் ஒரு புதிய உணர்ச்சி பெற்று இருக்கின்றது. கூடிய சீக்கிரம் ஒரு பெரிய மகாநாடு நடத்தவும் மற்றும் திரு. கண்ணப்பர், பனகால் ராஜா முதலிய அநேக பெரியார்களை வரவழைத்து அவர்களது உபதேசம் கேட்க வேண்டுமென்றும் தீவிர ஏற்பாடுகள் நடந்து வருவதாய் தெரிகின்றது.

நிரூபர்.

## காலஞ் சென்ற திருவாளர் ராவ்சாகிப் வி. பி. காந்திமதிநாத பிள்ளை பி.ஏ.

இச் சனவான் திருநல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம்தாலுகா வீரநல்லூரில் வேளாளகுல வணிகர் மரபில் தோன்றியவர்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்து ஏற்றமடைந்தவர். சென்னைக் கிறிஸ்தவ காலாசாலையில் பீ. ஏ. பட்டம் பெற்றவர். கலெக்டராபீசில் வேலைப்பார்த்து, பின் அம்பாசமுத்திரம் ஹைஸ்கூலில் ஆசிரியராய், பின்னர் சட்டப்பரீக்ஷையில்தேறி வக்கீலாய் நியாயமன்றில் முன்னணியில் நின்றவர். சேரன்மாதேவி தாலூகாபோர்டு தலைவராய் ஒரு வியாழவட்ட மிருந்தவர். அப்பொழுது திருக்குறுங்குடி சத்திரத்தில் பார்ப்பனர்களுக்கு அன்னமிடுவதை மாற்றிப் பார்பனரல்லாதார்க்கும்சைவப்பரிசாரகர்களைக்கொண்டு அன்னமிடச் செய்த அவர்களது நலம் ஊழியும் போற்றத் தகுந்தது. இவரது பரோபகார ஜீவியத்தைக் கண்ட கவர்மெண்டார் இவர்களுககு ராவ் சாகிப் பட்டம் வழங்கினர்.

திருக்குறுங்குடி சத்திர மூலதனததிலிருந்து கல்லிடைக்குறிச்சியில் பார்பனர்களுக்கென்றே நடை பெற்று வந்த சமஸ்கிருத பாடசாலையில் பார்ப்பனரல்லா மாணவர்களையும் சேர்த்துப் படிப்பிக்கும்படி செய்தார்.

பார்ப்பன உபாத்திமார் மற்றைய மாணவர்களுக்கு பாடம் சரியாய்ச் சொல்லிவையாத காரணங்கொண்டு பணம் கொடுப்பதை நிறுத்தி விட்டார். இவர் திடீரென 15-3-28ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள் இவர்களது பிரிவாற்றுமைக் கறிகுறியாய் தாலூகா போர்டு பள்ளிக்கூடங்கள் மூடப்பெறறன. தாலூகா போர்டில் அநுதாபக் கூட்டம் கூடி தங்கள் மன வருத்தத்தை தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு நிரூபர்.

## மந்திரிகளின் சுற்றுப்பிரயாணம்.

தஞ்சை, கும்பகோணம், மாயவரம், குத்தாலம, பிறையாறு, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இன்னும் பல ஊர்களிலும் சென்னை மாகாண மந்திரிகளான கனம் டாக்டர் சுப்பராயன், கனம் முத்தையா முதலியார், கனம் சேதுரத்தினம அய்யர் ஆகியவர்கள் தம் தம் சுற்றுப்பிரயாணத்தின் போது ஊர் பிரமுகர்களாலும், முனிசிபாலிட்டி, தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டு, யூனியன் முதலான பல ஸ்தல ஸ்தாபனங்களாலும், பற்பல வகுப்புச்சங்கங்களாலும் குதூகலமான வரவேற்பும் சிறப்பான விருந்துகளும் புகழ்நிறைந்த உபசாரப் பத்திரங்களும அளிக்கப்பட்டார்களென்றும், அவ்வவ்வூர்களில்மந்திரிகளைவரவேற்கச்செய்திருந்த ஏற்பாடுகளில் மந்திரிகளை எவ்வளவு வரை புகழக்கூடுமோ அவ்வளவு தூரம் புகழத்தக்க வாக்கியங்கள் கொண்ட வளைவுகளும், தோரணங்களும், அலங்காரங்களும், வேடிக்கை முதலானவைகளும் எழுதி முடியாதென்றும் பத்திரிகைகளில்செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன.

10-ம் பக்கத் தொடர்ச்சி.

க்கு அடிமையாகாமலும் புராணக்குப்பைகளுக்கும் உயர்வு தாழ்வுகளுக்கும் ஆளாகாமலும் மக்களிடத்தில் காட்டும் அன்பும் கருணையுமே பிரதானமாகக்கொண்டு மனிதத் தன்மையுடன் நடைபெறுமென்று நினைப்பதுடன் அம்மாதிரியே நீதி காலம் நடைபெற்று வரவேண்டும் என்றும் ஆசைப்படுகின்றேன் என்று பேசிமுடித்தார்.

திரு. கண்ணப்பர்.

திரு. நாயக்கர் பேசியதை ஆதரித்துப் பேசியதோடு சமரசசன்மார்க்க சங்கங்கள் சமரசத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் விரோதமானவைகளையும் மனிதத் தன்மைக்கும் அன்புக்கும் அறிவுக்கும் பொருந்தாதவைகளையும் அழிக்கவேண்டியதையே முக்கிய கொள்கையாக கொண்டிருக்கவேண்டும் என்றும் பேசுகிறார்.

திரு தண்டபாணி பிள்ளை.

சன்மார்க்கர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களும் தெருவில் செல்லும்போது வழியில் ஒரு ஆதிதிராவிடக குழந்தை கீழே விழுந்து பல் உடையுமாயின் அதற்குச் சுண்ணாம்புகூட கொடுக்க நினையாதிருப்பவர்களும் சமரச சன்மார்க்கிகளாகத்தான் உலகத்தில் திரிவதாயும், உண்மையில் பிறருக்கும் தேவையினால் வாடும் ஏழைகளுக்கும் மனம் வந்து ஒரு சிறிதும் உதவிபுரியக் கருதாது கோவில் சென்று அப்பனே ஐயனே என்று ஏத்திப்புகழ்வது அறியாமையும் கடவுளை ஏமாற்றப் பார்ப்பதுந்தான் ஆகுமென்றும், கடவுள் செய்ய வேண்டிய பிறர்க்குதவி செய்தலான வேலையைச் செய்வதுதான் கடவுளுக்குகந்த சமரச சன்மார்க்கமென்றும் மனித வாழ்வில் உண்மை சமரசமென்பதுணராது கோவிலுக்குப் போவதிலும் மற்ற மதசம்பந்தமான விவகாரங்களில் செலவிடப்படுவதுந்தான் மனிதன் முக்கியமாக வீணுக்கும காலமென்றும், கடவுள் தன்மையைப்பெற்று அனைவரையும் சமமென மதித்து அன்புகாட்டி உய்வதே உண்மைச் சமரச சன்மார்க்கமென்றும் கூறினர். பிறகு தலைவர்களுக்குப் பெருத்த கரகோஷத்தினிடையே மாலைகள் சூட்டப்பட்டு வந்தனோபசாரத்துடன் கூட்டம்கலைந்தது. ஒரு நிருபர்

## மந்திரிகளின் சுற்றுப் பிரயாணம்.

கனம் முதல் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள் 16-4-28 தேதி மாலைதிருத்துறைப்பூண்டிக்கு விஜயம் செய்து தாலுக்கா போர்டு ஆபீஸ் கட்டிடத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டினர். தாலுக்கா போர்டு சபையாரும், ஹைஸ்கூல் மாணவர்களும்வரவேற்புப்பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர். தாலுக்கா போர்டாரால் சிற்றுண்டியும், நெடும்பலத்தில் திரு என. பழனியப்ப பிள்ளையவர்களால் விருந்தும் சிறப்பாக அளிக்கப்பட்டது. 17-4-28 தேதி காலை சிற்றுண்டி யருந்தி விட்டு கனம் மந்திரியவர்கள்மன்னார்குடி சென்றார்.

ஒரு நிருபர்.

'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகளின் ஆசிரியரும் வைக்கம் வீரருமாகிய திருவாளர், ஈ. வெ இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு இராசிபுரம்

## மகாஜனங்கள் கூறும் வரவேற்பு.

வருக வருக வண்புகழ் பெற்றோய்!
பொதுநல வுழைப்பிற் சிறப்புற் றோங்கி
நியாயக் கக்ஷியில் நிலை பெற் றுயர்ந்த
கருத்துக ளார்ந்த கண்யனே! வருக
உலகம் புகழும் உத்தமனாகிய
காந்தி மகாத்மா கழறிய மொழிகளைப்
புறத்தே போக்கியும் புவியுளோர் வியக்கச்
சித்த ரஞ்சனர் சிருறத் தோற்றிய
கக்ஷியிற் சேர்ந்ததன் கருத்தைத் திரித்துஞ்
சுயநலம் மேலுறச் சுயமையாய் வாழும்
மாக்களி னரசியல் மாண்பைக் குலைக்கவும்
மூடாம் பிக்கை முழுதும கற்றவும்
குவலயம் புகழக் குடி அரசு என்னும்
இதழைத் துவக்கி யியக்கும் பண்புளோய்!
வைக்கந் தன்னில் வாழ்நூர் செய்த
அக்கிர மங்களை யறவே யொழிக்கத்
தீரமா யுழைத்த திறமை பால் வைக்கம்
வீரனென் றும்மை வியந்தோர் புகழத்
திகழும் ஈரோ டிராம சாமியாம்
நாயகா! வருக!! நாற்றிசை விரும்பும்
நேயனே! வருக!! நிலைகெடு செடாஅ
துரைக்குந் திராவிட ருக்கமார் வடிவே!
உலையா வுழைப்பின லோங்குந் திராவிடப்
காசிரியனாகவும் அமர்ந்தநின் மாண்பினை
என்னென் றுரைப்பேம்! எத்துறையுளோ
ரும்
ஆற்றொழுக் குடனே யரிமா நோக்கெனச்
சாற்றுநன் முறையுடன் சலனமில் லாமலே
பெய்யும் மழையெனப் பேசிநின் னாற்றலைப்
பெரிதும் புகழ்வரப் பெற்றியோய்! நாங்கள்
செய்தவப் பயனெனச் செப்புதற் கேற்பத்
தறிவுச் சுடரினை யனைவருள் ளத்திலும்
கொளுத்திப் பொருளிலாக் கொள்கையா
யகற்றவீங் குற்ற ஐயனே! வருக [மிருளை
வென்றுயா முன்னை யியம்புதற் கென்ன
புண்ணியம் செய்தனம்! புவியிற் சுயமரி
யாதையா மியக்கம் யாண்டும் நிலவப்
பெரிதும்முயலும்பெருந்தகை!நின்னுழைப்
பின்பய னென்றும் பெயரா தோங்கி
வளர்வ தாக வாட்டமுங் கோட்டமும்
நீங்க நடுநிலை நீங்குறா தாய்ந்து
புகலும் நின்னுரை பொலிக என்றுமே
நிலவியிவ் வுலகில் நீள்புகழ் மேன்மே
லூறீஇ வாழ்க நீயுமி ராசைத்
தலைவனு மீசன் றண்ணருள் பெற்று
வாழ்கபல்லாண்டெனவாழ்த்துகின்றோமே.

இராசிபுரம், 15—4—28.

இங்ஙனம்,
மகாஜனங்கள்

## பார்ப்பனீய மொழிந்த திதி

S திருச்சிராபள்ளி தாலூகாவைச் சேர்ந்த வீதிவடங்கம் கிராமத்திலுள்ள பிரபல மிராசுதாரும் தாலூகா போர்டு அங்கத்தினரும் தர்ம சிலப் பெரியாருமாகிய திருவாளர் பி. சின்னுப்பிள்ளையவர்கள் தமது முதல் மனைவியார் இறைவன் திருவடி நிழலடைந்ததை முன்னிட்டு 14-4-28 ல் பொல்லா பார்ப்பன புரோகிதத்தை ஒழித்து அவ்வம்மையாரின் ஞாபகார்த்தமாக இறைவனை வணங்கி 500 ஏழை மக்களுக்கு அன்ன மளித்தார்.

டி.எம். பொன்னம்பலம் பிள்ளை

## தமிழ்நாடு கதர் இலாகா சத்தியாக்கிரக கமிட்டி.

சுற்றறிக்கை-1.

தஞ்சையில் கூடிய இரண்டாவது பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாட்டில் செய்த தீர்மானத்திற்கிணங்க பல கனவான்கள் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள்.

கமிட்டியின் நிர்வாகச் செலவுக்கு தங்களால் இயன்ற பொருள் உதவி செய்வதோடு நண்பர்களையும் கொடுக்குமாறு தூண்டுங்கள்.

29-4-28 ஞாயிறு (சித்திரைமீ 17உ) காரியக் கமிட்டியின் கூட்டம் நமது காரியாலயத்தில் கூடும். அது போது சர்க்கா சங்கத்தின் குறைகள், அது சீர்திருத்தப் பெற வேண்டுவதன் முறைகள், முதலியவைபற்றி மகாத்மா காந்தியடிகளுக்கு ஓர் நீண்ட கடிதம் தயாரிக்கப்படும். எனவே, ஒவ்வொருவரும் அவசியம் தவறாமல் வருமாறு வேண்டப்படுகிறார்கள். இல்லையேல் கடிதமூலமாகவோ, பத்திரிகை மூலமாகவோ அபிப்பிராயத்தை விளக்கமாகத் தெரிவிக்கும்படி பெரிதும் வேண்டுகிறோம். வரும் விபரத்திற்கு முன்னதாகவே அறிவிக்க வேண்டப்படுகிறார்கள்.

நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியார்,
தலைவர், சிவாஜிநிலையம், திருச்சி.

வைக்கம் வீரரின்

## போட்டோ படம்.

வைக்கம் வீரர் ஈரோடு உயர் திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களின் திருவுருவப் புகைப்படம். கெம்பீரமான பார்வையுடன் விளங்குவது; பார்ப்பவர்கள் கண்களை கவரச்செய்யும்.

சயிஸ் $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ இஞ்சி. விலை படம் 1க்கு வி. பி. தபால் சார்ஜ் உள்பட ரூ. 1. ஒரு டஜன் அல்லது அதற்கு அதிகமான காப்பிகளுக்கு ஆர்டர் கொடுத்தால் காப்பி 1-க்கு அணா 12 வீதம் சார்ஜ் செய்யப்படும். அதற்கு அட்வான்சாக ரூ. 5 முன்னடி அனுப்பவேண்டும். என்லார்ஜ்மெண்டு அதாவது மிகப் பெரியபடம் வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி விபரம் தெரிந்து கொள்ளவும்.

G. V. நாயுடு,
போட்டோகிராப்பர்,
நாகப்பட்டணம்.

## எதிர்கால பலன.

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால் உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், பாக்கியம், யோகம், விரையம், களத்திரம், களத்திரரூபம், சத்ரு, ருணம், ஜீவனம், தொழில், ஆக இத்யாதி விஷயங்கள் தெரிவிக்க ரூ. 2. வெளிநாட்டு நண்பர்கள் முன் பணம் அனுப்ப வேண்டும்.

சோதிடாலயம், வைத்திக்குப்பம்,
புதுவை. (பிரான்சிந்தியா).

## சென்னை தமிழ் மக்கள் சீர்திருத்தச் சங்கம்.

தமிழ் மக்கள் உலக வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் முன்னேற்றமடையும் பொருட்டு அவர்களுடைய பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தி அவர்களுக்குச் சுயமரியாதையை உண்டாக்க வேண்டுமென்று 'தமிழ் மக்கள் சீர்திருத்தச் சங்கம்' என்னும் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சங்கத்தின் காரியாலம் 39, வேளாள வீதி, புரசைவாக்கம், சென்னை.

அ. ரங்கநாத முதலியார்.
காரியதரிசி.

## R. M. P. தமிழ் பரிசு வினுவுக்கு விடையும் டை நிலயத்தாருக்கு அறிவிப்பும்.

ஐயா, தமிழ் வளர்ச்சிக்காக தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்கும் ஊக்கத்திற்கும் தமிழ் மக்கள் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆயினும் பரிசு அளிக்க எண்ணங்கொண்ட தாங்கள் எங்களிடமிருந்து அணு நான்கு பெற்று அதை பரிசளிப்பது தாங்கள் அளித்த பரிசாகுமா. நிற்க சுமார் 1,000 பேர் நான்கணு வீதம் அனுப்பினால் 250 ரூபாய் ஆகிறது. பரிசு தொகை ரூபாய் 50. போக பாக்கியை என்ன செய்கிறீர்கள். இது பாமரர்களை ஏமாற்றி பொருள் பறிக்கும் வழியென்றல்லவா நினைக்கவேண்டியிருக்கிறது. மேல்நாட்டில் பத்திரிகைகளில் சிறுவர்களின் அறிவு வளர்ச்சிக்காக அநேக குறுக்கு வார்த்தை (Cross Word Puzzles)கள் வெளிவருகின்றன. ஒன்றிலாவது ஸ்டாம்புகள் கேட்கவில்லை.

இம்மாதிரி கெட்ட பழக்கம் நம்மவரிடம் தான் இருக்கிறது. இப்பழக்கத்தால் தமிழ் வளர்ச்சிக்கே பெரிதும் தடை ஏற்படுகிறதென்பதை தாங்கள் உணரவேண்டும். எப்படி எனில், பொருள் நுட்பமறிந்த பலர் தரித்திரர்களாய் இருக்கலாம். அவர்களுக்கு சரியான விடை தெரிந்திருந்தும் அணு நான்குக்காக பதில் எழுத முடியாமல் போனால் விஷயம் எல்லாருக்கும் தெரிவதெப்படி? ஆகையால் பரிசு கொடுக்க எண்ணங்கொண்ட தாங்கள் இனியாவது ஸ்டாம்புகள் அனுப்பும்படி சொல்லாமலிருந்தால் பல பொருள் நுட்பங்களை வாசகர்கள் தெரிந்துகொள்ளஏதுவாய் இருக்கும். தாங்களும் தமிழ்த் தாய்க்கு உண்மையான தொண்டு புரிந்தவர்களாவீர்கள். இத்துடன் விடையும் அனுப்பியிருக்கிறேன். அது வருமாறு:—

### R. M. P. தமிழ் பரிசு வினு No 1க்கு விடை.

1. பு கா தி — தெய்வத்தின பெயர்
2. ப ர் மா — தேசத்தின் பெயர்
3. அ த் தி — மரத்தின் பெயர்
4. பா தி ரி — மூங்கிலின் பெயர்
5. ம கே லே — மகேலை என்னும் பதம்
6; அ ய ம் — உலோகத்தின பெயர்
7. ப ன் றி — மிருகத்தின் பெயர்

M. G, S. இராமகிருஷ்ணன்,
திருவாரூர்.

## மலாய் நாட்டுக் கடிதம்.

### உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்.

"தமிழ்நாடு" தினசரி பத்திரிகை வெளியான தினத்தன்றே அதன் கொள்கை முற்றிலும் மாறி விட்டது என்பதற்கு "குடி அரசு" "பழையகருப்பனே கருப்பன" என்ற மகுடமிட்டு எழுதியுள்ள மதிப்புரையே போதும் என்பதை தமிழர்கள அறிந்திருக்கலாம். அதற்கான மறுப்புகள் இரு சாராரும் எழுதிவந்ததையும் நேயர்கள தொடர்ந்து படித்திருக்கலாம்.

அதற்கு சமாதானம் செய்ய வேண்டி "நவசக்தி" "பத்திரிகைப் போர்! வேண்டாம்! வேண்டாம்!" என்று எழுதிய நுட்பமான குறிப்புகளையும் நண்பர்கள் அறிவார்கள் "அப்பத்திரிகைப் போர்" ஒருவாறு கனன்று தணிந்துபோய் இருந்தது ஞாபகம் இருக்கலாம்.

அப்படியிருக்க 'குடி அரசின்' ஓய்வில்லா பிரசாரத்தினால் தற்போது எங்கும் சமத்துவமும் சுயமரியாதையும் உதயமாகிக் கொண்டு வருவது ஒவ்வொரு தமிழர்களும் மறைக்க முடியாத ஓர் உண்மையன்றோ! அங்கோ தமிழ்நாடே! தினசரியே! வாரப்பதிப்பே! ஒரு காரணமும் ஆதாரமும் இன்றி வீண் பிதற்றல்களும் அண்டைப் புழுதுகளும் குப்பையில் கிழித் தெரியக் கூடிய கதைகளுமேனோ "தமிழ் நாடே"

குருகுலப் போராட்ட காலத்துத் தொடுத்துள்ள போர்கள் எங்கே போயிற்றோ? 1600 மயிலுக்கு இப்பால்வதியும் இம்மலாய் நாட்டிலுள்ள ஓர் பார்ப்பனப் பத்திரிகையாகிய "தமிழ்நேசன்" அப்போராட்ட காலத்து ஸ்ரீ வரதராஜுலுவைக் கலியுக ராவணன் என்றதோர் புனர் நாமங் கொடுத்துபெரிய கொட்டை எழுத்துக்களால் விளம்பரம்செய்து எழுதிய மறுப்புகளை ஒவ்வொரு சுயமரியாதையுள்ளவனும் அறிந்திருக்கிறான். அதே பார்ப்பனப் பத்திரிகையாகிய 'தமிழ் நேச'னுக்கு சமீபத்தில் "தமிழ்நாடு" கொடுத்திருக்கும் மதிப்புரையைப் பார்த்த ஒவ்வொரு தமிழர்களின் மனமும் உருகாமல் இராது. என்னே காலத்தின்கோலம்! தமிழர்களின் முன்னேற்றத்திற்கு உழைப்பது என்று விளம்பரம செய்த "தமிழ் நாடே" இதற்காகததான் 'தமிழ்நாடு' தினசரி ஆனது போலும்! மாலாய் நாட்டு வாசிகளே இவ்விடம் சில காலமாக வந்திருக்கும் "தமிழ் நாடு" ஆசிரியர் போன்றவர் உரைகளுக்கு செவிகொடாதீர்கள்! கொடாதீர்கள்! கடைசியாக "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதற்கிணங்க ஒவ்வொரு சுயமரியாதையுள்ள தமிழர்களும் உண்மையைக் கடைப் பிடித்து ஒழுகுவார்கள் என்று நம்புகிறேன்.

சிங்கப்பூர் சோ. ரெத்தினசபாபதி

## நமது கடமை.

அருந்தமிழறிந்த "குடி அரசின்" அபிமான அன்பர்களே! நாம் இந்நில உலகிற் கல்விச்செல்வம், பொருட் செல்வம், நாகரீகம் முதலிய யாவற்றாலும் தலை சிறந்து விளங்கிய போதிலும் அடிமைத் நோயெனும் ஓர் கொடிய காலதூதனால் பீடிக்கப்படுவோமாயின் யெவ்வகை யின்பத்தையுமடைய முடியாதென்பதை யாம் இங்கு அறிவுறுத்தல் அவசியமன்றும். ஆனது பற்றியே நம்மூதாதைகளனைவரும் அடிமை வாழ்வு வாழாதே யென்ற முதுமொழியை வழங்கிவரலாயினர்,

மக்களை அடிமைத்தனத்தினின்று நீக்கும் பொருட்டே உடல் பொருள் ஆவி ஆகிய எதையும் சிறிதும் பொருள்படுத்தாது உயர்திரு ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்களும் நமது சுயமரியாதைத் தாயுந் தந்தையுமான "குடி அரசு" ம் உழைத்து வருவது யாவருமறிந்த விஷயமே.

நமது "குடி அரசா"னது தற்சமயம் வாரம் 1க்கு 7000 காப்பிகள் வரை பிரசுரிக்கப்பட்டு சுயமரியாதையையும் போதித்து வருகிறது. சென்னை ராஜதானியில் சுமார் 4 கோடி மக்களிடையே 7000 காப்பிகளை சுமார் 70000 பெயர்கள் மட்டும் பார்த்துவருவது விசனிக்கத் தக்கதேயாகும்.


"குடி அரசின்" அபிமானிகளாகிய நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தெரிந்த பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்களிடம் நமக்கு வரும் "குடி அரசை" நாம் படித்த பிறகு காண்பித்து அவர்களையும் அவர்களின் பந்துக்களையும் "குடி அரசை" வாங்கிப் படித்து சுயமரியாதையும் மனிதத் தன்மையும் அடையச் செய்வதே நமது கடமை.

டாக்டர் ஜி. எல். சாமி திருச்சி.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA


ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0



நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறுரூபாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போடோவின் அளவு $3\frac{1}{2}$x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

அநேக
ஜமீன்தார்,
பிரபுக்களால்
தங்க மெடல்கள்
பரிசுபெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.




12 GOLD MEDAL
TO
Dr. S. PALANIYAPPA MUDALI.

அநேக
ஜட்ஜுகள்,
டாகடர்கள்,
வக்கீலகளால்
நற்சாக்ஷிகள் பெற்ற
டாக்டர்
S. P. மருந்துகள்.

# அமிர்தம்

## குடலைப்பற்றிய

## எல்லா வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தம், மயக்கம், பசியின்மை, சோகை, காமாலை, பாண்டு, வயிற்றுவலி, குன்மம், அரோசிகம், வெட்டை, பித்த வாய்வு, கபாலவாய்வு, மார்வலி, மண்டைஇடி, ஒத்தை தலைவலி, மேகம, வாதம், கீல்வாய்வு, ஓடுவாய்வு, கீல் பிடிப்பு, கீல் வீக்கம், முழங்கால் வாய்வு, சுவாசகாசம், பாரிச வாய்வு, மலபந்தம், மலச்சிக்கல், மூலாதார உஷ்ணம், மூல முளை, மூலத்தில் ரத்தம் விழுதல், நாள்பட எல்லா வியாதிகளையும் போக்கும். எல்லோரும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

குறிப்பு:—ஆபீசர்களுக்கும் அதிகமாய் உட்கார்ந்து வேலை செய்பவர்களுக்கும், அலைச்சல் உள்ளவர்களுக்கும், முக்கியமானது. அன்றாடம் மல நிவர்த்தி கிரமமாய் செய்து, தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும்.

ஒரு சேர் டின் விலை ரூபா 2—0—0 வி. பி. வேறு.

## தங்கரேக்

### மன்மத குளிகை.

20 நாள் சாப்பிட்டுப் பாருங்கள். இதன ஆச்சரியமான குணமும் பலமும தெரியும்.

பிரபுக்களுக்கென்றே தயாரித்தது

தங்கரேக், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ சேர்ந்தது. அபாரமான தாதுபுஷ்டியையும், நீடித்த சுகததையும் கொடுக்கும். தாது உடைதல், மேகவியாதி, நீர் அழிவைப் போக்கும். 20 நாள் உபயோகம் 40 குளிகை ரூபா 7-8-0. 10 நாள் 20 குளிகை ரூபா 4. வி. பி. வேறு.

## பிரமேக நிவாரணி.

வெள்ளை, நீர்க்கடுப்பு, இரத்த வெள்ளை, மஞ்சள் வெள்ளை, தந்தி வெள்ளை முதல் சகல வியாதிகளையும் மூன்று தினத்தில் குணப்படுத்தும். புட்டி 1க்கு ரூ. 2 வி. பி. வேறு.

## மகாமன்மத சிந்தாமணி லேகியம்.

தாது விர்த்தி, ஜீரண சக்தி, மனோ சக்தி, புத்தி கூர்மை, பரமானந்தமும் அளிக்கும்.

No. 1. சேர் டின் ரூ. 2—4—0 No. 2. ரூ. 1—8—0 வி. பி. வேறு. பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், நேட்டால், முதலிய அன்னிய நாட்டார் தபால் செலவு ரூ. 2-8-0 சேர்த்து முன்பணம் அனுப்பவும்.

முக்கியமான நற்சாக்ஷிகள்!! **TESTIMONIALS.** முக்கியமான நற்சாக்ஷிகள்!!

Dr. S. P. மருந்துகள் அநேகமாய் குணத்தைக் கொடுக்கிறது. மற்ற சில மருந்துகளைப்போல் எவ்வித கெடுதலும் செய்கிறதில்லை. அடியிற்கண்ட நாங்கள் Dr. S. P. மருந்துகளையே வாங்கி எல்லோரையும் உபயோகப்படுத்தும்படி சிபார்சு செய்கிறோம்.

ம-ா-ா-ஸ்ரீ ஸர். பி. எஸ். சிவசாமி அய்யர் அவர்கள், கே. சி. எஸ். ஐ. சி. ஐ. இ. மதராஸ்.
,, டி. ரங்காச்சாரியார் அவர்கள், ஹைகோர்ட்டு வக்கீல், மதராஸ்.
,, கே. இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், இளநகர்.
,, என். இராஜாக் கவுண்டர் அவர்கள், ஜமீன்தார், மானத்தி.
,, எஸ். எஸ். சுப்பையா கவுண்டர் அவர்கள், ஜமீன்தாா, முசிரி.
,, சி. எம். ரங்கராவ் அவர்கள், வக்கீல், நாமக்கல்.
,, வி. எஸ். சேதுராமராவ் அவர்கள், டாக்டர், நாமக்கல்.
,, எம். வீரப்ப பிள்ளை அவர்கள், மிராசுதார், தாலூக்கா போர்டு டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பரும் அண்டு யூனியன் சேர்மன், பாண்டமங்கலம்.

ம-ா-ா-ஸ்ரீ எ. கந்தசாமி பிள்ளை, போஸ்டு கிளார்க்கு, செரம்பான் F. M. S.
,, ஜோ. சிவராமய்யர், நேட்டிவ் டாக்டர், பாண்டமங்கலம்.
,, சபாபதி முதலியார், ஜோவலியம் அண்டு வைத்தியம், காட்டுப்புத்தூர்.
,, கே. ஆர். முத்துசாமி செட்டியார் அவர்கள், மிராசுதார், (யூனியன் சேர்மன், வேலூர்).
,, பழனி செட்டி, நேட்டிவ் டாக்டர், கோலாலம்பூர் F. M. S.
,, கே. வி. ரங்காச்சாரியார் அவர்கள், சப் ரிஜிஸ்டிரார், வேலூர்
,, சி. எஸ் வி. எஸ். சர்மா, போஸ்டு மாஸ்டர், வேட்டக்காரன் புதூர்.
,, எஸ். மகாலிங்க சர்மா, சுதேசமித்திரன் ஆபீஸ், மதராஸ்.
,, எஸ். சுப்புரத்னமய்யர், போஸ்டு கிளார்க்கு, வேலூர்.

**வள்ளி வைத்தியசாலை,**
வேலூர் போஸ்டு (சேலம் ஜில்லா)
Via புகலூர் (S. I. Ry.) S. India.

நமது பிராஞ்சு வைத்தியசாலை,
என். தண்டபாணி பிள்ளை, மானேஜர்,
நெ. 292, சைனாபஜார்ரோடு, மதராஸ்.

## செந்தமிழ் பயிலுவோருக்குத் தீஞ்சுவைப் பொக்கிஷம்!

## அருங்கலா விநோதருக்கு ஆராவமுது.

# அவ்வை அருந்தமிழ்.

வரகவி திரு. அ. சுப்ரமணிய பாரதி இயற்றியது.

தெய்வப் புலமை வாய்ந்த அவ்வையார் பாடிய சுவை மிகுந்த தனிப் பாடல்கள் யாவும் ஒருங்கு திரட்டப் பட்டு வெளிவருவது இதுவே முதன்முறை. ஒரு பாட்டேனும் இன்பம் விளையாமல் இராது. எல்லாம் நெட்டுருச் செய்யத்தக்கவை. இவற்றைக் கற்போர் தமிழ்ச் சுவையை இனிதுணர்வர். தமிழ்ப் புலவராக விரும்புவோரும் சபையில் உபந்யாசம் செய்வோரும் சல்லாப வல்லவர்களாகத் திகழ விழைகின்றவர்களும் இவற்றைக் கற்றால் அவர் எல்லாரா லும் விரும்பப்படுவர் என்பது உண்மை. இந்நூலை படிப்பவர் ஒரு சபையை ஒரு கணப்பொழுதில் அலங்கரித்து விடலாம். சோம்பி இருப்பவரை ஒரு செய்யுளைக் கொண்டு எழுப்பி உற்சாகப்படுத்தி விடலாம். இதில் யாவரும் கற்றுணர வேண்டிய பல நீதிமொழிகள் அடங்கியிருக்கின்றன.

## சில முக்கிய அபிப்பிராயங்கள்.

நவசக்தி..............."இந்நூலில் ஔவையார் பாடிய பாடல்கள் பலவும் ஒருங்கே திரட்டப்பட்டு, விரிவுரையுடனும், விசேஷ வியாக்கியானத்துடனும், தக்க மேற்கோள்களுடனும் வெளியிடப் பட்டிருக்கின்றன............ நீதிக் களஞ்சியம் என்று சொல்லப்பட வேண்டிய "ஔவை அருந்தமிழ்" என்னும் இந்நூல் ஒவ்வொரு மாணவரிடத்திலும், ஏன்? ஒவ்வொரு தமிழரிடத்திலும் இருக்கவேண்டு மென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்."

தமிழகம்..........."இந்நூலானது கற்றாரும், மற்றாரும், பெண்டிரும், பாலரும் பன்முறையும் பயிலத் தகுந்தது."

இந்து சாதனம்..........."இந்நூல் கற்குந்தோறும் களிபேருவகை பயக்கும் பான்மையது. அருந்தமிழ் அறிந்தோரொவ்வொருவரும் இவ்வரிய நூலை வாங்கிப் படிப்பது நலமாகும்."

**விலை அணா 12. தபாற்கூலி வேறு.**

# கந்தபுராணம். (வசனம்)

முருகப் பெருமான் திருவவதாரத்தைப் பற்றி உரைக்கும் நூல்கள் யாவற்றினும் சிறந்தது கந்த புராணமே ஆகும். அதுவே முருகவேள் வரலாற்றை முற்ற முடிய நவரசம் பொருந்த இனிய தமிழ்ச் செய்யுட்களால் சைவ சித்தாந்த நெறிதிறம்பாமல் கூறிச் செல்கின்றது. கந்த புராணத்தைச் சைவர் படனஞ் செய்தலோடு அமையாது பூசித்தும் வழிபாடு செய்கின்றனர். பிற சமயத்தாரும் முருகனை வழிபட்டும் அவன் அற்புத மான்மியம் நனி விளங்கும் திருப்புகழ்ப் பாடல்களை இசையுடன் ஓதியும் இன்புற்று வருகின்றனர். ஆதலால் கந்தன் அருமை பெருமைகளை அனைவரும் அறியவேண்டுவது இன்றியமையாததாரும். கந்த புராணம் செய்யுள் வடிவத்திலே பரந்து இருத்தலின் அதனைப் பயிலுவோர் இலக்கண இலக்கியப் பயிற்சி உடையவராக இருந்தால் அன்றி அது மிக்க பயன் விளைக்கமாட்டாதாகும். இப்போதுள்ள வசன நூல்களும் மிக விரிந்தும் செய்யுட்களின் போக்கைத் தழுவாமலும் எழுதப் பட்டிருக்கின்றன. இக்குறையெல்லாம் நீங்கும் பொருட்டும் கந்தர் சஷ்டிவிரதம் அனுட்டிப்போர் ஆறு நாட்களில் முழுதும் பாராயணம் செய்து முடித்துச் சித்தியடையும் பொருட்டும் பொருத்தமாக இந்நூல் தெள்ளிய இனிய செந்தமிழ் நடையிலே கந்தபுராணச் செய்யுட்களின் கருத்துக்களையும் முறைமையையும் தழுவிச் சுருக்கமாகத் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயத்து மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் மாணவர் வித்துவான் ஸ்ரீ. முத்துக்கிருஷ்ண ரெட்டியார் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைப் படிப்போர் மனமுருகி அன்புவயப்பட்டு முருகதாசர்களாக விளங்குவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அரிய நூலிலே கண்ணுக்கினிய திருவுருவப்படங்கள் சிலவற்றையும் சேர்த்திருக்கிறோம். இதனைப் பெண்பாலாரும், சிறுவரும், முதியோரும எளிதில் படித்து உணரலாகும். இது தமிழமுது பூத்துச் சைவசித்தாந்த நறுமணம் வீசி, பக்தித் தேன் சொட்டி ஞானங்கனிந்து நிற்றலைக் கண்டு அன்பர் களி துளும்புவார்களாக.

**ரப் பேப்பர் கலிக்கோ பைண்டு விலை ரூ. 2 0 0**

**கிளேஸ் பேப்பர் கலிக்கோ பைண்டு ,, ரூ. 2 8 0**

தபால்கூலி வேறு.

## கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனி,

**புத்தக வியாபாரிகள், திருவல்லிக்கேணி, சென்னை.**

---

குறிப்பு:—ஒரேதடவையில் கந்தபுராணம் வசனம் ஒன்றும் அவ்வை அருந்தமிழ் ஒன்றும் ஆர்டர் செய்தால் 14 அழகிய தேவதா படங்கள் அடங்கிய இந்துசமயக் காலண்டர் ஒன்று (எட்டணா விலையுள்ளது) இனாமாக சேர்த்து அனுப்பப்படும்.

6-ம் பக்கத் தொடர்ச்சி.

முற்காலத்தில் ராவணன் தன்னுடைய சுகளை அறுத்து யாகத்தில் ஹோமித்து டதனுல் கடவுள் பிரத்யட்சமாகி வேண் வரங்களை அளித்தார் என்று புராணங் ல் காண்கிறோம். யாகம் செய்வோர் வ்வண்ணம் தங்கள் சிரசுகளை வெட்டி கட ளுக்கு அர்ப்பணம் செய்தால் சீக்கிரத்தில் வுள் கருணை கிடைக்குமல்லவா? அங்ஙு செய்யாமல் ஒன்று மறியா பிராணி கடவுளின் பெயரால் என் கொலை புரி றார்கள்? இதுதான் சனுதன தர்மமா? வுளுக்கும் மகான்களுக்கும் மதத்திற்கும் ப்திகரமாயில்லாத இத்தகைய பாபச் யல்களை இக்காலத்திலும் செய்து வருகி கள். என்ன அநீதி! இதனுல் கடவுளின் ணையை தேடுவோர் குளிக்கபோய் சேற் பூசிக்கொள்வதை ஒத்திருக்கும் இதை , இதைப்போன்ற ஆபாசக் கிரியைகளை தான் "குடி அரசு" வேண்டாமென்று ால்வது. மதம் போச்சு என்று சொல் வண்டாம். மதத்தினிடம் பற்றுள்ள கள் இத்தகைய ஆபாசக்கொள்கைகளைக் ண்டித்து ஜனங்களின் சுயமரியாதையை ப்பாற்ற நல்வழியில் முயற்சி செய்பவே டும். அதற்கு சாத்திய மில்லை என்று நதுவோர், இத்தகைய ஆபாசங்களுக்கு தரவளிக்காமல் இருக்கவேண்டும். அது முடியாதென்றுல் மக்களின் முன்னேற் ற்தைக் கருதி உழைபபவர்களை எதிர்க்காம வது இருக்கவேண்டுமென்று கேட்டுக் ள்ளுகிறேன்.

## ஞ்சாயத்தாருக்குஓர்வேண்டுகோள்

நாகபட்டணம் தாலூகா அந்தணப்பேட்டை ாமத்தில் ஸ்ரீ அண்ணுமலைநாத சுவாமி கோவி க்கு பிர்ம உத்சவம் விபவ-ஸூ வைகாசி விசாக ல் நடைபெறப் போகிறபடியால்ஷை உத்சவ ல் முன்வருஷங்களைப்போல் தாசிகளைக்கொ டு கோலாட்டமும் சதுர்க் கச்சேரிகளும் வத்து பிராயணர்களுக்கும் இளம்பிராமணரெ று நினைத்திருக்கும் சிலருக்கும் வயிறுபுடைக்க ரியோதரை சர்க்கரைப் பொங்கலைக்கொடுத்து சி கச்சேரிகளை பார்த்துப்போகச் செய்யாமல் ல்லோரையும் சமமாக நடத்தவேணுமாய் டிரஸ் கள் கேட்டுக்கொள்ளப்படுகிறுர்கள்.

கணேச விலாச சபையார்,
அந்தணப்பேட்டை.

## அருப்புக் கோட்டை சாலியர் மகாநாடு.

சாலியர் மகாஜன சங்கம் முதலாவது மகா டு 1928 ஸு ஏப்ரல் மாதம் 29, 30 தேதி பவ வருஷம் சித்திரை மாதம் 17, 18 தேதி) ரில் மலையரசன் கோவில் ரோட்டிற்கு அருகா மயில் அமைத்திருக்கும் பந்தலில் நாகர் கோ ல் முனிசிபல் பிரசிடெண்ட் திருவாளர் ஏ. யனுர் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் டைபெறும்.

## சட்ட மெம்பருக்கு வாழ்த்து.

7-4-28 தேதி மாலை சேலத்தில் ஜுப்லி மண் பத்தில் சேலம் ஜில்லா போர்டு ராவ்பகதூர் ஸ். எல்லப்ப செட்டியார் அவர்கள் தலைமையில் சலம் பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று கூடி வான்பகதூர் எம் கிருஷ்ணன் நாயர் அவர்களை ட்ட மெம்பராகத் தெரிந்தெடுத்ததற்காக சென் ன கவர்னரவர்களைப் பாராட்டுவதாகவும் சட்ட மெம்பரை வாழ்த்துவதாகவும் தீர்மானித்தார்கள்.




ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கினவர்!
உலகப்பிரசித்திபெற்ற பரம்பரை வைத்தியர்!!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!!
அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும் நன்கு மதிக்கப் பட்டது. சகல வியாதிகளுக்கும் கைகண்ட

பழநி சி. எம். சாமி முதல் நெ.

# குருதாம்பர பஸ்பம்.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், ரணம், திமிர், சூலை, கிரந்தி, மதமதப்பு, பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். வி. பி. வேறு.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50
50 வேளை ரூ. 25. ஏழைகளுக்கு பாதி விலை.

என் கடையிலிருக்கக்கூடிய ஒரு பையனுக்கு 2, 3 வருஷமாயிருந்த குஷ்டரோகப் புண்கள் எல்லாம் தங்கள் குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாயிற்று.

K. K. பக்கிரி முகமது காப்பர் F. M. S. 12—8—27.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற பழநி சி. எம். சாமி,

## மன்மத கோலாகல குளிகை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இல் வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. 120 குளிகை விலை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி, சார்ஜ் வேறு.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.



## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைககப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறுர்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண ஏஜன்சி, 26 வெள்ளாளத்தெரு, வேப்பேரி மதராஸ.


## அரண்மனை சிறுவயலில் புது போஸ்டாபீஸ்

இவ்வூர் நகரத்தார்களின் நன் முயற்சியால் சென்ற ஒரு வருட காலமாக, இவ்வூரில் போஸ்டாபீஸ் எக்ஸ்பிரிமெண்டலாக நடந்து வந்தது. 1928 மார்ச்சு முதல் பிராஞ்சு போஸ்டாபீஸாக ஸ்திரமாகி நடை பெற்று வருகிறது. இனி எல்லா கரஸ்பாண்டன்ஸ்களும் இவ்வூர் போஸ்டுக்கே செய்துகொள்ளலாம். கிருபர்

கந்தசாமிபாளையம்

## போர்டு பாடசாலை ஆண்டு விழா.

8—4—28-ல புதன்கிழமை மாலை மூன்றரை மணிக்கு இப்பாடசாலையின் வருஷாந்திர விழாவும், பிள்ளைகளின் பரிசளிப்புக் கொண்டாட்டமும், பழயகோட்டை பட்டக்காரரும், ஈரோடுதாலூகா போர்டு பிரசிடெண்டுமான கனம் ராயபகதூர், ந. நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் அக்கிராசனத்தில் நடை பெற்றது.

## ஒரு வரவேற்புப் பத்திரம்.

மதுரை கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்தரார் ஸ்ரீ சி, டி நாயகம் அவர்கள் 25—4—28ல் திசையன் விளைக்கு விஜயஞ் செய்வதை முன்னிட்டு திசையன்விளை கூட்டுறவு யூனியனுர் அவர்களுக்கு வரவேற்புப்பத்திர மொன்று வாசித்துக்கொடுக்க வேண்டுமென்று 16—4—28 ல் கூடிய கவர்னிங்பாடி கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறுர்கள்.

காரியதரிசி.


விலை சரசம்! இனும்!! உறுதியானது!!!

கிளாஸ் பலவிதமான கலர் காலர் பொத்தான் ரூபாய் 1-க்கு டசன் 16. முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு தபால் கூலி இனும். ஒரு ரூபாய்க்கு குறைந்ததும் முன்பணம்அனுப்பாததுமான ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டது.

K. பாலய்ய செட்டி, ஷாப், நாகூர். S, I.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26-வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு

உலகமெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம்மருந்துகள் முதல்தரமான தேவ ஒளஷதங்களென்று 1923-ல் திருநெல்வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரன்சிலும் 25—8—23-ல் சென்னையில் நடந்த மேற்படி கான்பரன்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்கமெடலும் "வைத்திய ஆசிரியர்" என்ற பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துக்களுக்கும் கணக்கற்ற நற்சாக்ஷிப்பத்திரங்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில் காண்பன.

# தாளகபற்பம்.

## இருமலுக்கு அனுபவத்தில் கைகண்டது.

## உத்திரவாத முள்ளது. புகையாது.

நமது பற்பம் முப்புவால் செய்ததால் நெருப்புக்கு ஓடாது. மற்றவர்கள் பற்பத்தை நெருப்பில் வைத்தால் புகைந்து ஓடிவிடும்.

எவ்வளவு நாட்பட்ட ரத்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு, பீனிசம், ஜுரம் இருந்தாலும் சரி 8 வித காசமும் இதில் அவசியம் தீரும். 20-நாள் மருந்து அனுபான சூரணத்துடன் விலை ரூ. 25—0—0 ஏழைகளுக்கு ரூ. 12—8—0.

நற்சாக்ஷி:—நமது தாளகபஸ்பம் 6 நாளைக்குள் ரத்தகாசத்தால் உயிரைக் காப்பாற்றியதாக சொல்வதை கவனியுங்கள்.

நான் 8 மாதகாலமாய் ரத்தகாச வியாதியால் கஷ்டப்பட்டு ஒவ்வொரு நாளும் சாயந்திரம் 6 மணிக்கு இருமல் வந்துவிடும். ராத்திரிகளில் சாதம் சாப்பிட்டால் அதிக உபத்திரவத்துடன் வாந்தியாய்விடும். உடனே வீசம்படி ரத்தம் விழும். அதுமுதல் விடியும் வரைக்கும் இமைகொட்டும் நேரங்கூட இடைவிடாது இருமிக்கொண்டே கபம், கோழையாக வந்து வெளியேறிக்கொண்டே அழுகிய கோழி முட்டையைப்போல் துர்வாடையுடன் வரும். காலையில் பார்த்தால் ஒருபடி கடம் இருக்கும். தலை சாய்த்து தூங்கி 8 மாதம் ஆகிறது. சரீரம் நாளுக்குநாள் மெலிந்து விட்டது. நடக்க சக்தியில்லை. இந்த நிலையில் மதுரை ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடலாமென்று போனேன். நெல்மிஷன் செட்டியார் நான்படும் கஷ்டத்தைப்பார்த்து, தானும் இந்தப்படியே கஷ்டப்பட்டதாயும், தங்களுடைய தாளகபஸ்பம் சாப்பிட்டு சொஸ்தமடைந்ததாயும் சொல்லி தங்கள் விலாசத்தைக்கொடுத்தார். அந்தப்படியே தங்களுக்கு எழுதி 6 நாள் மருந்து சாப்பிட்டேன். ஏழாம்நாள் நல்ல எண்ணை தேய்த்து தலைமுழுகியதில் அந்த ராத்திரி நன்றாய் தூங்கினேன். ரத்தம் விழுவதும், இருமல், வாந்தி, கபம்விழுவதும், துர்வாடை வீசுவதும் அன்றே நின்றுவிட்டது. அதிலிருந்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். நல்ல பசி எடுக்கிறது. ஆகாரம் நன்றாய்ச் சாப்பிடுகிறேன். சரீரம் நல்ல திடத்துடன் நல்ல நிலைமையிலிருக்கிறேன். தூக்கம் நன்றாய் தூங்குகிறேன். இப்படியுள்ள வியாதியில் போன உயிரைக் காப்பாற்றிய மகான் யாரோ அவரை நேரில் போய் தரிசித்து நல்ல வாக்கு வாங்கிக்கொண்டுவா என்று இவ்விடத்திலுள்ளவர்கள் சொன்னார்கள். அந்தப்படி நான் நேரில் வந்து தரிசித்தேன். ப. வீரமலை செட்டியார், சிங்கம்பிடாரி, ராமநாட்: 10—12—24.

ஆஸ்தமா என்பது தீராத ரோகம். அப்படியுள்ள ரோகத்திற்கு நமது தாளபஸ்பம், வகையரா சேர்த்து 20-நாள் சாப்பிட்டு பூரண சொஸ்தமாகி புகழ்ந்து எழுதியதைக் கவனியுங்கள்:— அகண்ட பரிபூரண மண்டாலகார சர்வ பரிபூரண சச்சிதானந்த மயமாய் விளங்கும், கதிர் வேலுக்கு எதிர் வேலில்லை என்கிற வாக்கியம் தங்களுக்கே தகுதியானது. என் சம்சாரம், கமலத்தம்மாளுக்கு 10 வருஷகாலமாயிருந்த ஆஸ்தமா என்ற வியாதி தங்களுடைய மருந்தினாலும் பழனி ஆண்டவர் அருளாலும் மேற்படி வியாதி படாபஞ்சாக பறந்துவிட்டது. (அதாவது) சூரபத்மனுடைய சைமன்யங்களும், சிம்ம மகா சூரனென்ன, தாருகா சூரனென்ன, பானுகோப சூரனென்ன, இவர்களை தன் சக்தி வேலாயுதத்தினால் அந்த அசுரர்களை வென்று தேவர்களுக்கு அபயம் கொடுத்தார். அந்த வேலே நீங்கள் "தெய்வம் மானுஷி ரூபேண," என்கிற பிரகாரம் தங்களை தன்னுடைய அடிவாரத்தில், பக்தனாக வைத்துக்கொண்டு உலகப்பிரசித்தியாக்கி எங்களைப் போன்ற ஏழை எளியதுகளுக்கு தங்களை ஒரு சிரோரத்தினமாக வைத்திருக்கிறார். ஏதோ இப்படிக்கெல்லாம் ஸ்துதிசெய்து எழுதினேனென்று வருத்தப்படக்கூடாது. நான் பட்ட அவஸ்தை அந்த பகவானுக்குத்தான் தெரியும். தாங்கள் அந்த அவஸ்தையை நீக்கியதால் நான் ஆனந்த கடலில் மூழ்கி ஆனந்த கண்ணீர் பெருகி இந்த கடிதத்தை எழுதினேன். தங்களை தெய்வமாக நம்பியிருக்கிறேன். ஆர் கைலாச சாஸ்திரி, பிராமண சங்க உபாத்தியாயர், 38 தெரு, 29-ம் நெம்பர் வீடு, ரங்கூன். 15—7—26.

வைத்திய ஆசிரியர்,

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,** சித்த வைத்தியசாலை, பழனி.

தந்தி விலாசம் "சித்தர்" பழனி

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

நமது வைத்தியசாலை பழனியில் ஸ்தாபித்து 26–வருஷமாகிறது. பழனியில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டு உலக மெங்கும் நல்ல பேர் எடுத்த வைத்தியசாலை இதுவேயாகும்.

வைத்திய சாஸ்திரத்தில் மகாநிபுணர், முப்புவைக் கண்டுபிடித்தவர்.

ரிஜிஸ்டர்
TRADE MARK



இம் மருந்துகள் மூதல்தரமான தேவ ஒளஷதங்களென்று 1923-ல் திருநெல் வேலியில் கூடிய சித்தர் ஆயுள் வேத மெடிகல் கான்பரென்சிலும் 25-8-23-ல் சென்னை யில் நடந்த ஷை கான்பரென்ஸ் அண்டு எக்ஸிபிஷனிலும், தங்க மெடலும் "வைத்திய ஆசிரியர்" என்று பட்டமும் பெற்றவர். ஒவ்வொரு மருந்துகளுக்கும் கணக்கற்ற நற் சாக்ஷிப்பத்திரங்கள் வந்த வண்ணமாயிருக்கின்றன. அவற்றுள் சில அடியில்காண்பன

## தாதுபுஷ்டியில் மன்மதனுக் கொப்பாவர்.

பலனில்லாவிடில் பணத்தை திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப் பருவத்தை அடைய வேண்டுமானல்,

பழனி ஆர். எம். கே.

# தங்க பஸ்பம்

## நரசிங்க லேகியத்தில் சாப்பிடுங்கள்.

இது ஒரு கற்பத்திற்கு சமானமானது. உலகப்பிரசித்தி பெற்றுவிட்டது.

தாது புஷ்டிக்கு இதற்கு நிகரான மருந்து ஒன்றுமேயில்லை! இது பிரபுக்கள் சாப்பிடவேண்டிய மருந்து! மற்றவர்கள் சாப்பிட்டு தாங்கமுடியாது.

இதிலமைந்திருக்கும் ஓர் அபூர்வசக்தி உபயோகித்தவர்களுக்குத்தான் இதனருமை தெரியும். இதைக் காலை மாலை நோய்பலம்போல் 1, மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும், பலத்தையும் கொடுத்து இழந்து போன ஆண்மைத்தனம முழுமையும் திரும்பிவரும்படி செய்கிறது. இக்குணம் இதிலமைந்திருப்பது மகா ஆச்சரியமாயிரு க்கிறது. இப்படியும் ஒரு மருந்துண்டாவென்று பிரமிக்கச்செய்கிறது. தாதை கட்டுவதில் அபாரசக்தி வாய்ந்தது. இதின் பெருமையை எழுதி முடியாது. நீரிழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக் கட்டு, குஷ்டம், சூலை, கிரந்தி, கருமேகம, செம்மேகம், வெள்ளை, வெட்டை, கடுப்பு, எரிச்சல், மூலம், பவுத்திரம் சகலவித கர்ம வியாதிகளையும் நிவர்த்தி செய்து, தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதமில்லை. பத்தியமில்லை: 100 நாளைக்கு தங்க பஸ்பமும், நரசிங்க லேகியமும் ரூபாய் 100. 50 நாளைக்கு ரூபாய் 50. 25 நாளைக்கு ரூபாய் 25.

மேகரோகம் கொடிய வியாதியில்லாதவர்கள் தாதுபுஷ்டி சரீரதிடம் அடைய தங்கபற்பத்தை அனுபானம் மகா மன்மத கேசரி அல்வாவில் சாப்பிடவும். காமகேசரி அல்வாவும் தங்கபற்பமும் 100 நாள் மருந்து ரூபாய் 50. 50 நாளைக்கு ரூபாய் 25. 25 நாளைக்கு ரூபாய் 12—8—0.

நற்சாக்ஷி:— 1-9-24ல் கோலாசெலங்கர் டிஸ்டிரிக்ட் ஹாஸ்பிடல் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் நமது தங்க பஸ்பத்தைப் பற்றி புகழ்வதை கவனியுங்கள்:— அன்பார்ந்த வைத்திய ஆசிரியர் ஆர். எம். வேலுசாமி பிள்ளை அவர்களுக்கு அதிக பக்தி யுடண் எழுதுவது யாதெனில், தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் இரு நோயாளருக்கு 50 நாட்களாக கொடுக்கப்பட் டது. இருவரும் தங்கள் குறைகள் நீங்கி நல்ல சவுகரியத்துடனிருக்கிறார்கள். தாங்கள் அருமையாகச்செய்த பஸ்பமும், லேகியமும் யாவராலும் கொண்டாடத்தக்கதே. இன்னும் 100 நாளைக்கு தங்க பஸ்பமும், சாலாமிசிரி அல்வாவும் ரூபாய் 50 க்கு வி. பி. செய்பவும். ஷை டாக்டர் அவர்களே 19-1-25ல் எழுதுவதை கவனியுங்கள்:— தங்களின் அருமையும் பெருமை யுமான தங்க பஸ்பமும், சாலாமிசிரி லேகியமும் எனது நோயாளி ஒருவருக்குகொடுத்தேன். அவரின் எத்தனையோ விதமான நோய்கள் பஞ்சுபோல் பறந்து போய்விட்டது. இப்போது அவர் நல்ல திடதேகியாயிருக்கிறார். ஆகையால், அடியிற்கண்ட மருந்துகளை அனுப்பவும். தாம்பர பஸ்பம் 80—வெளை தாளிசபத்திரி சூரணம் 40-வேளை ஒருமாதம் சாப்பிடக்கூடிய நரசிங்க லேகியம், தங்க பஸ்பம் ரூபாய் 50. செலவு ரூபாய் 2. ஆக ரூபாய் 97-க்கு வி. பி, செய்யவும்.

ஷை டாக்டர் அவர்களே 2-6-25-ல் எழுதுவதை கவனியுங்கள்:— ஸ்ரீமான் வைத்திய ஆசிரியரவர்களுக்கு தங்க ளின் மருந்துகள்யாவும் நோயாளர் யாவருக்கும் சுகத்தையும், மனத்திருப்தியையும் கொடுத்திருக்கின்றது. தங்கள் மருந்து களின் அருமையையும், பெருமையையும் நான் அனேகருக்கு அனுபோக அத்தாக்ஷியுடன் எடுத்துக் காட்டியிருக்கிறேன், தங்கள் மருந்துகளுக்கு சர்டிபிகேட் தேவையில்லை. மருந்துகள் தாமே தங்கள் பெயரை எங்கும் விளங்கச்செய்கின்றது. ஆகையால் தாம்பர பஸ்பம், நரசிங்க லேகியம், பவள பஸ்பம் இவைகளை வி. பி. செய்யவும். (ரூபாய் 238-க்கு வி. பி. பார்சலில் அனுப்பியிருக்கிறது) P- Nagalingan Hospital C/o Disrict Hospital Kualaselenger.

வைத்திய ஆசிரியர்,

**ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை,**

சித்த வைத்தியசாலை, பழனி

தந்தி விலாசம்:— "சித்தர்" பழனி.

நமது பிராஞ்சு வைத்தியசாலை 29, பிராட்வே மதராஸ்.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

டத்துக்கு இடமில்லை. மனைவிக்கு முதலாவது மாசியம் ஏற்படுவதற்குள் கணவனுக்கு நிச்சய தாம்பூலம். மணமகன் காலகதியடையும் பட்சத்தில்பெண்ணுக்கு இருக்கும்படியான கஷ்டங்களை யாம் எடுத்துச் சொல்வது அனவசியம். என்று அவள் புருஷன் இறந்தானே அன்று தொட்டே அவள் மரணபரியந்தம் அவள் நடையுடை முதலிய எல்லா விதமும் பிறராலும் அவள் இனத்தாராலும் தூஷிக்கப்படுவது விந்தையிலும் விந்தையே. சீக்கிரத்தில் அவளுக்கு மரணம் வருதலே ஒரு வித ஆறுதல். அதுவன்றி துன்பம் சகியாமல் தற்கொலை செய்து கொண்டிறந்தாலும் சும்மா விடுவதில்லை. எவ்விதமெனில், நால்வர்கள் கூடிய நாற்சந்தியிலோ பொழுது போக்கும் வெற்றிடத்திலோ "அவள் இறந்து விட்டாளாமே. என்ன காரணம் பற்றி! ஏதோ பிசகு நடந்திருக்கவேண்டும். அதனால் தான் அவள் அவ்விதம் செய்யும்படி நேர்ந்தது. இல்லையெனில் இவ்வளவு நாளிருந்தது போலிராமல், இப்போது மாத்திரம் ஏன் இவ்விதம் செய்து கொண்டாள்" என்று காலஞ் சென்றவள் பேரில் கூட அவதூறு வைத்து அவர்கள் அபிப்பிராயத்தைப் பூர்த்தி செய்கிறார்களே யல்லது மரணத்துக்குப் பிறகாவது தூஷியாமல் விடுவோமென்ற எண்ணம் அவர்களுக்கு வராத காரணம் ஆச்சரியமே. இவைகளை யோசிக்குங்கால் முற்காலத்தில் இருந்த-புருஷன் கூடவே உடன் கட்டை யேறுகிறது என்ற வொரு-வழக்கம் இப்பொழுது நடக்கும் கொடுமைகளைவிட நலமென்றுகூட தோன்றுகிறது ஆண்மகனிறந்துபோனால் அவன் மனைவியை அவனுடைன் கூடவைத்து உயிருடன் கொளுத்தியிருக்கிறார்களே யொழிய சம்சாரமிழந்த ஒருவனை எவ்விதமான துன்பத்தை யனுபவிக்கும்படி செய்தார்களோ—இதுபரியந்தம் எனக்குத் தெரியவில்லை. யோசித்துப் பார்த்தால் சாவு எல்லாருக்கும் பொதுவே. ஆண், பெண், குழந்தை எல்லோருக்கும் கால நிர்ணயமில்லாமல் மரணம வந்து கொண்டிருக்கிறது. இவைகளைத் தீர்க்காலோசனை செய்து ஒருவித முடிவை சீழ்கிரத்தில அனுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டுமென்பது இன்றியமையாததோர் விஷயமே

(தொடரும்)

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

களைப் போல் படுசூரணமாய் மறைவதாலும் இக்காலத்தில் மேற்றிசையில் மதக்கட்டுப்பாட்டை யனுசரிப்பது மந்த புத்தியுள்ளவர்கள் இயல்பெனக் கருதுகிறதாலும் நாமும் சித் அசித் என்னும் தத்துவம் தவிர நம்மை அடிமை கொண்டு எல்லா விதத்திலும் துன்புறுத்தும் மூடக்கொள்கைகள் அனைத்தையும் தொலைக்க 'குடி அரசு' பாடுபடுகையில் படித்தவர்களான நீங்கள் அதற்கு உதவி செய்யாவிட்டாலும் எவ்வளவு பெரிய தாண்டுதலிருந்தாலும் குறுக்கே வருவதை நிறுத்தி தென்தேசத்தின் கொடுமையைக் கவனியுங்கள்.

---

## பாபவிநாசம் மருத்துவர் கூட்டம்.

8—4—28ல் திரு. பி. சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் கூடி பொருளாதார விஷயத்தில் முன்னேற்றமும் சுயமரியாதையும் அடைய தக்கபிரசாரம் செய்ய வேண்டுமென்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமத்துவமான கல்வி போதிக்க வேண்டுமென்றும் பெண்கள் நகைப்பைத்தியத்தைஒழித்து குணத்தாலும் செய்கையாலும் விளங்க வேண்டு மென்றும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை எந்த இழிதொழிலும் செய்ய விடக் கூடாது என்றும் சகோதர சகோதரிகள் 'குடி அரசு' 'திராவிடன' முதலிய சுயமரியாதை பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டு மென்றும் பேசி தீர்மானித்தது.


வியாபாரிகளே! கவனியுங்கள்!!

வியாபாரத்தின் நிலைமையை அடிக்கடி அறிந்து லாபகரமான வழியைத்தெரிந்து அவ்வழியில் தொழிலை நடத்துவதினாலேயே வியாபாரம் ஓங்கி வளரும்.

**லாபகரமான வழியை அறிவதெப்படி?**

உங்கள் தொழிலுக்குத் தகுந்தாப்போல் சரியான கணக்குகள் வையுங்கள்

உங்களுடைய கணக்கு முறைகளை ஒழுங்காக வைத்துக்கொள்வதற்காக

**வர்த்தகக்கணித நூல்**

என்ற புதிதாக வெளிவந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்

ஒரு தரம் பார்த்தவுடனேயே நமக்கு வரவேண்டிய தெவ்வளவு, நாம் கொடுக்க வேண்டியதெவ்வளவு, லாப நஷ்டமெவ்வளவு, முதல் தொகை எவ்வளவு வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிறது, எவ்விதமான தொழில் லாபத்தைக்கொடுக்கிறது என்று சலபமாகப் பிறருடைய உதவியில்லாமலே ஆங்கிலேயர் எப்படித் தெரிந்து கொள்ளுகிறார்களோ அதே முறையில்தான் இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், எல்லா வியாபாரிகளும் எவ்விதமான தொழிலுக்கும் மேற்படி புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படி கணக்குகள் வைத்துக்கொள்ளலாம். படிப்பதற்குக் கஷ்டமில்லாதபடி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ 2

**வாசன் புஸ்தகசாலை.** நெ. 244, தங்கசாலை வீதி, தபாற் பெட்டி நெ. 119, சென்னை

**மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd**

**ஷேர் 1-க்கு ரூ. 10.**

தயவு செய்து மேற்படி கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

**மனோவசிய ரகசிய சாஸ்திரம்.**

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவனைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வசப்படுத்தல், தூர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பானுமதி புஸ்தகசாலை, சூளை போஸ்டு, மதராஸ்.

**திரிமூர்த்தி உண்மை**

அல்லது

**தேவர்களின் இரகசியம்**

முழு முதற் கடவுள் மூன்றாகி, மூன்று முப்பத்திமூன்று கோடியாக பெருகின அற்புத இரகசியத்தை அறிய விரும்பாதவரும் உண்டோ? தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத அற்புத நூல். சத்தியார்த்தப் பிரகாச ஆசிரியர் ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதன் எழுதினது.

**சூடன் அண்டு கோ.,** 14, பள்ளித் தெரு, சௌகார்பேட்டை, சென்னை

# என். தண்டபாணி அண்டு கம்பெனி.

## நம்பிக்கையான வர்த்தக ஸ்தலம்.

இங்கே கதர்த்துணிகள், சகலவித புத்தகங்கள், மருந்துகள், ஷாப் சாமான்கள் முதலியன எல்லாம் நயமாயும் நல்லதாயும் கிடைக்கும். தேவைக்கு எழுதுங்கள்

(திருப்தி இல்லாத சாமான்கள் திரும்ப வாபீஸ் பெற்றுக்கொள்ளப்படும்.)

குறிப்பு:—புத்தகங்களைத் தவிர்த்த மற்ற சாமான்களுக்கு ரூ 100க்கு 25 வீதம் முன் பணம் அனுப்புதல்வேண்டும்.

விலாசம்:—என். தண்டபாணி பிள்ளை, தபாற் பெட்டி 292, சைனுபஜார், கெ. 292, மதறாஸ்



## இனும்! இனும்!

## ஸில்க் அங்க வஸ்திரம்.

### பிரைஸ் சீட்டு.

என்ற இந்த சீட்டை ரூபாய் 1 விலைகொடுத்து வாங்கினவர்களுக்கு ஒரு ரூபாய் விலையுள்ள 5 சீட்டு அனுப்பப்படும். டி சீட்டு 5-ம் விற்று ரூபாய் 4-ம் சீட்டின் டுப்ளிகேட்டும் அனுப்பினவர்களுக்கு 4 ரூபாய் பொறுமான ஒரு சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் இனும் அனுப்பப்படும். நண்பர்களே, கவனியுங்கள். டி சீட்டு 5-ம் விற்று தாங்கள் கொடுத்த ரூபாய் ஒன்றும் எடுத்துககொண்டு மீதம் ரூபாய் நாலும் எங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே தாங்களுக்கு ஒரு நஷ்டமுமின்றி சிறந்த ஸில்க் அங்கவஸ்திரம் கிடைக்க உழைப்பிற்கு உத்தரவாதமுள்ளது இனும் கிடைப்பதை கவனியுங்கள். எட்டணா ஸ்டாம்புடன் இன்றே எழுதவும். 'ஜவுளி கேட்லாக் இனும்' மானேஜர்,

எம். ஆர். வீவிங் பாக்டரி,
கோட்டார், திருவாங்கூர்.



## ஆநந்த குணபோதினி.

### இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை' இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## குளிர்ச்சிபெற நேர்வழி.

தைலங்களுக்கெல்லாம் முதல்தரமானது, தேகத்திலுள்ள சூட்டைத் தணிப்பதில் நிகரற்றது. ஒரு முறை பரீக்ஷித்தால் அடிக்கடி இதனை வாங்கி ஆனந்தமடைவீர்கள்.

அயன்மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

3 மீ வரை வரக்கூடிய அளவு டின் 1-க்கு ரூ. 1—8—0. தபால் சிலவு 0—10—0. கியாட்லாக் இனும்.

விலாசம்:—

சத்தியவேத வைத்தியசாலை,
வரகனேரி, நே. 51, திருச்சி.



ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

## மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால் பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.



மூன்றாவது வருஷம்! மூன்றாவது வருஷம்!!

தமிழ் மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றதும், பல்லாயிரக்கணக்கான சந்தாதார்களுடையதும், தமிழ் தலைவர்கள் எல்லோரும் போற்றி வருவதுமான

# ஆனந்த விகடன்

இதற்கு மூன்றாம் வருஷம் பிறந்து விட்டது. இப்பத்திரிகையில் நன்மதிப்பு நம்நாட்டு ஜனங்களிடம் நன்கு பதிந்து விட்டபடியால் புகழ்ச்சியாக நாம் ஒன்றும் கூறத் தேவையில்லை. இவ்விரண்டு வருஷங்களாக இதற்கு வருஷ சந்தா 2 ரூபாயாக இருந்தது. இந்த வருஷத்திலிருந்து இதை ஏழை முதல் எல்லோரும் படிக்கவேண்டுமென்ற கருத்துடன் ஒரு ரூபாயாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதில் மாதா மாதம் பல பெரிய மேதாவிகளால் எழுதப்படும் அரிய கட்டுரைகள் வெளிவரும். தேச நன்மைக்காகவும், தமிழரின் சுயமதிப்புக்காககவும் அரும்பாடுபட்டு எவருக்கும் அஞ்சாமல் தனது அபிப்பிராயத்தை சுயமே வெளியிடும் தமிழ் மாதப் பத்திரிகை இது ஒன்றேயாகும் இன்னும் விநோதமான விஷயங்களும், விகடப்பேச்சுகளும், வாழ்க்கையின் மர்மங்களும், வியாபாரக்குறிப்புகளும், வைத்திய விவசாயாதிகளும் அனுபவசாலிகளால் வரையப்பட்டு இப்பத்திரிகையில் இடங்கொள்கின்றன

### சற்று ஆலோசித்து முடிவு செய்யுங்கள்.

பிரதி மாதமும் 48 பாகங்களுடன் அடக்கமாய்ப் புஸ்தகம் போன்று வெளிவரும் இந்த உயர்வான செந்தமிழ்ப் பத்திரிகைக்கு வருஷ சந்தா ரூபாய் ஒன்று தான் என்பதை யோசிப்பீர்களானால், லாபங்கருதி இப்பத்திரிகை அச்சிடப் படுகிறதில்லை யென்பதும் தமிழ் நாடெங்கும் இப்பத்திரிகை உலாவ வேண்டுமென்ற பரோபகார எண்ணத்துடனேயே இது வெளிவருகிறதென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும். இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வருட சந்தா தபால் கூலியுள்படரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0.

மாதிரி காப்பி இனும்!

விலாசம்:— "ஆனந்த விகடன்" ஆபீஸ்,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:— "விகடன்" சென்னை. டெலிபோன் 3311.

# குடும்பத்துக்கோர் பொக்கிஷம்.

சில மாதங்களுக்குள்

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்"

11,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன. ஒருவர் வாங்கிப படித்தால் அவர் தம் நண்பர்கள் யெல்லோரையும் வாங்கும்படி த்தூண்டுகிறார். எனவே இப்புத்தகத்திற்கு உள்ள மதிப்பை நாங்கள் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

## இல்வாழ்வை நல் வாழ்வாக

நடத்த உத்தேசிக்கும் ஸ்திரீ புருஷர்கள் கையில் இந்நூலின் பிரதி யொன்று இருந்தே தீரவேண்டும்.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

## மூன்றாம் பதிப்பு விலை ரூ. 2.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள புஸ்தக வியாபாரியிடமும் கிடைக்கும். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறுகிறீர்கள். புஸ்தகத்தின் பேரில் "வாசன் புஸ்தகசாலை" என்ற பெயர் இருக்கிறதாவென்று பார்த்து வாங்குங்கள்.

எமதுவிலாசம்:—

## வாஸன் புஸ்தகசாலை,

244 தங்கசாலை வீதி, தபால் பெட்டி 119, மதறாஸ்.





## 'சேலம் மாம்பழம்'

விற்பனைக்கு தயாராகிவிட்டது, விலை சரசம்.

தினசரி மார்க்கட் நிலவரத்திற்கு என்னுடைய நேர்த்த பார்வையின்மேல் பொறுக்கி எடுத்து ஜாக்கிறதையாய் பாக் செய்தனுப்பப்படும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.

செடிகள், விதைகள் கெட்லாக் இனாம்.

ச. கோ. இ. காதர்மீரு சாயபு,

ஹோட்டர்சரி அண்டு பழவியாபாரம், சேலம்.

தந்தி விலாசம்:— "ஸ்டோர்," சேலம்.



## பனி! பனி! பனி!

நுனிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் | ரூ. 15. |
| 2. | „ | „ | 12. |
| 3. | „ | „ | 10. |
| 4. | 5 „ | 2½ „ | 8. |

| | | | |
|---|---|---|---|
| கம்பளித் தொப்பி நெ. | 1 | உருப்படி 1-க்கு | 3-8-0 |
| ஷை. | 2 | ஷை. | 2-8-0 |
| „ | 3 | „ | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.



## ஞான திருஷ்டி.

இப்புத்தகத்தில் இறந்தவர்களுடன் பேசுதல், காணாமல் போனதைக் கண்டெடுத்தல், இருக்குமிடமிருந்தே நானா தேசங்களைப் பார்த்தல், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறிதல் முதலியன எழுதப்பட்டுள்ளன. "ஞான திருஷ்டிக் கண்ணாடி" என்னும் உபயோகிக்கும் கருவியுடன் விலை ரூ. 1—8—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும். ஆரியன் ஸைகிக் இன்ஸ்டிட்யூட், சௌகார்பேட்டை, மதராஸ்.



9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் -(ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலிஷ கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், நேராற்றதும், நற்றியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரு. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—3—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதறாஸ்





பார்ப்பனீயம் ஒழிய

குடி அரசையும், திராவிடனையும் படியுங்கள்.